# பொருளியல் நோக்கு

ஜூலை 1980




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காரீயச் சுரங்கங்கள்


நில மட்டத்துக்கு பல நூறு அடிகள் கீழே இருண்ட குகை[illegible]ில் உழைத்து வரும் சுரங்கத் தொழிலாளரின் வாழ்க்கை [illegible]லமும், அபாயமும் சூழ்ந்ததொன்றாகும். பத்[illegible]தாம் நூற்றாண்டு இலங்கையின் காரீயச் சுரங்க வாழ்க்கை, ஒழுகும் நீர், உடைந்து விழும் பாறை[illegible]யங்கரமான வெடி மருந்துகள் போன்றன மலிந்த ஓர் உயிராபத்தான சூழலில் எவ்விதப் பாது காப்புமற்ற, ஈரலிப்பான காற்றோட்டமில்லாத குகைகளில் கழிந்து [illegible]ன்றது.


ஜனரஞ்சகமான நாட்டார் பாடலொன்று இந்த வாழ்க்கையின் துயரத்தையும், அவலத்தையும் உயிரோட்டத்துடன் சித்தரிப்பதாக இருக்கிறது.


ஈமபறையின் இப்பெரும் பாறையின் கீழ்
எமது வாழ்நாட்கள் கழிகின்றன
கருவாட்டுடன் புழுங்கலரிசிச் சோற்றைத்தின்று
கலங்கிய நீரைக் குடித்து ........
எந்த விதி எம்மை அள்ளிச் செல்கிறதோ.........
தாய் தந்தையரைக் காணும் நாளும் எந்நாளோ

இலங்கையின் சமகாலச் சுரங்கங்களில் புதியதொழில் நுட்பங்கள் புகுத்தப்பட்டதை அடுத்து சுரங்க வாழ்க்கை முன்னரைவிட அபாய ஏதுக்கள் குறைந்ததாக மாறி வருவதை இப்பக்கத்திலுள்ள படங்கள் காட்டுகின்றன.








மேல் வலது மூலையிலிருக்கும் படம் சுரங்கத் தொழில் பாஷையில் 'கல் தோணுவ' (குறுக்குவெட்டு) என்றழைக்கப்படும் பாறையொன்றின் ஊடாக வெட்டப்பட்ட நீள்முக குகை வழியைக் காட்டுகிறது.

நடுவிலுள்ள படம் போகல சுரங்க வாயிலைக் காட்டுகிறது. தள்ளு வண்டி மூலம் நில மட்டத்துக்கு கொண்டுவரப்பட்ட காரீயம் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகிறது.

(இடது புறம்) செங்குத்தான சுரங்கப் பாதை. தொழிலாளரையும், பொருள்களையும் எடுத்துச் செல்லும் வண்டிப் பாதையையும் படத்தில் காணலாம்.

(வலது புறம்) றங்கலைச் சுரங்கத்தில் வழிப் பாதை அமைப்பதில் ஈடுபட்டிருக்கும் மரத்தொழிலாளர்.

இப்பக்கத்திலிருக்கும் புற உருவப் படம் நாட்டில் காரியப்படிவுகளினதும், சுரங்கங்களினதும் பரவலை எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 6 இதழ் 4 ஜூலை 1980

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 851

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

நிரல்கள்

2 நிகழ்ச்சிக்குறிப்பேடு: மே—ஜூன் 1980

23 வர்த்தகம்: இறக்குமதிச் செலவு அதிகரிக்கிறது.

24 விஞ்ஞானமும் சமூகமும்: ஐ. நா. அபிவிருத்திக்கான விஞ்ஞான தொழில் நுட்ப மாநாடு

## விசேஷ அறிக்கை

3 இலங்கையின் காரீயக் கைத்தொழில்

## சிறப்புக் கட்டுரைகள்

துலிப் ஜயவர்தன 8 இலங்கையின் காரீயப் படிவுகள்

முஸ்தபா மஸ்மௌதி 26 புதிய உலகின் தகவல் ஒழுங்கு —மூன்றாவது உலகிலிருந்து ஒரு கண்ணோட்டம்

டீ. ஆர். மங்கேகார் 28 நவீன தொடர்பு சாதன முறைகள் —பிரச்சினைகளும் விருத்தி வாய்ப்புக்களும்

## அடுத்த இதழில்

- தயாரிக்கப்பட்ட ஆடைக் கைத்தொழில்—தற்போதைய பிரச்சினைகளும் எதிர்கால வாய்ப்புக்களும்
- இரத்தினக்கல் பொது ஏல விற்பனைகள்
- இலங்கை மீன்பிடித்தொழிலின் போக்குகள்
- கடல் கடந்த வங்கிச்சேவை நிலையங்கள்

## அட்டைப் படம்

வேலையில் ஈடுபட்டிருக்கும் சுரங்கத் தொழிலாளர். அரச சுரங்க மகழ்வு கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் உதவியால் பெறப்பட்ட இப்படத்தை வடிவமைத்துத் தருபவர் பாலித்த கன்னங்கரா.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

## மே

1 இலங்கையின் ஜனாதிபதி தேச மக்களுக்கு விடுத்த பேதினச் செய்தியில், மனநிறைவடைந்த தொழிலாளர் வர்க்கமொன்றை உருவாக்கும் பொருட்டு தொழிற் சங்க இயக்கத்தை வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், தொழிலாளரின் நியாயமான உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் இது மேலும் அவசியமாகின்றது என்றும் குறிப்பிட்டார்.

சென்ற வருட இறுதியில் சீனாவின் ஜனத்தொகை 97 கோடியே 9 லட்சத்து இருபதினாயிரமாக இருந்தது; இது 1978ம் ஆண்டைவிட 1 கோடியே 28 லட்சம் அதிகமானது என பீக்கிங் புள்ளிவிவர நிறுவன அறிக்கையொன்று கூறுகிறது.

6 கொழும்பு தேயிலே ஏல விற்பனைகளுக்கு 22 லட்சத்து 90 ஆயிரம் கிலோ கிராம் தேயிலே விடப்பட்டது; 1977 ஆகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் ஏலத்துக்கு விடப்பட்ட மிகக் குறைந்த தொகை இதுவாகும்.

7 அவுன்ஸ் ஒன்று 504.90 டொலர் வீதம் ச. நா. நி-443,200 அவுன்ஸ்தங்கத்தை ஏலத்தில் விட்டது; இது ச. நா. நி.யின் கடைசி தங்க ஏல விற்பனை என 'எகனமிஸ்ட்' சஞ்சிகை தெரிவித்தது.

10 மக்கள் வங்கியின் 250வது கிளை பதுளை மாவட்டத்திலுள்ள கந்தகட்டியாவில் நிதியமைச்சரினல் திறந்து வைக்கப்பட்டது.

11 நெல் உற்பத்திச் செலவுகள் இரட்டிப்பாகியிருப்பதாக விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சர் அரசாங்கத்துக்குத் தெரிவித்தார். அரசாங்கம் நெல் விவசாயிகளுக்கு சில சலுகைகளை வழங்குமென்றும் குறிப்பிட்ட சில உள்ளீடுகளுக்கு அதிகரித்த மானியம் வழங்குவது சம்பந்தமாக கவனஞ் செலுத்தப்படும் என்றும் அவரது அறிக்கை மேலும் தெரிவித்தது.

இலங்கை கப்பற் போக்குவரத்து கூட்டுத்தாபனத்துக்குத் தேவையான 7 புதிய கப்பல்களைக் கட்டுவதற்காக 7.2 கோடி டொலர் பெறுமதியான ஒப்பந்தமொன்று ஆர்ஜன்டீனவையும், தென் கொரியாவையும் சேர்ந்த இரு கப்பல் கட்டும் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகைச் செய்தியொன்று கூறியது.

12 கொழும்பில் அமைந்திருக்கும் இந்தியன் வங்கியில் வெளிநாட்டு நாணய வங்கி அலகொன்றினைத் திறந்து வைத்துப் பேசிய நிதியமைச்சர், இலங்கையை முற்று முழுதான கடல் கடந்த வங்கிச் சேவை நிலையமொன்றாகவும் சர்வதேச நிதிக்கேந்திரமாகவும் மாற்றியமைப்பதே அரசாங்கத்தின் அபிலாசை எனத் தெரிவித்தார்.

13 (இரண்டு மாத நுகர்வுக்குத் தேவைப்படும்) 40,000 தொன் சீனியை தொன் ஒன்று 700 அமெரிக்க டொலர் வீதம் வழங்குவதற்கான கேள்விப்பத்திரத்துக்கு உணவுத் திணைக்களம் இணக்கம் தெரிவித்தது. இவ்வருடம் மார்ச் மாதத்தில் இறுதியாக கொள்வனவு செய்யப்பட்ட சீனிக்கு தொன் ஒன்று 523 டொலர் வீதம் விலே செலுத்தப்பட்டது என 'ஈவினிங் ஒப்சர்வர்' பத்திரிகைச் செய்தியொன்று கூறியது.

14 மின் உற்பத்தி, கடத்துதல் இயக்குதல், பராமரிப்பு போன்றவற்றுக்கான செலவுகள் பெருமளவில் அதிகரித்திருப்பதனல் தற்போதைய மின்சாரக் கட்டணங்கள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும் என்ற சக்தி, வலு அமைச்சரின் முன்மொழிவை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

15 இலங்கைக்குள் வரும் முதலாவது சீன வங்கியான ஹொங் கொங் ஓவர்சீஸ் டிரஸ்ட் பேங்க் லிமிட்டட் கொழும்பில் ஒரு கிளையைத் திறந்து வைத்தது.

மே 15ம் திகதி அறிவிக்கப்பட்ட சீனிப்பங்கீட்டு முறைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதென்றும், 19ம் திகதியிலிருந்து ஒரு இறுத்தல் 6 ரூபா வீதம் தாராளமாக சீனி விநியோகிக்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்தது.

19 மே 22ம் திகதியிலிருந்து ஐரோப்பிய பொதுச் சந்தை ஈரானுக்கு எதிரான வர்த்தகத் தடையொன்றை விதிக்குமென நேப்பிள்சிலிருந்து வெளியான அறிக்கையொன்று கூறியது.

20 திறமையான முகாமை வசதி கருதியும், பொது மக்களுக்குச் சிறந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் பொருட்டும் போக்குவரத்துச் சபைகளுக்கென ஒரு தனி அமைச்சு தோற்றுவிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது.

21 தகுதியானவர்கள் எனக் கருதப்பட்ட 30,000 பேரிலிருந்து இலங்கையின் 6 பல்கலைக்கழகங்களுக்கும் 5000 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்களென உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

பீஎல் 480ன் கீழ் 10 கோடியே 54 லட்சம் ரூபா பெறுமதியான 38,000 தொன் மேலதிக கோதுமையை இலங்கைக்கு வழங்குவதற்கான உடன்படிக்கைக்கு ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் கைச்சாத்திட்டன. 1979—80க்கான ஒப்பந்தம் இலங்கைக்கு 2.5 கோடி டொலரை வழங்குகின்றது; இதனைப் பாவித்து இலங்கை 145,000 தொன் கோதுமையை அல்லது அதற்கீடான கோதுமை மாவினை தற்போதைய விலைகளில் கொள்வனவு செய்ய முடியும்.

24 இலங்கைப் பெண்கள் அரபுக்குடா நாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கு எந்தத் தடையும் இருக்க மாட்டாதென்றும், அவர்களது பாதுகாப்புக் கருதி சாத்தியமான சகல முன்னெச்சரிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்தது. மத்திய கிழக்கில் பெண்கள் தொழில் பெறுவதனை முற்றாகத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரு முன்மொழிவு பரிசீலனையில் இருந்து வந்தது.

28 சீனி விலைகளில் ஏற்பட்ட தீவிர அதிகரிப்புக்களை அடுத்து பெரகும் புட்டிப்பாலின் விலையை ரூ. 4/35 லிருந்து ரூ. 6/25 ஆக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தது.

## ஜூன்

2 ரூ. 58.5 கோடி முதலீட்டுடன் கொழும்பிலும், பெந்தொட்டையிலும் இரண்டு 5 நட்சத்திர ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. இம்முயற்சிக்கு வெளிநாட்டு ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும். (காப்புறுதிக்கு வெளியே) கூட்டுத்தாபனம் பிறிதொரு முயற்சியில் ஈடுபடும் முதற்றடவை இதுவாகும்.

5 ஒரு தொன் கரும்புக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலே ரூ. 300 இலிருந்து ரூ. 400 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சு அறிவித்தது.

அடுத்த வருட இறுதிக்குள் பிரித்தானியாவில் வேலையில்லாதோர் தொகை 20 லட்சமாக அதிகரிக்குமென அந்நாட்டின் மனித வலுச்சேவைகள் கமிசன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

9 ம. போ. ச. பாதைகளில் தனியார் பஸ் வண்டிகளை சேவையிலீடுபடுத்துவதற்காக சுமார் 300 அனுமதிப் பத்திரங்களை சபை வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளியும் சம்மட்டியும் கொண்டு
இருண்ட இக்குகைகளில்
நான் இறங்கிச் செல்கிறேன்
தும்பறைச் சுரங்கங்களில்

மேலும் கீழும் அலேவதில்
என் நாட்கள் கரையும்

என் ஆயுதங்களுடன்

களைத்துச் சோபையிழந்து
அதள பாதாளத்தைச்
சென்றடைவேன்

.........சுரங்க வாயிலை
அடைந்த பின்பே என் வருகை
நிச்சயமாகும்.

— 19ம் நூற்றுண்டின் சுரங்க மகழ்வோர் பாடல் ஒன்று.

சுரங்கத்தின் கீழ் தளத்தைச் சென்றடையும் ஒரு தொழிலாளி தான் முழு மனித சமுதாயத்திலிருந்தும் பிரிந்து தனிமையுற்றிருப்பதாக உணர்கிறுன். இன்னல் மிகு அனுபவங்களும், இம்சை தரும் எண்ணங்களும் மலிந்த இந்த துயரார்ந்த வாழ்வினை உலகெங்கணும் இருக்கும் சுரங்கத் தொழிலாளிகள் பகிர்ந்து கொள்கிறுர்கள். இலங்கைத் தொழிலாளியும் இதற்கு விதிவிலக்கில்லை. சுரங்க மகழ்வானது மனிதன் கண்டறிந்த மிகக் கொடூரமானதும், அபாய ஏதுக்கள் மலிந்ததுமான தொழிலொன்றுகவே அன்றும் இன்றும் இருந்து வருகிறது. எவ்வாறிருப்பினும், மாறிவரும் காலங்களை இப்படங்கள் பிரதிபலிக்கின்றன.





# இலங்கையில் காரீயக் கைத்தொழில்

எழுதிபம் என்றும் அறியப்படும் காரீயம் கடந்த 150 ஆண்டுகளாக இலங்கையிலுள்ள சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் பிரதான கனிப்பொருள்களில் ஒன்றுகும். எனினும், கடந்த 60 ஆண்டுகளின்போது காரீயம் இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் ஒரு பொருள் என்ற முக்கியத்துவத்தில் பின்னடைந்துவிட்டது. எனவே, பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் முதலிரு தசாப்தங்களிலும் தேயிலை, ரப்பர்; பின்னர் தேங்காய் போலவே காரீயமும் ஒரு பிரதான ஏற்றுமதிப் பொருளாக இருந்துவந்துள்ளது என்ற உண்மையை இன்றைய தலைமுறையினர் அறியாமலிருக்கக்கூடும். 1900-ம் ஆண்டுக்கும் 1910-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட காரீயத்தின் தொகை ஆண்டொன்றுக்கு 30,000 தொன்களுக்கு மேலிருந்தது.

இலங்கையில் காரீயம் சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட உச்சக் காலத்தில் நாட்டின் மத்திய மலைகளிலும் தென்மேற்குப் பகுதியிலும் உள்ள பல்வேறு பகுதிகளில் சுமார் 3,000 காரீயக் குழிகளும், சுரங்கங்களும் சிதறிக் கிடந்தன; காரீய அகழ்வுக்கும் ஏற்றுமதிகளுக்கும் சிறந்த ஆண்டாக விளங்கிய 1899-ம் ஆண்டிலே 2.2 கோடி ரூபா பெறுமதியான 31,761 தொன் காரீயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது அவ்வாண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 20 சதவிகிதத்துக்குச் சற்று மேற்பட்டதாகும்.

1979-ம் ஆண்டில் நாட்டின் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் .01 சதவிகிதத்துக்கு மட்டுமே காரீயம் பொறுப்பாக இருந்ததென்றுலும், பெறுமதிக் கணக்கில், இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கிடையே அது இன்னும் பன்னிரண்டாவது ஸ்தானத்தை வகிக்கின்றது. இலங்கையின் காரீயம் சர்வதேசச் சந்தைகளில் ஓர் அனுகூலமான நிலையைத் தொடர்ந்து அனுபவித்து வந்துள்ளது. இப்பொழுது ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 10,000 தொன்களே உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், 1980-ம் ஆண்டுக்கான கோரிக்கை 30,000 தொன்களுக்கு மேலான உத்தியோகபூர்வமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைக் காரீயம் தற்போது திடீர்ச் சுபிட்ச காலமொன்றை அனுபவித்து வருகிறதென்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை. உலகக் கோரிக்கையை நாம் அனுகூலப்படுத்திக்கொள்வதெனில், நாட்டிலுள்ள பயன்படுத்தத்தக்க காரீய வளங்களை மறுமதிப்பீடு செய்வதற்கும், மிகத் துரிதமாகவும், முறைப்படியும் காரீயத்தைப் பிரித்தெடுப்பதற்கும் இது தருணமாகும். இதுவரை தொடப்படாத வளங்களையும், கைவிடப்பட்ட நிலையில் உள்ள சுரங்கங்களையும் பயன்படுத்துவது சாத்தியம் என்பதைப் பரிசீலனைகள் எடுத்துக்காட்டி உள்ளன. புளத்கொஹுபிட்டிய பகுதியில் உள்ள ரங்காலையிலும், மெல்ஸிரிபுரத்திலுள்ள ராகெதரையிலும் வேலைசெய்யப்பட்டுவரும் இரு பரீட்சார்த்த சுரங்கங்களுடன், இத்திசையில் இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒரு கைத்தொழில் என்ற முறையிலும், ஓர் ஏற்றுமதிப் பொருள் என்ற வகையிலும் காரீயமும், அதன் வர்த்தகமும் இந்நூற்றுண்டின் முற்பாகத்தில் செழித்தோங்கியதுடன் சுதேச தொழில் முயற்சியாளர் வர்க்கமொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் அது வழிகோலியது. எனினும், இக்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலின் பொருளாதார முக்கியத்துவம் அது முன்னணி அடைந்த வேகத்தை விடவும் துரிதகதியில் தளர்ந்துவிட்டது. ஆனால், இக்கைத்தொழிலுடன் எழுச்சியடைந்த சொத்துடமை வர்க்கம் தேசத்தின் சமூக, அரசியல் வாழ்க்கையில் வகித்த பங்கு இன்றுவரை அவர்களைப் பாதித்து வந்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கிடையே முன்னணி நிலை வகித்த காரீயத்தின் முக்கியத்துவம் முதலாவது உலகப் போரின் பின்னர் சரிந்து சென்றமைக்கு காரீயப் படிவுகளும், வளங்களும் தீர்ந்துவிட்டதோ அல்லது உலகக் கோரிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியோ காரணமல்ல. ஆரம்ப வருடங்களில் காரீயக் கைத்தொழில் துரிதமாக வளர்ச்சி அடைந்ததற்கு இலங்கையிலுள்ள காரீயப் படிவுகளின் தரச் சிறப்பே காரணம். எனினும் இப்படிவுகள் பல சந்தர்ப்பங்களில் ஆழமான மட்டங்களிலேயே இருந்ததுடன், காரீயத்தைப் பிரித்தெடுப்பதற்கு அதலபாதாளத்தில் சுரங்கங்களைத் தோண்டவேண்டியும் இருந்தது. இத்தகைய சுரங்கங்களைத் தோண்டுவதற்கு அதிக பணச் செலவு ஏற்பட்டது. எனினும், அதன் தரச் சிறப்பினாலும், உறுதியான உலகக் கோரிக்கையினாலும் உயர் பணச் செலவில்கூட அதைச் சுரங்கங்களிலிருந்து அகழ்ந்தெடுப்பது அனுகூலமான பலனளிப்பதாகவே இருந்தது. எனினும், 1912-ம் ஆண்டில் மலகாஸியில் பூமியின் மேற்பரப்புக்குச் சமீபமாக (சீவல்) காரீயப் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை தரச் சிறப்பில் இலங்கைக் காரீயத்துக்கு ஈடாயிருந்ததுடன், இலங்கைக் காரீயத்தின் பிரதியீடாகவும் அமைந்துவிட்டன. இதன் விளைவாக, இலங்கைக் காரீயத்துக்குக் கடும் போட்டி ஏற்பட்டது. மலகாஸி காரீயம் குறைந்தசெலவில் அகழ்ந்தெடுக்கப்பட்டதால், இலங்கைக் காரீயச் சந்தை படுத்துவிட்டது. அத்துடன், இலங்கைக் காரீயக் கைத்தொழில் படிப்படியாகச் சீணிக்கத் தொடங்கியது. பெருமளவில் நல்ல படிவுகளைக்கொண்ட ஒரு சில பெரிய சுரங்கங்கள் மட்டுமே தொடர்ந்து பிழைத்திருந்தன. அச் சுரங்கங்களே இன்றுங்கூட தொடர்ந்து இருந்துவருகின்றன. இந்தச் சுரங்கங்களிலிருந்து இன்று சராசரியாக ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 10,000 தொன் காரீயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1979-ம் ஆண்டில் இதன் பெறுமதி 7.7 கோடி ரூபாவாயிருந்தது. எனினும், இது இலங்கையின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 1 சதவிகிதத்துக்கும் குறைவாகும். இந்நிலை நாட்டின் பொருளாதார அரங்கில் காரீய சுரங்கக் கைத்தொழிலும் ஏற்றுமதியும் வகித்துவந்த முக்கியத்துவத்தில் ஏற்பட்டுள்ள கணிசமான வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

காரீயக் கைத்தொழிலில் நிலவும் சமகால நிலைமையை ஆராயுமுன்னர், இலங்கையில் காரீயக் கைத்தொழிலின் வளர்ச்சியையும், குணாம்சங்களையும், அது முக்கியத்துவம் வகித்த காலகட்டத்தில் இந்நாட்டின் பொருளாதார, சமூக வாழ்க்கையில் அது ஆற்றிய பங்கையும் சுருக்கமாகக் கவனிப்போம்.

காரீயச் சுரங்க அகழ்வும் ஏற்றுமதிகளும் 19-ம் நூற்றாண்டிலேயே முக்கியத்துவம் அடைந்த போதிலும், காரீயத்தின் இருப்பு பூர்வ காலத்திலிருந்தே அறியப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. எனினும், காரீயத்தைப்பற்றிய முதலாவது பதிவு செய்யப்பட்ட குறிப்பு 1675-ம் ஆண்டிலேயே கிடைப்பதாயிருந்தது. அவ்வாண்டில் டச்சு கவர்னர் ரைக்லோப் வான் கோயன்ஸ் தம்மையடுத்துப் பதவியேற்கவிருந்தவருக்கு எழுதிய நிருபத்திலே இலங்கையில் காரீயம் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். அதே காலத்தில் எழுதிய ரொபர்ட் நொக்ஸ் என்பாரும் அப்பொழுது கறுப்பீயம் என்றழைக்கப்பட்ட காரீயம் இலங்கையில் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். சில குறிப்பிட்ட மருத்துவ நோக்கங்களுக்கு அது உபயோகிக்கப்பட்டதென்றும் இரும்பு உலோகத் தாதுக்களை உருக்குவதற்கான மூசைகளை (புடக்குகைகள்)ச் செய்வதற்குக் கண்டி இராஜ்ய காலத்தைச் சேர்ந்த கருமார்களாலும் அது உபயோகிக்கப்பட்டது என்றும் குறிப்பிடும் சான்றுகளும் உள்ளன. ஆனால், ஒரு சுரங்கக் கைத்தொழில் என்ற முறையிலும் ஓர் ஏற்றுமதிப் பொருள் என்ற வகையிலும் காரீயத்தின் முக்கியத்துவம் பிரிட்டிஷ் காலத்திலேயே வெளிப்படுகிறது. 16-ம் நூற்றாண்டிலிருந்தே காரீயத்தில் சர்வதேச வர்த்தகம் நடைபெற்றுள்ளது — இங்கிலாந்திலும் சைபீரியாவிலும் ஜெர்மனியிலும் காரீயப் படிவுகள் சுரங்கங்களிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டு, வியாபாரஞ் செய்யப்பட்டுள்ளது. ஆதிகாலத்தில் இந்த வியாபாரம் டச்சுக்காரரின் கையிலேயே இருந்துள்ளதாகத் தோன்றுகிறது. டச்சுக்காரர் காரீயத்தைப் பிரதானமாக எழுத்தாணி (பென்சில்)க் கைத்தொழிலுக்கே விற்றனர்.

வெடிகுண்டுகளையும் பீரங்கிக் குண்டுகளையும் வார்ப்பதற்குரிய மூசைகளைச் செய்வதிலும் காரீயம் உபயோகிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இவ்விதமாகக் காரீயம் ஆதிகாலத்திலிருந்தே போர்ச்சாதனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இத் தொடர்பு நவீன போராயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுங்கூட தற்காலத்தில் தொடர்ந்து இருந்துவருகிறது. ஏனென்றால், தற்காலப் போர்ச் சாதனங்களைச் செய்வதில் உருக்கு பெருமளவில் தேவைப்படுகிறது. உருக்கை உருக்குவதற்குத் தேவையான மூசைகளில் ஒரு பிரதான உள்ளீடாக இருப்பதால் காரீயம் உருக்குக் கைத்தொழிலுக்கு மிக முக்கியமான ஒரு பொருளாகும். தற்காலத்திலும் பல்வேறு வகை உலோகக் குழாய் மூக்குகள், பெருங் காண்டிகள், எளிதில் உருகாத வலைத் தகடுகள் முதலியனவற்றை செய்வதில் அது உபயோகிக்கப்படுகிறது. காரீயத்தின் மற்றும் முக்கியமான பயன்கள் உராய்வு நீக்கிகள், மின்சாரக் கைத்தொழிலுக்கான தூரிகைகள், உலர்கல பாட்டரிகள், பென்சில்கள், கனலடுப்பு (ஸ்டவ்), மெருகுகள், மின்வாய்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் உபயோகிக்கப்படுவதாகும்.

இவ்விதமாக, கைத்தொழில் உற்பத்தியிலேயே காரீயத்தின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதைக் காண்கிறோம். கைத்தொழில் புரட்சி ஆரம்பமானதிலிருந்து கைத்தொழில் உற்பத்தியும் பிரமாண்டமான அளவில் வளர்ந்து வந்தது. எனவே, கைத்தொழில் துறையில் வளர்ந்து வரும் பிரதான நாடென்ற முறையில் பிரிட்டனுக்குக் காரீயம் தேவைப்பட்டது. கம்பர்லாந்திலிருந்த அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த பாரோடேல்ஸ் சுரங்கங்களிலிருந்த காரீயப் படிவுகள் சுமார் இரண்டரை நூற்றாண்டுகள் வரை பயன்படுத்தப்பட்டதற்குப் பின் 19-ம் நூற்றாண்டு மத்தியில் தீர்ந்துவிட்டன. ஆதலால், பிரிட்டன் சைபீரியாவிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் தனது சொந்தக் காரீயத் தேவைகளைப் பெற்று வந்தது. இச் சந்தர்ப்பத்திற்றான் பிரிட்டிஷார் கிட்டத்தட்ட இலங்கையில் தங்களுடைய ஆட்சியைத் தொடங்கிய காலத்திலிருந்தே இந் நாட்டில் உள்ள காரீயப் படிவுகளை வர்த்தக ரீதியில் பயன்படுத்துவதில் சிரத்தை காட்டினர். 1830-ம் ஆண்டில் கோல்புரூக் கமிஷன் (ஆணைக்குழு) சீர்திருத்தங்கள் அமுலுக்கு வந்ததுடன், அதனைத் தொடர்ந்து கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் தலையிடாக் கொள்கை பின்பற்றப்பட்டதனாலும், பிரிட்டிஷ் தொழில் முயற்சியாளர்களின் ஆதரவினால் பிரிட்டிஷ் சிரத்தை நீடித்தது. இக்கால அளவில் பிரிட்டிஷ் தொழில் முயற்சியாளர்கள் இலங்கையின் ஏற்றுமதி — இறக்குமதி வர்த்தகத் துறையில் தங்களை ஸ்தாபித்துக் கொண்டனர். இலங்கையிலிருந்த குடியேற்ற நாட்டு அரசாங்கம் காரீய வர்த்தகத்தில் நேரடியாகப் பங்குபற்றவில்லையாயினும், பிரிட்டிஷ் தொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்கமளித்தது. இவ்விதமாகக் காரீயச் சுரங்க அகழ்வும், வியாபாரமும் ஆரம்ப கட்டத்திலிருந்தே உள்நாட்டு காலனித்துவ பொருளாதார முறையுடன் பின்னிப் பிணைக்கப்படுவதைக் காண்கிறோம். எனினும், இதிலுள்ள சுவாரஸ்யம் என்னவென்றால், பிரிட்டிஷார் பெருந்தோட்டக் கைத்தொழிலிலும் ஏற்றுமதி வர்த்தகத்திலும் உறுதியாக அடியெடுத்து வைத்திருந்த அதேவேளையில், காரீயச் சுரங்கக் கைத்தொழிலில் அதே போன்ற ஒரு நிலையைப் பெற அவர்களால் இயலவில்லை என்பதாகும். ஆனால், இப்படிச் செய்ய அவர்கள் பாரதூரமான முயற்சிகளை மேற்கொண்டனர் என்பதைக் குறிப்பிடும் சான்றுகள் உள்ளன. இவ்விதமாக, பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு அரசினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஏராளமான பொருளாதார நடவடிக்கைகளில், காரீயச் சுரங்கக் கைத்தொழில், தெங்குப் பொருள் கைத்தொழிலுடன் ஓர் அலாதியான இடத்தை வகிக்கின்றது. தெங்குப் பொருள் கைத்தொழிலைப் பொறுத்தவரை, அது இலங்கையரான வர்த்தகர்களே ஆதிக்கஞ் செலுத்தவல்ல ஒரு நடவடிக்கைத் துறையாக விளங்கியது. இலங்கையில் காரீயச் சுரங்கக் கைத்தொழிலும் வர்த்தகமும் அடைந்த வளர்ச்சியை விரிவாக மூன்று கட்டங்களாகப் பிரித்துக் கூறலாம். அவையாவன— ஆரம்ப கட்டம் 1829—1869); வளர்ந்து, செழித்து, முதிர்ந்த காலம் (1869—1918). இறுதியில் தளர்வுற்ற காலம் (1918-ம் ஆண்டிலிருந்து).

## ஆரம்ப கட்டம்

ஏறக்குறையப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து 1870 களின் முற்பகுதி வரையுள்ள காலத்தில் காரீயம் நாட்டின் சிறிய ஏற்றுமதிக் கைத்தொழில்களில் ஒன்றாக ஸ்தாபிதமாகிவிட்டது. இக் கட்டத்தில் காரீயக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு உதவிய காரணிகளில் பிரதம சக்தியாக விளங்கியது யாதெனில், இலங்கையின் படலக் காரீயத்துக்கான கோரிக்கை வளர்ந்து வந்ததாகும். இதில் கரிப்பொருள் பெருமளவில் அடங்கியுள்ளதென்பது உலகப் பிரசித்தமாகி இருந்தது. இத்தன்மையுள்ள காரீயம் குறிப்பாக மூசைக் கைத்தொழிலுக்குத் தேவைப்பட்டது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் இக்கைத்தொழில் துரிதமாகத் தோன்றிக் கொண்டிருந்தது. அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தினால் ஒருவேளை இந்நிலைமை ஏற்பட்டிருக்கலாம். மேற்குலகில் பொதுவாக ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சி காரீயத்தை மற்றும் நோக்கங்களுக்கு உபயோகிப்பதற்கான பரிசோதனைகளுக்கு அடிகோலியது. அவையாவன: அச்சுருக்களுக்கான முகப்புத் திரைகள் அல்லது வார்ப்பு நிலைய முகப்புத் திரைகள், ஊதுலைகள், எளிதில் உருகாக் கலவைகள், ஸ்டவ் மெருகு, உராய்வு நீக்கி கிரீஸ் (கொழுப்பு) ஆகியவற்றிற்குக் காரீயத்தைப் பயன்படுத்துவதற்கான பரிசோதனைகள். மேலும், ஒரு பிரிட்டிஷ் குடியேற்ற நாடு என்ற முறையில் இலங்கை ஏற்கனவே வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்ததால், கைத்தொழில்களை ஏற்படுத்தி வரும் மேற்குலகில் காரீயத்துக்கான கோரிக்கை எழுந்ததும் அதைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலுமிருந்த உற்பத்தி முறைகளில் சில, இலங்கையின் உயர்தர காரீயத்தை மட்டுமே உபயோகிக்கும் வகையில் அமைந்திருந்தது போலத் தோன்றுகிறது. இலங்கையில் இருந்த நிலைமைகளும் இப் புதிய கோரிக்கையை நிறைவேற்றக் கூடியனவாயிருந்தன. இது பெருந்தோட்ட விவசாயத்தை மையமாகக் கொண்டு இலங்கையில் பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுவந்த காலமாகவுமிருந்தது. தாபனக் கட்டுக்கோப்பில் பிரிட்டிஷார் செயற்படுத்தி வந்த மாற்றங்களின் ஒரு விளைவே இதுவாகும். பெருந்தோட்டக் கைத்தொழிலின் அபிவிருத்தி, போக்குவரத்து, வீதிகள், கட்டட நிர்மாணம் முதலியவற்றைச் சமைப்பதற்கான துணைக் கைத்தொழில்களை அமைக்க வேண்டிய அவசியத்தைச் சிருஷ்டித்தது. இத் தேவை (பெரும்பாலும் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த) இலங்கையரான தொழில் முயற்சியாளர்களைக்கொண்ட ஒரு வர்க்கத்தாலும், இந்திய செட்டிமாரான வர்த்தகர்களாலும் பூர்த்திசெய்யப்பட்டது. காரீயத்துக்கான வெளிநாட்டுக் கோரிக்கை வளர்ந்த போது, இலங்கையில் ஏற்கனவே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு பரம்பரை வழக்கமும், பாரம்பரியமும் இருந்ததுடன், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடனும், லண்டன் சந்தையோடும் இணைந்த பொது வர்த்தக முதலாளித்துவக் கம்பெனிகளுமிருந்தன. அப்போது இலங்கையில் இருந்த பிரிட்டிஷ் தொழில் முயற்சியாளர்கள் வர்த்தகஞ் செய்வதுடன் தங்களுடைய சம்பந்தத்தை வரையறுத்துக் கொண்டனர். அவர்கள் சுரங்க அகழ்வில் ஈடுபட்டதாகத் தோன்றவில்லை. காரீயத்துக்கான கோரிக்கை அதிகரித்துக்கொண்டிருந்த போதிலும் இந்நிலைமையே நீடித்தது. ஒருவேளை, இலங்கையில் அறியப்பட்ட பிளந்த — காரீயப் படிவுகள் சிறு அளவிலான தொழிற்பாடுகளுக்கே ஏற்றனவாயிருந்திருக்கக்கூடும். இதில், ஈடுபட பிரிட்டிஷ் தொழில் முயற்சியாளர்கள் வேண்டாவெறுப்புடனிருந்தனர். இலங்கையரான தொழில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியாளர்கள், முக்கியமாக இவர்களுக்கிடையே இருந்த சிங்களவர்கள் கிடைத்த சந்தர்ப்பத்தைத் துரிதமாகப் பயன்படுத்திக் கொண்டு, குழிகளிலும் சுரங்கங்களிலுமிருந்து காரீயத்தைப் பிரித்தெடுப்பதில் முதலீடு செய்து, இத்துறையில் ஓர் ஏகபோக உரிமையை ஏற்படுத்திவிட்டனர். காரீயச் சுரங்க அகழ்விலும், பதப்படுத்தும் கைத்தொழிலிலும் பிரிட்டிஷ் முதலாளிகளோ அல்லது இந்திய முதலாளிகளோ ஒரு கணிசமான பங்கை ஸ்தாபிப்பதில் வெற்றிபெறவில்லை. இது எங்களுடைய காலனித்துவ அமைவில் ஒரு நூதனமான அம்சமாகும்.

## வளர்ச்சியும் செழிப்பும் முதிர்வும்

1869-ம் ஆண்டிலிருந்து 1918-ம் ஆண்டுவரையுள்ள காலத்தை இலங்கையின் காரீயக் கைத்தொழிலில் பெருஞ் செயலூக்கமும், முயற்சிகளும் காணப்பட்ட ஒன்றெனக் குறிப்பிடலாம். இக் காலத்திலேதான் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் சுமார் 3,000 காரீயக் குழிகளும், சுரங்கங்களும் சிதறிக் காணப்பட்டன. சுரங்க அகழ்வு முறைகள் திட்டமான உருப்பெற்றன. (அஃதாவது, எந்திர உதவிகொண்டு அகழப்படும் சுரங்கங்களும் (மோல்பத்தல்) கையால் அகழப்படும் பழங்கால குழிச் சுரங்கங்களும் (டெபர்ரேபத்தல்)); தென் மாகாணத்தில் உள்ள தொழிலாளர்களிலிருந்து சுரங்க அகழ்வாளர்களின் பரம்பரை வகுப்பொன்று வளர்ந்தது. இவர்கள் ஆரம்ப கட்டங்களிலேயே இவ்வேலை முறையில் ஈடுபட்டனர்:

“துரிதமாகச் செல்வம் திரட்டும்” குழிச் சுரங்க அகழ்வில் பெரும் பணம் திரட்டுவதும், இழப்பதும் நடந்தன; காரீயக் கைத்தொழில் பல குடும்பங்களின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டி உள்நாட்டு மேட்டிமையாளர் வர்க்கமொன்றின் தோற்றத்துக்கு வழிகோலியது. இக்குடும்பங்கள் காரீயக் கைத்தொழிலில் செல்வத்தையும், பொருளாதார அதிகாரத்தையும் குவித்துக் கொண்டன; காரீயம் சம்பந்தமாக அரசாங்கக் கொள்கை ஒழுங்கமைக்கப்பட்டது.

1870 களிலிருந்து 1918-ம் ஆண்டுவரை காரீயக் கைத்தொழில் அடைந்த வளர்ச்சிக்கு அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஜெர்மன் உருக்குக் கைத்தொழிலின் விரிவும், உருக்கு— கம்பித் துப்பாக்கியின் அறிமுகமும் போர்க் கப்பல்களின் உருக்குக் கவசங்கள், சமாதான நோக்கங்களுக்கும் இராணுவ நோக்கங்களுக்கும் பல்வேறு துறைகளில் தேவைப்பட்ட உருக்கு இயந்திர சாதனங்கள் என்பன அளித்த ஊக்கம் ஓரளவுக்குக் காரணமாகும். காரீய மூசைக்கும் உருக்குக் கைத்தொழிலுக்கும் தற்கால யுத்த நடவடிக்கைகளுக்கும் இடையேயுள்ள சம்பந்தம் தொடர்ந்து பிரத்தியட்சமாகத் தெரிகிறது. வளர்ச்சியும், செழிப்பும் நிறைந்த இக்காலத்தின்போது காரீயச் சந்தையை முன்னேற்றுவதில் போயர் யுத்தமும், முதலாவது உலக மகாயுத்தமும் விசேஷ பங்கெடுத்தன. உண்மையில், காரீயத்தின் ஒரு பிரதான ஏற்றுமதியாளர் என்ற முறையில் மலகாஸி வெளிப்பட்டதுடன் இந்தக் காலம் 1912-ம் ஆண்டில் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், முதலாவது உலக மகாயுத்தத்தினாலும் அதன் விளைவாகத் தோன்றிய தேவைக் கோரிக்கையினாலும் 1917-ம் ஆண்டுவரை நீட்டப்பட்டது.

## சீணிப்பும் தெரிவுமுறையான முதிர்வும்

கைத்தொழில் மயமாக்கலுடன் காரீயத்தின் உபயோகங்களும், தேவையும் இடையறாது அதிகரித்தபோது, காரீயத்துக்கான கோரிக்கை அதிகரித்தது. இது உலகத்தின் பல்வேறு பாகங்களில் பெரிய குறைந்த தரமுள்ள படிவுகள் கண்டுபிடிக்கப்படுவதற்கும், பயன்படுத்தப்படுவதற்கும் அடிகோலி, இலங்கைக் காரீயத்துக்குக் கடும் போட்டியை உண்டாக்கியது. பிரதானமாக, கொரியா, ஆஸ்திரியா, ஜெர்மனி, ரஷ்யா, சீனு, மெக்ஸிகோ ஆகிய நாடுகளே போட்டியிட்டன. எனினும், மிகப் பெரிய பயமுறுத்தல் மலகாஸி நாட்டிடமிருந்தே வந்தது. அந்நாட்டில் சரளை மண் பாறைகளில் உள்ள காரீயப் படிவுகள் சுலபமாக அகழப்பட்டு, காரீயம் பெறப்பட்டது. அதன் விளைவாகக் காரீயத்தைப் பிரித்தெடுக்கும் செலவுகள் குறைந்தன. மலகாஸி காரீயத்திலிருந்த பௌதிகத் தன்மைகள் பல கைத்தொழில் நோக்கங்களுக்கு இலங்கைக் காரீயத்துக்கு மாற்றாக அதை உபயோகிப்பதைச் சாத்தியமாக்கியது. இந்தப் போட்டி மெய்யாகவே உணரப்பட்டது. இது 1920 — 1922 ஆகிய வருடங்களில் இலங்கையிலுள்ள காரீயக் கைத்தொழிலுக்கும், வியாபாரத்துக்கும் முன்னெப்போதும் காணாத ஒரு நெருக்கடியை உண்டாக்கியது. மலகாஸி காரீயம் ஒருபோதும் இலங்கைக் காரீயத்தின் தரச் சிறப்புக்கு ஈடாகாதென்றும், ஒரு மாற்றாக அமைய மாட்டாதென்றும் நம்பி இதுவரையில் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த காரீய வர்த்தகர்கள் சங்கம் திகில் கொண்டு, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பொழுது வேண்டுகோள் விடுத்தது.

1920-ம் ஆண்டில் காரீயக் கைத்தொழிலில் ஏற்பட்ட சீணிப்பும், நெருக்கடியும் அரசாங்கத்தில் ஓர் அனுகூலமான எதிர்விளைவைப் பிறப்பித்தது. ஆளும் பிரிட்டிஷாரின் நலன்கள் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசாங்கத்தின் கனிப்பொருள் உரிமைகள் சம்பந்தமான கொள்கையை உருவாக்கியது. (இதுபற்றிப் பின்னர் ஆராய்வோம்.) குறிப்பாகச் சட்டசபையில், காரீயக் கைத்தொழிலில் ஈடுபட்ட இலங்கையரான மேட்டிமையாளரின் வளர்ந்து வந்த செல்வாக்கும், கௌரவமும் 1920 களில் அரசாங்கக் கொள்கை மீது செல்வாக்கைப் பிரயோகித்ததாகத் தோன்றுகிறது. 1923-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் திரு. ஓ. சி. திலகரத்ன சட்டசபையில் கொண்டுவந்த ஒரு பிரேரணையைத் தொடர்ந்து, திரு. எச். டபிள்யூ. கொட்ரிங்டனைத் தலைவராகவும், திரு. ஈ. ஸி. டீ பொன்சேகா, ஜூனியர் திரு. எச் மீதெனியா, திரு. சிட்னி எஸ். செட்ஜ்விக், திரு. ஜாஸ் பி. பெர்ணண்டோ, திரு. டி. எஸ். சேனநாயக்கா ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்ட ஒரு காரீயக் கைத்தொழில் கமிட்டி அமைக்கப்பட்டது. “எவ்விதத்தில் காரீயக் கைத்தொழிலுக்கும் வர்த்தகத்துக்கும் புத்துயிரூட்டலாம்; அக்கைத்தொழிலுக்கு எந்த அளவுக்குக் கஷ்டநிவாரணம் வழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம்" என்பதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்க, கமிட்டி பணிக்கப்பட்டது. இக்கமிட்டியும் காரீய வர்த்தகர்கள் சங்கமும் கேட்டுக்கொண்டதன் பேரில், அரசாங்கம் பிரிட்டன், அமெரிக்கா, பெல்ஜியம், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து, அங்கு நடைபெறும் காரீய வர்த்தகம்பற்றிப் பூரணமாக விசாரணை நடத்துமாறு சுரங்கங்களின் பரிசோதகரான திரு. ரி. ஜி. ஹண்டருக்கு உத்தரவிட்டது. பின்னர், சர்வதேச காரீயச்சந்தையில் இலங்கைக் காரீயத்துடன் பிரதானமாகப் போட்டியிடும் நாடான மடகாஸ்கருக்கு (இப்போது மலகாஸி) விஜயம் செய்து, அங்குள்ள சுரங்கக் கைத்தொழில்பற்றி விசாரணை நடத்துவதற்கு இவ்வுத்தரவு விரிவாக்கப்பட்டது. திரு. ரி. ஜி. ஹண்டரின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்த காரீயக் கைத்தொழில் கமிட்டியின் இறுதி அறிக்கை, ஐந்து வருட காலத்துக்குக் காரீயத்தின் மீதுள்ள ஏற்றுமதி வரியும், வெடிப்பொருள்கள் மீதுள்ள இறக்குமதி வரியும் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்றும், முடிக்குரிய ஒதுக்குப் பிரதேசங்களிலிருந்தும் காடுகளிலிருந்தும் மரங்களைப் பெறுவதற்குச் சில குறிப்பிட்ட சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்தது. காரீயம் மீதுள்ள ஏற்றுமதி வரியும், வெடிப் பொருள்கள் மீதுள்ள இறக்குமதி வரியும் ஐந்து வருடகாலத்துக்கு நீக்கப்பட வேண்டும் என்ற சிபார்சு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்றுமதி வரி 1925 அக்டோபரில் நீக்கப்பட்டது.

ஏற்றுமதி வரியை நீக்கியதன் மூலம் அரசாங்கம் வழங்கிய கஷ்ட நிவாரணம் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. இலங்கையில் நடைபெற்ற சுரங்க அகழ்வுத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை தொழில்நுட்பவியலில் அவற்றின் சர்வதேசப் போட்டியாளர்களுக்கு வெகு தூரம் பின்தங்கியிருந்தன. அத்துடன், படிவுகளின் தன்மையினால் தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொள்வது மிகக் கஷ்டமாகவும், அதிக பணச் செலவை உண்டாக்குவதாகவும் இருந்தது. பெருந்தோட்ட விவசாயத்தில் (குறிப்பாக 1920 களில் திடீர்ச் சுபிட்சநிலை கண்ட ரப்பர்த் தோட்டங்களில்) வேலை செய்வது அதிக கவர்ச்சியூட்டுவதாகவும் அதிக வேதனம் தருவதாகவும் இருப்பதைத் தொழிலாளர் கண்டதனால், காரீயக் கைத்தொழில் தொழிலாளரின் சம்பளச் செலவு அதிகரிப்பு அப்போதைய கஷ்டங்களுக்குக் காரணமாயிருந்தது. 1920 களின் முடிவில் பெரும்பாலான சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் மெதுமெதுவாக நின்று, உற்பத்தி ஸ்தம்பித்து விட்டது. தொழில் முயற்சியாளர்களின் ஆற்றல், மூலதன வளம், செழிப்பான — சுலபமாக வேலை செய்யக்கூடிய காரீயப் படிவுகளின் உடைமை போன்ற காரணிகள் சேர்ந்ததன் காரணமாக, ஒருசில பெரிய சுரங்கங்கள் மட்டுமே காரீயத்துக்கான கோரிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியினின்றும் இலங்கையிலுள்ள காரீயக் கைத்தொழிலினதும், வியாபாரத்தினதும் சீணிப்பினின்றும் தப்பிப் பிழைத்தன. (10-ம் பக்கம் பார்க்க)

## 1881ல் ஒரு காரீயச் சுரங்கத்தின் விவரணம்

"ஒரு சுதேசி ஒரு கிணறு அல்லது அகழியைத் தோண்டும்போது, காரீயச் சுரங்கம் ஒன்றினைக் கண்டறிந்தால், அவன் அப்பிரதேசத்தில் உள்ள செல்வந்தனை தன்னுடன் இணைந்து வேலை செய்வதற்கு அழைப்பான். அது முடிக்குரிய காணியாகவிருந்தால் குத்தகைக்கு எடுக்க அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் அனுப்பப்படும். (வழமையான) சோர்வும், வெறுப்பும் தரக்கூடிய செய்முறைகளின் பின்னர் இதற்கு அனுமதி வழங்கப்படும். அவ்விடம் மிகச் சிறந்ததாகவிருப்பின், எதிர் விண்ணப்பங்கள் செய்யப்படும்; இவை யாவும் இது தொடர்பாக கூடிய அதிகாரம் பெற்றுள்ள கோராளை முதலியாருக்கு அனுப்பப்படும். பொதுவாக, அரசாங்க அதிபரே தகுதியான நபருக்கு உரிமை வழங்குவார்; இவ்வாறு உரிமை பெறுபவர் பெரும்பாலும் முதலில் விண்ணப்பம் செய்தவராக இருப்பார். குத்தகை பெற்றதன் பின்னர் கிராம குறிகாரரின் ஆலோசனையுடன் சுப நேரம் பார்க்கப்பட்டு, ஒரு பொதுக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்படுவது போன்ற வைபவத்துடன் முதலாவது மண் வெட்டப்படும். இதன் பின்னர் கூடிய சிரத்தையுடன் அகழ்கின்ற வேலைகள் மேற்கொள்ளப்படும். நில உரிமையாளர் அல்லது அரசாங்க குத்தகைக்காரர் அகழ்வு வேலைகளுக்கு கிராமத்தவர்களை அழைப்பார். காரீயத்திற்கான வாய்ப்பு கூடுதலாகவிருந்தால் உழைப்பாளர்கள் ஒவ்வொரு அகழியிலிருந்து நாலில் ஒரு பங்கினைப் பெறுவர்; இல்லாவிடில் அவர்களது பங்கு ஐந்தில் ஒன்றாகும். ஒரு அகழ்வோன் கூடிய உழைப்பின் பின்னர் காரீயப் படிவமொன்றினைக் கண்டறிந்தால், இயன்றளவு விரைவாக நீரிறைத்து, தனது கருவியினால் விரைவாக காரீயத்தை அகழ்வான். தனக்கு அதிர்ஷ்டம் கிடைத்துவிட்டதாக அவன் களிப்படைவான். சில சமயங்களில் இக்களிப்பு சொற்ப ஆயுள் கொண்டதாக விளங்கலாம். ஏனெனில், துரதிர்ஷ்டவசமாக அப்படிவு அயலவனின் அகழிக்குள் செல்லலாம் அல்லது காரீயம் முடிந்திருக்கலாம்."

ஏ.எம். பெர்குயுசனின் "காரீயத்தைப் பற்றி" என்ற கட்டுரையிலிருந்து பெறப்பட்டதாகும் — 1881.

"அதிகளவிலான அகழிகள் பரிமாணத்தில் மிகச் சிறியவையாகவும், தமது சொந்த நிலங்களில் கிராமத்தவர்களினாலும், ஏனையோரினாலும் அகழப்பட்டனவாகவும் உள்ளன. பெரும்பாலும் நீள் சதுரமான செங்குத்து வழிகளைக் கொண்டிருந்த இவற்றிற் சில இரண்டு யார் பரப்பளவும், 50—110 அடி ஆழமும் உடையனவாகும். இவற்றில் பல உற்பத்தித் திறனற்றவை போல் தென்படுகின்றன; ஏனையவை 1899ல் செழிப்புக் காலத்தில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டவையாகும். காரீயத்தின் விலை அதிகரிக்கின்றபோது அதன் பெறுமதியும் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கின்றது. அகழி உரிமையாளர்கள் பாறையின் அமைவு, காரீயப் படிவத்தின் திசை என்பவற்றைக் கவனியாது கருவியை இயன்றளவு ஆழத்திற் செலுத்தி காரீயத்தைப் பெற முயற்சிப்பது தோல்விக்கான ஒரு பிரதான காரணமாகும். படிவத்தின் திசைக்கு ஏற்ப, புவி மேற்பரப்பிற்கு அண்மையில் கவனமாக கருவியைச் செலுத்தினால் கூடிய பயனைப் பெறலாம்; ஒரு சிறந்த படிவினைப் பெறலாம் என்ற உறுதியற்ற நம்பிக்கையில் ஒரு செங்குத்தான கருவியை கண்மூடித்தனமாக அமிழ்த்துவதனை விட, படிவத்தின் நுழைவாயிலைக் கண்டறிவதன் மூலம் காரீயப் படிவத்தினைப் பெற முற்படுதல் இலாபகரமானதாகும். செங்குத்தான காரீயப் படிவுகள் இருப்பதாக கண்டறிந்தால் மாத்திரமே செங்குத்தான கருவி ஒன்றினைப் பாவிக்கலாம்."

—ஆனந்த குமாரஸ்வாமி அவர்கள் கனிப்பொருளியல் ஆய்வுப் பணிப்பாளர் என்ற வகையில் சமர்ப்பித்த நிர்வாக அறிக்கை, 1903.

# இலங்கையின் காரீயப் படிவங்கள்

துலிப் ஜயவர்த்தன

இலங்கைத் தீவின் ஒழுங்கான புவிச்சரிதவியற் படத் தயாரிப்பு வேலைகள், 1975-ல் நிறைவு செய்யப்பட்டன. இப்படங்களின் படி, உற்பத்தித் திறன்கொண்ட காரீய நாளங்களை உள்ளடக்கிய பிரதான பாசாணவியல் அலகானது சாணக்கைற்—மாற்றடையற் பாறைத் தொடரே என்பது தெரிய வந்துள்ளது. இலங்கையின் தென்மேற்கு, வடமேற்கு, மத்திய மலையகத் திணிவு ஆகிய பகுதிகளில் இவை காணப்படுகின்றன. இப்பாசாணவியல் அலகுத் தொகுதியில், காரீய நாளங்களைக் கொண்ட பாறைகள், அமில மணிப் பாறைகள், மணியமைப்புக் கொண்ட படிகப் பாறைகள், பளிங்குருச் சுண்ணக் கற்பாறைகள் என்பனவாகும்.

உற்பத்தித் திறன் மிகு காரிய நாளங்கள் புவிச்சரிதவியல் ரீதியில் படமாக்கப்பட்டுள்ளதுடன், மேற்கூறிய பாறைகளின் அடுத்தாண்மையான தொடர் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தூய மூலக் காரியமானது மென்படைகளாகவும், நாளங்களாகவுமே காணப்படும். தடிப்பில் இவை 2 அங்குலத்திலிருந்து 6 அடி வரை வேறுபட்டுக் காணப்படுகின்றன. இந்நாளங்களும் படைகளும், நாட்டின் பாறைகளின் சரிவுகள், அடி திசை என்பனவற்றுக்கு இசைவானவையாக அமைந்து காணப்படுகின்றன. இவ்வகையில், அவை ஒரு "கிள்ளியதால் வீங்கும்" இயல்பையும் காட்டுகின்றன. மேல் மாகாணத்தில் பெருமளவில் காரிய வலயங்கள் வடகிழக்கு — தென், தென்கிழக்கு திசையில் அமைந்து காணப்படுகின்றன. நாட்டின் பாறைகளின் பிரதேச அடிதிசைகள் இங்ஙனமே காணப்படுகின்றன. இவ்வலயத்தினுள் உற்பத்தித் திறன் மிகு காரிய நாளங்கள், மூட்டுச் சம தளங்கள், ஆங்காங்கே ஏற்படும் குறைகள் என்பனவற்றில் நிரப்புதல்களாக உருவாகின்றன. இவை கிழக்கு- மேற்குத் திசையில் அமைந்துள்ளன. காலி, களுத்துறை மாவட்டங்களில் இக் காரியக் கனிப் பொருள் அமைவு, பிரதேச அடிதிசைக்குச் சமாந்தரமாக அமைந்த ஒரு பரந்த வலயத்தினுள் அமைந்து காணப்படுகிறது. இலங்கையில் நீண்ட காலமாகக் காரியப் படிவுகளைக் கொண்டு காணப்படும் பிரதேசங்கள் நாட்டின் தென்மேற்கு, வடமேற்குப் பிராந்தியங்களுக்குள்ளேயே அமைந்து காணப்பட்டாலும், இவ்வலயம் வட மத்திய மாகாணப் பகுதிக்குள்ளும் நீண்டு காணப்படுகிறது. கடந்த காலத்தில், காரியம் அகழப்பட்ட நாட்டின் அதி வடக்குப் பகுதி வவுனியாவாகும்.

இலங்கையின் காரியக் கனிப் பொருள் அமைவை ஆராய்ந்த வாடியா (1948), உற்பத்தித்திறன் மிகு காரீய நாளங்கள் "ஓர் ஒழுங்கான மாதிரியில்" அமைந்து காணப்படுகின்றன எனவும், அவை அமைந்து காணப்படும் பாறைகளின் புவிச் சரிதவியல் அமைப்புடன் அவை ஒரு வகையில் தொடர்பு கொண்டு காணப்படுகின்றன எனவும் தெரிவித்தார். புவிச்சரிதவியல் அளவீட்டுத் திணைக்களம், தற்போது காணப்படும் சுரங்கங்களிலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் கைவிடப்பட்ட சுரங்கங்களிலும் காரியக் கனிப்பொருள் அமைவின் அமைப்புக் கட்டுப்பாடுகள் தொடர்பான விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. உற்பத்தித் திறன்மிகு காரீய நாளங்களுள் பெரும்பாலானவை, மேலுருக்களின் மையங்களில் அல்லது மத்திகளில் அமைந்துள்ளமையும், அத்துடன் இந்நாளங்கள், இப் பிராந்திய புவிச்சரிதவியல் அமைப்பின் அச்சுக்கு அநேகமாக இணங்கிச் செல்லுவனவாக அமைந்துள்ளன. புவியசைவுகளின்போது, நாட்டுப் பாறைகளில் பரந்தமைந்த காரியமானது, ஆகக் குறைந்தளவு அமுக்கத்தைக் கொண்ட மூட்டுச் சமதளப் பகுதிகளைச் சென்றடைந்தன என வெளிக்கள மட்டத்தில் சேர்க்கப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன. கனிப் பொருளின் இடமாற்றத்தன்மை காரணமாக இந்நிலை ஏற்பட்டதுடன், அவ் இடைவெளிகளை காரியம் நிரப்பியது. இப்புவிச்சரிதவியல் ஆயுதமானது, விரிவான புவிச் சரிதவியற் படங்களைத் தயாரிப்பதன்மூலம் காரீயப் பொருட் படிவுகளுக்கான புதிய இடங்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

காரியமானது மின்சாரத்தைக் கடத்த வல்லதாகையால், புவிப் படைகளின் ஊடே பாய்ச்சப்படும் மின்சாரச் சகிக்ஞயானது காரீய நாளத்தைச் சந்தித்து ஓர் அசாதாரண விளைவைக் காட்டுவதுடன் இவ்விளைவானது விசேட மின் கருவியொன்றால் கிரகிக்கப்பட்டு, அசாதாரணமான ஒரு அளவீட்டை அது காட்டும். இக்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஈ. எம். துப்பாக்கி என்ற ஒரு மின்காந்தக் கருவியுடன் துணையுடன், சுமார் 200 அடி ஆழம் வரையான காரிய நாளங்களை வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கலாம். 1971-ல் புவிச்சரிதவியல் அளவீட்டுத் திணைக்களம், ரங்கல சுரங்கங்களில், மின்-காந்தத் துப்பாக்கியை உபயோகித்து உற்பத்தித் திறன் மிகு காரீய நரம்புகளை வெற்றிகரமாகக் கண்டுபிடித்து இவை பின்னர், சாய்சம சதுர மைய அகழ்வின் மூலம் நிரூபிக்கப்பட்டது. அரச சுரங்க கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் சில மின் காந்த உபகரணங்களைக் கொள்வனவுசெய்து, தற்போதுள்ள சுரங்கங்களிலும், புனரமைப்புச் செய்தற்கென ஒதுக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட சுரங்கங்களிலும், நிலமட்டத்துக்கண்மையிலுள்ள காரீய நாளங்களைக் கண்டு பிடிப்பதற்கென அவற்றைப் பயன்படுத்தியது.

காரியத்துக்கென ஓரளவு தோண்டப்பட்டுள்ள சுரங்கங்களில் மேலும் பயன்தரத்தக்களவு காரீயப் படிவுகள் காணப்படுகின்றனவா என்பதைத் தேடிக் கண்டறிவதில் இக் கருவி பெருந்துணை புரிகிறது.

இலங்கையில் காரியமானது, சேதன அடிப்படையில் உருவானதென்பதற்கான சாத்தியங்களை வாடியா (1943) மறுத்துள்ளார். தொடர்பு உருமாற்றம், கார்பன்சேர், அடுக்கு உறிஞ்சல், சுண்ணக்கல், டொலமைற், கல்சியம்- என்பனவற்றிலிருந்து தோன்றிய இரண்டாம்தரப் பொருளென அவர் நம்புகிறார். சுண்ணச் சத்துக் கொண்ட நில அடுக்கானது காரீயப் பாகத்துடன் இணைதல் வேண்டுமென்பதை இக் கோட்பாடு வலியுறுத்துகிறது; இது சில சுரங்கங்களில் அவதானிக்கப்பட்ட ஓர் அம்சமாகக் காணப்படுகிறது. சுண்ணக்கற் பாறையின் கல்சிய மூலகமானது பல்வேறு மக்னீசியம் சிலிக்கேற்றுக்களாகவும், கார்பன் அமிலமாகவும் மாற்றப்படுகிறது. உயர் வெப்பம், அமுக்கம் போன்ற நிலைமைகளால் இது நிகழ்வதுடன், ஐதரசன் காரணமாக இது வாயு அல்லது திரவக் காபன் அல்லது காரியமாக இறங்கி மாற்றமடைகிறது. வாடியாவின் (1943) இக் கோட்பாடானது, பின்னர் சரியாக ஆராயப்பட்டுப் பரீட்சிக்கப்படவில்லை. இதனால், இலங்கைக் காரியத்தின் தோற்றமானது, இன்னும் கருத்து வேறுபாடு மிக்கதாயும், ஊகத்தின் அடிப்படையில் அமைந்ததாகவுமே காணப்படுகிறது.

இலங்கையில் காரியச் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் 1971—72ம் ஆண்டு அரச சுரங்கமறுத்தல் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடம் (முன்னைய அரச காரியக் கூட்டுத்தாபனம்) ஒப்படைக்கப்பட்டது. தற்போது இக் கூட்டுத்தாபனம், அறுகம்மானவிலுள்ள போகல சுரங்கத்தையும், மதுராகொடையிலுள்ள கஹட்டகஹ, கொலொங்கஹ, வலக்கட்டஹேன ஆகிய சுரங்கங்களையும் பரிபாலித்து வருகிறது. புளத்கொஹுபிட்டியாப் பகுதியில் ரங்கலவெலிலும், மெல்சிரிபாலில் ராகெ [illegible] அமைந்துள்ள இரு பரீட்சாத்த சுரங்கங்களும் இக் கூட்டுத்தாப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தால் அகழப்பட்டு வருகின்றன. 1973—முதல் இயங்கிவரும் ரங்கல சுரங்கம் இன்னும் அபிவிருத்தி மட்டத்திலேயே காணப்படுவதுடன், வர்த்தகத் தரத்தில் மிதமான உற்பத்தியையும் தருகிறது.

கடந்த காலத்தில் காரீயம் அகழப்பட்டு வந்த ராகெதர சுரங்கம், தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. உற்பத்தித் திறன்கொண்ட நரம்புகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகள் இங்கு காணப்படுகின்றன. 1977-ல் அரச சுரங்கமகழல் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், கைவிடப்பட்டுக் காணப்பட்ட மேலுமிரு சுரங்கங்களைப் புனரமைக்க பயன்தரு நடவடிக்கைகள் பலவற்றை எடுத்தது. கேகாலை நகருக்கு அண்மையில் சியம்பலாப்பிட்டியாவிலும், போகலைக்கு அருகே புஸ்ஸஹேனையிலும் காணப்பட்ட இவ்விரு சுரங்கங்களும் இயற்கைக் காரீயத்துக்கு உலகில் காணப்பட்ட அதிகரித்த கேள்வியின் காரணமாக மீண்டும் திறக்கப்பட்டன. தேவையான எல்லா அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆரம்ப புவிப் பௌதிக,புவிச்சரிதவியல் அளவீடுகளும் முடிக்கப்பட்டுள்ளன. தேவையான இயந்திரங்களையும் வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதற்கான ஓடர்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்விரு புதிய இடங்களிலும் 1980 ஜூன் அளவில், பரீட்சார்த்த அகழ்வு, சுரங்க வழி வெட்டல் வேலைகள் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த தசாப்தத்தில் தனியார் துறை காரியச் சுரங்கம் அகழ்வு வேலைகள் செயலற்றே காணப்பட்டன. பரம்பரையான சில சுரங்கமகழ்வோரால் வவனியா, கேகாலை மாவட்டங்களில் ஆழமற்ற குழிகள் சிலவற்றில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் தவிர, குறிப்பிடத்தக்க வேறு அகழ்வு வேலைகள் எவையும் தனியார் துறையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடுவதற்கில்லை.

### இயற்கைக் காரீய இருப்புக்கள்

மூட்டுச் சமதளங்களிலும், பிளவுச் சமதளங்களிலும் ஒழுங்கற்ற ரீதியில் காரீய கனிப் பொருள் அமைவானது காணப்படுவதன் காரணமாக, அகழ்ந்தெடுக்கப்படக் கூடிய காரியப் படிவுகளை நிச்சயப்படுத்தியோ அல்லது ஓரளவு நிச்சயமாகவோ கூறமுடியாதுள்ளது. 1900க்கும் 1910-ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் காரிய ஏற்றுமதியானது வருடாந்தம் 30,000 தொன்னுக்கும் அதிகமாகக் காணப்பட்டது. இக் கேள்வியானது, தொடர்ந்த ஆண்டுகளில் வீழ்ச்சியுற்றதுடன், அண்மைய ஆண்டுகள் வரை இக் கைத்தொழில் பல நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும் எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. எனினும், கடந்த 100 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 1,500,000 தொன் காரியம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாயும், தற்போது வருடாந்த ஏற்றுமதியானது ஏறத்தாழ 10,000 மெட்ரித் தொன்னுகக் காணப்படுவதாயும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, இன்னும் கிடைக்கவுள்ள (அதாவது இருப்பிலுள்ள) காரியத் தொகையானது (அளவானது) இத்தொகையைவிட பல மடங்கு அதிகமானதென்று கருத இடமுண்டு. பாரம்பரியமாக காரீயம் அகழப்பட்டுவரும் பகுதிகளில் காணப்படக்கூடிய இருப்பானது, வடக்கு, வட கிழக்குப் பகுதி வரை விஸ்தரித்து காணப்படும் காரிய வலயம் காரணமாக மேலும் அதிகரிக்குமென்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அரச சுரங்கமகழல் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கைவிடப்பட்ட சுரங்கங்களை மீளத் திறந்து காரிய அகழ்வு வேலைகளில் ஈடுபடுவதில் விசேட அக்கறை செலுத்தி வருகிறது. உற்பத்தி நரம்புகளின் உள்ளார்ந்த தன்மைகளை மதிப்பீடு செய்து கொள்ளவும், தரை கீழ் நாளமாதிரிகளை நிச்சயம் செய்து கொள்ளவுமென இலக்குப் பகுதிகள் விரிவாக அளவீடு செய்யப்படவுள்ளன. நாளங்களின் போககையும் தன்மையையும் தீர்மானிக்கவும், தாது இருப்பு வளங்களை அபிவிருத்தி செய்வதற்குமான அகழ்வு வேலைகள் அடுத்துத் தொடரும்.

கைவிடப்பட்ட ஒரு காரியச் சுரங்க வேலைத் தலத்தை புதுப்பித்து அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதற்குத் தேவைப்படும் ஆரம்ப மூலதனச் செலவு சுமார் 5 முதல் 6 மிலியன் ரூபாவாகும். ஜெக்ஹெமர்ஸ், கொம்பரஸர்ஸ் போன்ற இயந்திரங்களையும் இச் செலவுகள் உள்ளடக்குகின்றன. இத்தகைய உயர் ஆரம்பச் செலவினங்கள் காரணமாகவும், இந்நடவடிக்கைகளை உத்தேச அடிப்படையிலேயே மேற்கொள்ள வேண்டியதன் காரணமாகவும் தனியார் துறையினர் இச் சுரங்கமகழல் வேலைகளில் ஈடுபடத் தயங்குகின்றனர். போதிய நிதி வசதியின்மை காரணமாக, அரச சுரங்கமகழ்வு, கனிப் பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இந் நோக்கங்களுக்கு நிதி உதவிகள் செய்யக் கூடிய நிலையிலும் இல்லை. தற்போது இக்கூட்டுத்தாபனம் காரீயத்துக்கு 25 சதவீத ஏற்றுமதித் தீர்வையைச் செலுத்தி வருகிறது. இதேவேளை கனிப்பொருள் நடவடிக்கைகளிலீடுபடும் அரச கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம், அரச இரத்தினக் கல் கூட்டுத்தாபனம் போன்ற ஏனைய அரச துறை நிறுவனங்கள் தமது ஏற்றுமதிகளுக்கு எத்தகைய தீர்வைகளையும் செலுத்துவது கிடையாது. அரச சுரங்கமகழல் கனிப் பொருள் அபிவிருத்திக்கூட்டுத்தாபனத்துக்கும் இத்தகைய ஒரு சலுகை வழங்கப்படும் பட்சத்தில், ஏற்றுமதித் தீர்வையை மீதப்படுத்துவதால் கிடைக்கும் பணத்தை இலங்கையின் கைவிடப்பட்ட காரீயச் சுரங்கங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம்.

காரிய அகழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காகும் உயர் செலவுகள் சிறு அளவில் அகழ்வு நடவடிக்கைகளை மேற் கொள்வோரையும் பாதித்துள்ளது. காரீய அகழ்வுக்கென இத்தகைய சிறு அளவைத் தொழிலாளருக்கு, உள்ளூர் வர்த்தக வங்கிகள் முன் வந்து கடனுதவி வழங்கலாம். செயற்திட்டச் சாத்தியங்கள் பற்றிய அறிக்கைகளைத் தயார் செய்தற்கான ஸ்தாபனங்கள் எவையும் இல்லாதிருப்பதே இங்ஙனம் நிதி வழங்கலில் பெரும் தடையாகக் காணப்படுகிறது. காரிய அகழ்வுக் கைத்தொழில் தற்போது ஒரு பூரிப்பு நிலையிற் காணப்படுகிறது. உலகில் முன்னெப்போதும் இல்லாதளவு காணப்படும் இயற்கைக் காரியத்துக்கான கேள்வி, அரச துறை மாத்திரமே அதன் வரையறைக்குட்பட்ட வளங்களுடன் தற்போது இச் சுரங்கமகழல், ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடல் ஆகியன இதற்கான காரணங்களாகவுள்ளன. நாட்டில் உள்ளார்ந்த இயற்கைக் காரிய வளங்களை மீள ஆய்வு செய்து, அதிகளவில் அகழ்தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இது உசிதமான காலமாகும்; உலகில் நிலவும் உயர் கேள்வியை நன்கு பயன்படுத்திப் பயன்பெற இது பெரிதும் உதவும். கைவிடப்பட்ட காரீயச் சுரங்கங்களை மீள அகழ்வுக்குப் பயன்படுத்தும் விஷயத்தில் உதவ அரசாங்கம், அரச சுரங்கமகழல் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்கு உதவ முன்வர வேண்டும். குறிப்பாக தும்பறை, மீகஹத்தென்னப் பகுதிகளில் உள்ள பழைய சுரங்கங்களை புனரமைக்க இவ்வுதவி தேவை. அபிவிருத்தி நிதி இருப்பொன்றை உருவாக்குவதன்மூலம் இதனை அரசாங்கம் மேற்கொள்ளலாம். வர்த்தக வங்கிகளில் கடனுதவி பெற்று, தனியார் துறையும் காரிய அகழ்வுத் துறையிலீடுபடத் தூண்டப்பட வேண்டும். செயற் திட்டச் சாத்திய அறிக்கைகளை ஆராய்ந்து வங்கிகள் இத் துறைக்கும் கடன் வழங்கலாம். இக் கைத்தொழில் மூலம் கிடைக்கும் இலாபத்தில் ஒரு குறித்த வீதத்தை இதன் விரிவுக்கென மீள முதலீடு செய்தல் அத்தியாவசியமாகும். ஏற்றுமதிகள் இக் கைத்தொழிலில் உள்ளார்ந்த வளங்களை முற்றுகப் பயன்படுத்திக் கொள்ளவும் மேன்மேலும் கூடிய தொகை வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கவும் இது உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

1912-ம் ஆண்டுக்கு முன்பு காரீயத்தில் நடைபெற்ற உலக வர்த்தகத்தில் பாதி இலங்கையின் வசமிருந்தது. ஆனால், 1920 களில் அது ஏறக்குறைய பத்தில் ஒரு பங்குக்குக் குறைந்துவிட்டது. நெருக்கடிக்கு முன்பு இலங்கையின் ஏற்றுமதிகளில் காரீயம் சுமார் 10 சதவிகிதமாயிருந்தது. திடீர்ச் சுபிட்ச வருடங்களில் இது 20 சதவிகிதத்துக்குக்கூட அதிகரித்தது. ஆனால், நெருக்கடிக்குப் பின்னர் அது 1 சதவிகிதத்துக்கும் குறைவாக வீழ்ச்சியடைந்துவிட்டது. இரண்டாவது உலக மகாயுத்தத்துடன் ஏற்பட்ட திடீர் வர்த்தக அதிகரிப்பின்போது தவிர மற்றப்படி காரீயக் கைத்தொழில் இந்நிலையிலிருந்து மீளவே முடியவில்லை. 1860 களிலிருந்து அது வகித்து வந்த முக்கியத்துவமும், அனுபவித்து வந்த வசீகரமும் மறைந்துவிட்டன. தொழில் முயற்சியாளர்களுக்கோ அல்லது தொழிலாளர்களுக்கோ அது கவர்ச்சியளித்து வந்த காலம் மலையேறிவிட்டது. இக்காலத்திலேதான் ரப்பர் வர்த்தகத்தில் இலங்கை ஒரு திடீர்ச் சுபிட்ச நிலையை அனுபவித்துக் கொண்டிருந்தது. இதனால் அநேக காரீயத் தொழில் முயற்சியாளர்களும் தொழிலாளர்களும் அதிக இலாபம் தந்த இந்தத் தொழில் துறைக்கு மாறினர்.

ஒருசில பெரிய சுரங்கங்களின் தெளிவு முறையான முதிர்ச்சியும் நிலைமாறுதல்களுக்கு உள்ளாகாமலிருக்கவில்லை. 1930 களில் ஏற்பட்ட பெரும் பொருளாதார, வர்த்தக மந்தம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. மேலும், சில சுரங்கங்களில் உற்பத்தி நின்றது. 1940 களில் ஒப்பியல்ரீதியாக ஒரு திடீர்ச் சுபிட்சநிலை தோன்றியது. ஆனால் இது இரண்டாவது உலக மகாயுத்தத்துடன் வந்த ஒரு தற்காலிக நிலையாகவே இருந்தது. 1950-ம் ஆண்டுக்குப் பின்பு, சகல அதிர்ஷ்டச் சக்கரச் சுழற்சிகளுக்கும் தாக்குப்பிடித்துநின்ற 3 சுரங்கங்களான போகல, கஹட்டகஹ, கொலன்கஹ ஆகியவை இலங்கைக் காரீயத்துக்குக் கிடைத்த வரையறுத்த சந்தையை ஸ்திரப்படுத்திக் கொண்டன.

## காரீயச் சுரங்க அகழ்வுத் தொழில் முயற்சியாளர்

மேலே விமர்சிக்கப்பட்டது போல, காரீய வர்த்தகம் பிரிட்டிஷாரின் கைகளில் உறுதியாக இருந்த அதே வேளையில், காரீய வர்த்தகத்துக்குப் புறம்பாக, காரீயச் சுரங்கக் கைத்தொழிலுக்குள் அவர்களால் எந்த ஆக்கிரமிப்பும் நடத்த முடியவில்லை. காரீயப் படிவுகளும் காரீயச் சுரங்கங்களும் எந்தப் பகுதிகளில் இருந்தன?

களுத்துறை மாவட்டத்திலுள்ள பஸ்துன் கோறளையிலேதான் ஆரம்பத்தில் வர்த்தக ரீதியாகப் படிவுகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு வேளை டச்சுக்காரர் அவற்றைக் கண்டுபிடித்ததை அடுத்து, அப்படி நடைபெற்றிருக்கலாம். 1830ம் வருட இலங்கை நீல ஏட்டில் "பஸ்துன் கோறளையில் உள்ள மூன்று காரீயக் கற்குழிகளில் 55 துண்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காரீயக் குழிகளைப்பற்றி வேறெந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. 1836-ம் ஆண்டளவில் காரீயக் குழிகளினதும் கற்குழிகளினதும் தொகை 28 க்கு அதிகரித்துவிட்டது. அவற்றில் "1715 புசல்கள்" உற்பத்தி செய்யப்பட்டன. 1840-ம் ஆண்டுவரை சகல காரீயக் குழிகளும் பஸ்துன் கோறளையில் மட்டுமே இருந்ததாகத் தோன்றுகிறது. 1840-ம் ஆண்டில் தென் மாகாணத்தில் மூன்று காரீயக் குழிகள் இருந்ததாகவும், 1847-ம் ஆண்டில் சபரகமுவ மாகாணத்திலும் காரீயக் குழிகள் இருந்ததாகவும் இலங்கை நீல ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இரு திசைகளில் சுரங்க அகழ்வு பரவுவதை இங்கு நாம் அவதானிக்கலாம் — தெற்கில் கரையோரமாகவும், சபரகமுவ மாவட்டத்தின் உள் பகுதியிலும். 1850 களின் பிற்பகுதியில் காரீயக் கைத்தொழில் முக்கியத்துவம் பெற்றதுடன், நாட்டின் உட்பகுதிக்குள் மேலும் விஸ்தரித்தது. 1854-ம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் உள்ள ஹரிஸ்பத்துவையில் ஒருசில காரீயக் குழிகள் இருந்தனவென்று நீலப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1861-ம் ஆண்டளவில் வடமேற்கு மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டத்தில் காரீயக் குழிகள் உள்ளனவென்ற முதலாவது குறிப்பு காணப்படுகிறது. அடுத்து வந்த ஆண்டுகளில், குறிப்பாக 19-ம் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதியில் குருநாகல் மாவட்டம் காரீயச் சுரங்க அகழ்வுக்கு மிக முக்கியமான பிரதேசமாகியது. எனினும் தென் மாகாணத்திலும் மேற்கு மாகாணத்திலும்கூட சுரங்க அகழ்வு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றன. 20-ம் நூற்றாண்டில் கேகாலை மாவட்டமும் குருநாகல் மாவட்டத்துடன் சம முக்கியத்துவம் வகிக்கும் அந்தஸ்தைப் பெற்றது.

மேட்டிமையாளர் பற்றிய அண்மைய ஆராய்ச்சிகளிலிருந்து, பர்மா, மலேசியா ஆகிய ஆசிய நாடுகளில் உள்ள நிலைமைக்கு மாறாக, இலங்கையில் பொருளாதார—சமூகச் செல்வாக்கின் உயர் மட்டத்திலும், கீழ்மட்டத்திலும் உள்ள இடுக்குகள் (இடைவெளிகள்) புதிதாக வந்து குடியேறிய இந்திய வர்த்தகர்களாலோ அல்லது சீன வர்த்தகர்களாலோ நிரப்பப்படவில்லை என்பதும், இந்தப் பாத்திரங்கள் பெரும்பாலும் சுதேசிகள் சிலராலேயே ஏற்கப்பட்டன என்பதும் தெரிய வருகிறது. இத்தகைய பொருளாதார நடவடிக்கைகள் இலங்கையரான உயர்வகுப்பார் குழுவொன்றின் அல்லது நடுத்தர வர்க்கமொன்றின் வளர்ச்சிக்கும் உதவியுள்ளன. இந்தச் சுதேச அம்சத்தைத் துருவி ஆராய்ந்து, ஒரு வெங்காயத்தின் தோலுரிப்பதற்கு ஒப்பான சரித்திர முறையியலைப் பிரயோகித்த மைக்கல் ரூபர்ட், முதலாவதாக, புதிய தொழில் முயற்சியாளர்களுக்கும் தாழ்நிலச் சிங்களவர்களுக்குமிடையே அதிகரித்து வரும் அர்த்த புஷ்டியுள்ள ஒரு தொடர்பைக் கண்டுபிடித்துள்ளார்; இரண்டாவதாக, சமபூமிச் சிங்களவர் சமூகத்துக்குள்ளே ஆதிக்க வல்லமை பொருந்திய சில ஜாதிகள்; இந்தப் பிரதான ஜாதிகளுக்குள்ளே ஒரு குறிப்பிட்ட ஜாதி; இறுதியில், இந்தக் குறிப்பிட்ட ஜாதிக்குள்ளே, மொரட்டுவை, காலி போன்ற சில முக்கியமான கரையோர நகரங்களில் வசிப்போர். பல்வேறு மூலங்களிலிருந்து கிடைத்த சான்றுகளிலிருந்து, ஒருசில ஐரோப்பியத் தொழில் முயற்சியாளர்கள் நீங்கலாக, காரீயச் சுரங்க அகழ்வில

ஈடுபட்டோர் பிரதானமாகச் சமபூமிச் சிங்களவர்களாகவே இருந்தனர் என்று தெளிவாகத் தெரிகிறது. அவர்களுக்கிடையே மொரட்டுவையைச் சேர்ந்த ஒரு குறிப்பிடத்தக்க தொகையினர் இருப்பதாகத் தோன்றுகிறது. சமபூமிச் சிங்களவர்களான மேட்டிமையாளரின் எழுச்சிக்கு உதவிய சரித்திரக் காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவையாவன: கொழும்பு, காலி ஆகிய நகர்ப்புற வர்த்தக மையங்களின் அண்மை; கடற்கரைக்கு அருகில் இருப்பதன் விளைவாகக் குடியேற்ற நாட்டு அரசுகளுடன் காலநேரத்தில் தொடர்பு, வர்த்தக உறவுகள், மேனாட்டு நாகரிகமயமாதல்; அத்துடன் பெரும் கிறிஸ்தவ மதமாற்ற நடவடிக்கைகளுக்குட்படும் நிலை; பெருந் தொகையான ஆங்கிலப் பாடசாலைகள் நடைபெற்ற பிரதேசங்கள். இக் குடும்பங்களில் பல சாராயத் தவறணைகளைக் குத்தகைக்கு எடுத்து நடத்தும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தன. ஆதலால் மூலதனத்தைப் பெருமளவுக்குத் திரட்ட முடிந்தது. இந்த மூலதனத்தைச் சாராயக் குத்தகையுடன் ஒட்டிய சமூக இழுக்கை உதறிவிட உதவிய மற்றும் நடவடிக்கைத் துறைகளில் குறிப்பாகக் காரீயச் சுரங்க அகழ்விலும், தென்னந் தோட்டச் செய்கையிலும் முதலீடு செய்யவே அவர்கள் அடிக்கடி விரும்பினர்.

காரீயக் கைத்தொழிலில் இறங்கிப் பெருவெற்றி பெற்ற தொழில் முயற்சியாளர்கள் அந்தஸ்துப் பரிமாணத்தில் ஏற்பட்ட உயர்வுடன் கூடவே பொருளாதார — அதிகார வல்லமைப் பரிமாணத்திலும் மேல் செல்ல அவர்களுக்கு இக் கைத்தொழில் வசதியளித்தது. அது சமூக சலனத்துவத்தின் ஒரு வாயிலாக அமைநதது.

காரீயச் சுரங்கக் கைத்தொழிலில் பிரவேசிக்க பிரிட்டிஷாரால் முடியவில்லை. ஒரு பிரிட்டிஷ் சுரங்க எஞ்சினியரான ஜோர்ஜ் ஏ. ஸ்டோனியர் 1903-ம் ஆண்டில் சுரங்க எஞ்சினியர்கள் கழகத்தின் வர்த்தமானங்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் நடைபெறும் காரீயச் சுரங்க அகழ்வுகளைப்பற்றி எழுதுகையில் இதற்கான காரணங்களைத் தெரிவித்துள்ளார். “மூன்று சுரங்கங்களைத் தவிர மற்றெல்லாச் சுரங்கங்களும் இலங்கைச் சுதேசிகளால், கிட்டத்தட்ட சுதேச முறையில் வேலை செய்யப்படுகின்றன. ஐரோப்பிய முறைகள் பரீட்சிக்கப்பட்டுள்ளன. ஆனால், முகாமையாளரின் அனுபவக் குறைவு காரணமாகவோ அல்லது சுரங்க அகழ்வுகளுக்குக் கம்பெனி நல்ல இடத்தைத் தெரிவு செய்யாத துர்ப்பாக்கியத்தினாலோ அவை பொதுவாகத் தோல்வி அடைந்துள்ளன. அப்பிரகம் (மைக்கா), நவரத்தினங்களுக்கான சுரங்க அகழ்வுகளைப்போலக் காரீயச் சுரங்க அகழ்வும் சற்றும் நிச்சயமற்றதாகும். ஆனால், சுதேசிக்குச் செலவுகள் குறைவு. எனவே, அவர் சுரங்கமொன்றைச் சோம்பிக் கிடக்கவிட்டு விலை உயர்வுக்காகக் காத்திருக்க முடியும்.”

ஸ்டோனியர் குறிப்பிட்ட காரணங்களை விரிவாக்கி, காரீயச் சுரங்கக் கைத்தொழிலில் இலங்கையர்கள் ஆதிக்கஞ் செலுத்துவதற்கும், அதில் பிரிட்டிஷார் அடியெடுத்து வைக்க முடியாமற் போனதற்கும் அடிகோலிய பல காரணங்களை நாம் கூறலாம். பிரிட்டிஷார் துரிதமாக நவீனமயமாக்கும் போக்குள்ளவர்கள். அவர்கள் இயந்திரசாதனங்களிலும், நவீன சுரங்க அகழ்வு முறைகளிலும் கனத்த மூலதனத்தை முதலீடு செய்தார்கள். பிரிட்டிஷாருக்குச் சொந்தமான சுரங்கமொன்றில் 1909-ம் ஆண்டிலேயே மின்சார பாரந்தூக்கிகள் ஏற்படுத்தப்பட்டன. 1910-ம் ஆண்டில் பாதாள தண்டவாளங்களும் டிராலி வண்டிகளும் டிராலியில் கூடுள்ள பாரந்தூக்கிகளும் அமைக்கப்பட்டன. இலங்கையர்கள் படிப்படியாக நவீனமயமாக்கும் போக்குள்ளவர்கள். மின்சாரப் பாரந்தூக்கிகள், நவீன சுரங்க அகழ்வு முறைகள் முதலியவற்றைக் கொண்டிருந்த இலங்கையருக்குச் சொந்தமான முதலாவது சுரங்கம் போகலையில் இருந்தது. 1950களின் முற்பகுதியில்தான் இப்படிச் செய்யப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சில பிரிட்டிஷ் சுரங்கச் சொந்தக்காரர்களால் நவீன சுரங்க அகழ்வு இயந்திர சாதனங்களிலும் முறைகளிலும் மிதமிஞ்சி முதலீடு செய்யப்பட்ட மூலதனத்திலிருந்து கிடைத்த அற்ப பிரதிபலனுக்கு மாறாகக் காரீயப் படிவுகளின் தன்மையையும், காணி உடைமை அமைப்பு முறைகளையும் கருத்திற்கொண்டு படிப்படியாக நவீன முறைகள் புகுத்தப்பட்டதால் இந்தச் சுரங்கம் பொருளாதார வாழ்தகவுள்ளதாகியது. இந்தத் தோல்விகள் காரீயச் சுரங்கக் கைத்தொழிலில் மற்றும் பிரிட்டிஷ் முதலீடுகளைத் தடுத்திருக்கலாம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்கள்வரை, எந்த முறைப்படியான கனிப்பொருள் பரிசீலனைகளும் மேற்கொள்ளப்படவில்லை. காரீயப் படிவுகள் காணப்பட்ட இடங்களைப்பற்றி பிரிட்டிஷார் முன்கூட்டியே அறிந்திருப்பது சாத்தியமில்லை. காரீயக் கைத்தொழிலில் பிரவேசிப்பதினின்றும் பிரிட்டிஷாரைத் தடுப்பதற்காக, அவர்கள் காரீயக் காணிகளைத் தேடிக்கொண்டிருக்கையில் வீணாகத் தேடியலையும் முயற்சிகளில் ஈடுபட அவர்கள் தூண்டப்பட்டிருப்பதும் சாத்தியம். இவ்விதமாக “மோர்கன் குருசிபிள்ஸ்” நிறுவனத்தைச் சேர்ந்த ஸெப்டிமஸ் மோர்கன் 1866-ம் ஆண்டில் காரீயக் காணிகளைத் தேடி இலங்கைக்கு வந்தார். ஆனால், அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவரே கூறுகிறார்: “அது மிகக் கஷ்டமான அலுவலாயிருந்தது... காரீயச் சுரங்கமோ அல்லது காணிகளோ எங்கே இருக்கின்றன என்று கேட்டபோது, சுதேசிகள் சற்றும் ஒத்துழைக்கவில்லை.” கனிப்பொருள் பரிசீலனைகள் பூர்த்தி செய்யப்பட்ட காலத்துக்குள் அஃதாவது 1909-ம் ஆண்டுக்குள், காரீயக் கைத்தொழில் செழித்தோங்கிய காலம் கடந்துவிட்டது. அக்கைத்தொழிலில் இலங்கையர்கள் உறுதியாகக் காலூன்றிவிட்டனர். அஃதெப்படி இருப்பினும், இந்தப் பரிசீலனைகள் இலங்கையில் உள்ள கனிப்பொருள் படிவுகளின் தன்மையையும், வெளிநாடுகளில் இத்தகைய படிவுகள் உள்ள பிரதேசங்களையும் அறிவதற்காகவே மேற்கொள்ளப்பட்டன.

பிரிட்டிஷார் வெற்றி பெறாததற்கு மற்றுமொரு காரணம், அவர்கள் திறந்த ஒருசில சுரங்கங்களில் நிரையாகவோ அல்லது விஸ்தாரமாகவோ படிவுகள் இல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாதிருந்தமையாயிருக்கலாம். இலங்கையரான தொழில் முயற்சியாளர்களிடையேகூட, விஸ்தாரமான அளவில் படிவுகள் உள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் அதிர்ஷ்டம் வாய்ந்தவர்களே வெற்றிபெற்று, இக்கைத்தொழிலின் நிலைமாறுதல்களினின்றும் தப்பிப் பிழைத்தனர்.

பிரிட்டிஷார் வழக்கமாக முதலீடு செய்யும் துறைகளான தேயிலை, ரப்பர் ஆகியவற்றிலே ஆதாயம் அதிகமாகவும் துரிதமாகவும் கிடைத்ததால், காரீயம் அவர்களுக்கு அவ்வளவு கவர்ச்சியளிக்காதிருந்திருக்கலாம்

## காரீயச் சுரங்க அகழ்வு முறைகள்


காரீயச் சுரங்க அகழ்வு முறைகளில் சில பாரம்பரிய இரத்தினக்கல் அகழ்வு முறைகளிலிருந்தும், பழக்க முறைகளிலிருந்தும் இரவல் வாங்கப்பட்டனவென்பதற்கு நியாயமான சான்றுகள் உள்ளன. இரத்தினக்கல் அகழ்வு பண்டைக்காலத்திலிருந்தே இலங்கையில் நடைபெற்று வந்துள்ளது. 19-ம் நூற்றாண்டின் மத்தியில் காரீயக் கைத்தொழில் இயங்கும் கட்டத்தை அடைந்தபோது, இரத்தினக்கல் அகழ்வில் ஸ்தாபிதமான பாரம்பரிய முறையொன்று சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வந்தது. இரத்தினக்கல் அகழ்வில், திறந்த வார்ப்பு அகழ்வு முறையும், அத்துடன் ஆழமான குழிகளிலும் இடைக்கிடை 'இல்லம்'ப் படலங்களின் ஓரமாக இத்தகைய குழிகளிலிருந்து கிடையாகச் செல்லும் குடைந்த சுரங்கப் பாதைகளிலும் அகழும் முறையும் அறியப்பட்டிருந்தன. இது ஆரம்ப கட்டத்தில் காரீயச் சுரங்க அகழ்வுக்கு ஏற்றதாயிருந்தது. எனினும், காரீயப் படிவுகள் "நவரத்தின இல்லங்களை"விட வெகு ஆழமான மட்டங்களிலேயே காணப்பட்டன. மேலும் காரீயப் படிவுகளின் அல்லது படலங்களின் நில உள்ளியல் பண்புகள் செங்குத்தாகவும் கிடையாகவும் தொடர்ந்ததால், காரீயச் சுரங்க அகழ்வு நவரத்தினச் சுரங்க அகழ்வைவிடச் சிக்கலான ஒரு முறையாக வளர்ந்தது. காரீயப் படிவுகள் ஆழமான மட்டங்களில் இருந்தால், படலம் காணப்பட்ட இடத்தில் இருந்து நெடுக ஒரு குழியிலிருந்து கிடையாகக் குடைந்து



அன்றும்.....

செல்வது அண்டைக் குழிகளைத் தோண்டுவதைவிடச் சிக்கனமாயிருந்ததென்பது தெளிவு. ஆழமான மட்டங்களில் அடிக்கடி பாறைகளின் மேல் பாரம் இருந்ததால் கிடையாக வழியைக் குடைந்து செல்வது நவரத்தினக் குழிகளில்விட அதிக பாதுகாப்பாக இருந்திருக்கக் கூடும். இவையெல்லாம் பிரதான குழியில் இருந்தோ அல்லது பாதையிலிருந்தோ கிடையாகச் செல்லும் வலைப் பின்னல் போன்ற சிக்கலான குறைந்த வழிகளைக் கொண்டிருக்கும் முறையில் காரீயக் குழிகளை அமைக்கும் பழக்கத்துக்கு ஊக்கமளித்திருக்கலாம்.

1870ம் ஆண்டளவில் காரீயக் கைத்தொழில் அதன் முக்கியமான கட்டத்தை அடையும்போது, காரீயச் சுரங்க அகழ்வோ அல்லது தொழில் நுட்ப முறையோ ஸ்திரமடைந்துவிட்டது. காரீயப் படிவுகளின் நில உள்ளியல் அம்சங்கள் பாதாளச் சுரங்க அகழ்வின் வளர்ச்சிக்கு அடிகோலியது. இது இப்பொழுது நவரத்தினச் சுரங்க அகழ்விலிருந்து குறிப்பிடத்தக்களவு வித்தியாசப்பட்டது. கிடையாகவோ அல்லது செங்குத்தாகவோ காரீயப் படலங்களைத்




தொடர்ந்து செல்லவேண்டியிருந்த அவசியத்தினால் வலைப் பின்னல் போன்ற பாதைகளையும், நுழைவாயில்களையும், குடைந்த வழிகளையும் கொண்ட பாதாளச் சுரங்க அகழ்வு விருத்தியுற்றது. எனினும், பல சந்தர்ப்பங்களில் இது ஒரு விஞ்ஞான அடிப்படையில் அமையவில்லை. இந்தக் காலத்திலே சில சுரங்க அகழ்வு வேலைகளுக்கு இயந்திர சாதனங்களை உபயோகிக்கத் தொடங்கியமையையும் நாம் காண்கிறோம். இது பின்பு காரீயக் கைத்தொழில் அதிக திறமையாக நடைபெறுவதற்கும், அதிக இலாபம் தருவதற்கும் அடி-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இன்றும்.....

கோலியிருக்கலாம். இயந்திர சாதனங்கள் புகுத்தப்பட்டதனுல் காரீயத்தைப் பிரித்தெடுக்கும் வேகம் அதிகரித்ததுடன், முன்பு நெருங்க முடியாதென்று கருதப்பட்ட படிவுகளிலிருந்து காரீயத்தைப் பிரித்தெடுக்கும் நடவடிக்கையும் சாத்தியமாகியது.

"குழிகளில்" எல்லா வேலைகளும கையாலேயே செய்யப்படுகின்றன. சில சமயங்களில் கையால் இயக்கப்படும் பாரமிழுப்பு இயந்திரத்தினுலோ அல்லது பாரத்தை மேலுயர்த்தும் இயந்திரத்தாலோ வேலைகள் செய்யப்படுகின்றன. "சுரங்கங்களில்" செங்குத்தான பாதையொன்றோ அல்லது கிடையாயுள்ள பிரவேச வழிகளோ உள்ளன; அல்லது செங்குத்தான பாதையும் பிரவேச வழிகளும் உள்ளதாய், பிரதான பாதைக்கு அல்லது நுழை வாயிலுக்கு அப்பால் மேற்புறத்துக்குச் சம தூரத்திலுள்ள குடைந்த வழிகளையும், படிக்கட்டு அமைப்பிலான மேற்றட்டுகளை (காலரிகள்)யும் கொண்டுள்ளன. "சுரங்கங்களில்" காரீயத்தைப் பிரித்தெடுக்கும் வேலையும் அடைக்கும் வேலையும் கையாலேயே செய்யப்பட்டனவென்றுலும், நீரை வெளியே இறைப்பதற்கும் பிரித்தெடுக்கப்பட்ட காரீயத்தையும் கழிவுப் பொருள்களையும் மேலிழுப்பதற்கும் இயந்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. இலங்கையின் சுரங்கப் பாஷையில், "சுரங்கங்கள்" மோல பத்தல் என்றும் "குழிகள்" பாரத்தை மேலுயர்த்தும் இயந்திரத்தைக் கொண்டிருந்தால் டபாரே பத்தல் என்றும் அழைக்கப்பட்டன. "குழிகளும்" "சுரங்கங்களும்" ஒரு தொடர்ச்சியான அமைப்பின் இரு முனைகளேயாகும் என்பது இங்கு குறிப்பிடப்படல் வேண்டும். இவ்விரண்டின் அம்சங்களையும் கொண்ட அநேக இடைப்பட்ட வகைகளும் இருந்தன. எண்ணளவில் குழிகள் சுரங்கங்களை விட அதிகமாயிருந்திருக்கும். சுரங்கங்கள் கிட்டதட்ட முற்ருக நீராவியாலேயே இயக்கப்பட்டன. எனினும், அபூர்வமான பிரிட்டிஷ் சுரங்கத் தொழில் முயற்சியாளர்களில் ஒருவர் மின்சாரத்தை உபயோகிக்க ஒரு நூதன முயற்சியைச் செய்துள்ளார். மிகப பெரிய சுரங்கங்களில், சுரங்கத் தொழிலாளர்களைப் பாதைகளில மேலும் கீழும் கொண்டு செல்வதற்காக ஏற்றிறக்க வாளிகள் போதியளவு பெரிதாகச் செய்யப்பட்டன. காரீயக் கைத்தொழில் சிணிக்கத் தொடங்கும் வரை இந்தச் சுரங்க அகழ்வு முறை 20-ம் நூற்றுண்டு வரை நீடித்தது.

### மகாயுத்த காலம்

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்ற ஆண்டுகள் காரீயக் கைத்தொழிலுக்குச் சுபிட்சமான வருடங்களாயிருந்தன. இக்காலத்திலே காரீயச்சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் உத்வேகம் பெற்றன. யுத்த வருடங்களின்போது சுமார் ஓராயிரம் குழிகள் இருந்தன. ஆனுல், யுத்தத்துக்குப் பின் விரைவிலேயே குழிகளின் தொகை இருபத்தைந்துக்குக் குறைவாக வீழ்ச்சியடைந்துவிட்டது. இவற்றில், உற்பத்தியளவில் முக்கியத்துவம் பெற்றிருந்த சுரங்கங்கள் மூன்றுகும். அவையாவன: போகல, கஹட்டகஹ, கொலன்கஹ. 1950 களில் இலங்கையில் நடைபெற்ற காரீயச் சுரங்கக் கைத்தொழிலின் மிக முக்கியமான அம்சம் யாதெனில், போகல சுரங்கங்களில் செய்யப்பட்ட தொழில்நுட்ப அபிவிருத்திகளும் அவற்றின் பரிமாணத்தில் ஏற்பட்ட வளர்ச்சியுமாகும். யுத்த முடிவில் போகல ஏற்றுமதிகள் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 25 சதவீதமாயிருந்தன ஆனுல், 1950 களின் பிற்பகுதியில் இவை ஏறக்குறைய 65 சதவிகிதமாயிருந்தன. 1960 களில் போகல சுரங்கங்கள் சர்வதேச ரீதியாக எந்த நவீன சுரங்கங்களுடனும் ஒப்பிட்டுக் கூறும்படியாக விளங்கின. போகல சுரங்கங்களின் வியத்தகு வளர்ச்சிக்கான காரணிகளைக் கீழ்க் கண்டவாறு சுருக்கிக் கூறலாம்:

1- யுத்த காலத்தில் குவிக்கப்பட்ட மூலதனம் ஒருவேளை நவீனமயமாக்கும் வேலைத் திட்டத்துக்குரிய நிதிகளை வழங்கியிருக்கலாம்.
2- 1860 களில் தோன்றிய போகல சுரங்கங்கள் பல குழிகளைக் கொண்ட ஒரு திரளாகவே இருந்தன. ஆனுல், 19-ம் நூற்றுண்டின் திருப்பத்தில் அவை மூன்று பெரிய சுரங்கங்களாக — மகா போகல, புஞ்சி போகல, காந்தவத்த சுரங்கங்கள் — மறுதோற்றம் பெற்றன. 1920 களில் புஞ்சி



Appropriate Te... Services
121, POINT P...
NALLUR, JAFFNA
No.

போகல சுரங்கங்கங்களும் பெர்னாண்டோ குடும்பத்தின் கைகளுக்குள் சென்றுவிட்டனவென்றும், கரந்தவத்த சுரங்கங்கள் 1947-ம் ஆண்டிலேதான் இணைக்கப்பட்டன. இந்த மொத்த உடைமை இப்பொழுது போகல சுரங்கங்கள் என்று அழைக்கப்படும் முழுச் சுரங்க அமைப்பு சம்பந்தமாகவும் ஒன்றிணைந்த நவீன மயமாக்கும் வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு வசதியளித்தது என்பதில் சந்தேகமில்லை.

3- போகலையிலிருந்த காரீயப் படிவுகளின் வளம் நவீனமயமாக்கும் வேலைத்திட்டம் ஒன்றின் பயனுறுதிக்கு வாய்ப்பளித்தது. இத்தகைய நவீனமயமாக்கும் வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்த மற்றிரு பெரிய சுரங்கங்களான கொலன்கஹாவும், கஹட்டகஹாவும் போதிய வளமற்றதாயிருந்தனவா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.

4- போகல கிராபைட் லிமிட்டெட்டின் முகாமைத்துவ ஆற்றல் (சுரங்கங்களைத் தொழிற்படுத்துவதற்காக 1942-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு தனியார் கம்பெனியான இதில் பங்குதாரர்கள் பெரும்பாலும் பெர்னாண்டோ குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.)

அடுத்தாற் போல் மகாயுத்தத்துக்குப் பிற்பட்ட வருடங்களில் காணப்பட்ட மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், 1970 களின் முற்பகுதியில் காரீயக் கைத்தொழில் அஃதாவது போகல, கஹட்டகஹ, கொலன்கஹ ஆகிய மூன்று சுரங்கங்களும் தேசியமயமாக்கப்பட்டதாகும். காரீயக் கைத்தொழிலைத் தேசியமயமாக்கிய நடவடிக்கை, தேசியமயமாக்குதலை நோக்கி 1960 களின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பரந்த பாய்ச்சலின் ஒரு பகுதியாகும். (உதாரணமாக, பஸ் போக்குவரத்து, காப்புறுதி, பெற்றோலிய வர்த்தகம் முதலியன.) தேசியமயமாக்கும் நடவடிக்கைகள் 1970 களில் துரிதமடைந்தன. எனினும் தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டங்கள் ஆகியன தேசியமயமாக்கப்படுவதற்கு முன்பே காரீயக் கைத்தொழில் தேசியமயமாக்கப்பட்டுவிட்டது. (உதாரணமாகத் தோட்டங்களில் போலன்றி) காரீயக் கைத்தொழில், தொழில் முயற்சியாளர்கள் மட்டுமன்றித் தொழிலாளர்களும்கூட இலங்கையர்களாகவே இருந்தனர் என்பதும், அவர்கள் தேசிய அரசியலின் பிரதான அருவியில் ஒரு பாகமாக அமைந்திருந்தனரென்பதும் இங்கு குறிப்பிடப்படுவது பொருத்தமாகும். முன்னர் வரையறுக்கப்பட்ட காரீயக் கைத்தொழிலின் சமூக வரலாறு, இக்கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த தொழில் முயற்சியாளர்கள் தேசிய அரசியலில் காணப்பட்ட பிரதான மேட்டிமையாளர் என்பதையும், இலங்கை தேசிய காங்கிரஸின் காலத்திலிருந்து அவர்கள் அரசியல் முன்னணியில் தக்க பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. யுத்தத்துக்குப் பிந்திய வருடங்களில், காரீயக் கைத்தொழிலில் எஞ்சியிருந்த உயர் குடியினரும் சுரங்கத் தொழிலாளர்களும் இரு துருவங்களாகப் பிரிந்து விட்டனர். போகலையில் இது தெளிவாகக் காணப்பட்டது. தொழில் நுட்பத்துறையிலும், அமைப்பு முறையிலும் மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்கும் வேலைத் திட்டம், சுரங்கங்களுக்குச் சொந்தமாயிருந்த சில குடும்பங்கள் சுரங்கத் தொழிலாளர்களுடன் நெடுங்காலமாக வைத்து வந்த போஷகர்—சார்ந்தோர் உறவைத் துண்டித்துவிட்டதென்பதை விளங்கிக் கொள்ள முடியுமென்பது தெளிவு. இதற்கு உதவிய இன்னொரு காரணி, ஏறக் குறைய நான்கு தசாப்தங்களாக லங்கா சமசமாஜக் கட்சியின் ஒரு கோட்டையாக இருந்துவந்த ருவான்வெலைத் தொகுதியில் போகலை சுரங்கங்கள் அமைந்திருந்ததால், சுரங்கத் தொழிலாளர்கள் தீவிர அரசியல் வாதத்துக்கு உட்பட்டனர். 1947ம் ஆண்டிலும் 1953ம் ஆண்டிலும் நடைபெற்ற பாரிய வேலை நிறுத்தங்கள் இந்தச் செல்வாக்குகளுக்கு அடையாளமாகும். இந்தப் போக்குகள் தேசிய மயமாக்கலுக்கு அடிகோலினவென்று கூறுவது ஓர் அவிவேகமான கூற்றாக இருக்கக் கூடுமெனினும், 60களிலும் 70களில் தேசியமயமாக்கலை நோக்கி நடைபெற்ற பரந்த பாய்ச்சலில் காரீயக் கைத்தொழிலின் தேசியமயத்துக்கு அடிகோலிய காரணங்களுக்கு இவை துணையாயிருந்தன வென்பதை புறக்கணிக்க முடியாது. காரீயச் சுரங்கங்கள் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து 1973ம் வருட சுரங்கங்கள் கனிப் பொருள்கள் சட்டப்படி கனிப்பொருள் உரிமைகள் தேசியமயமாக்கப்பட்டன.

## கனிப்பொருள் உரிமைகள்

காரீயம் தொடர்பாகக் கனிப்பொருள் உரிமைகள் பிரச்சினையை இப்பொழுது கவனிப்போம். ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், இலத்தீன் அமெரிக்காவிலும் குடியேற்ற நாட்டு ஆதிக்கம் நடைபெற்ற சகாப்தம் முழுவதும், பல்வேறு நிலைமைகளுக்கும் குடியேற்ற நாட்டு ஆதிக்கவாதிகளின் வித்தியாசமான நலன்களுக்கும் ஏற்றவாறு கனிப்பொருள் உரிமைகளின் பல்வேறு வகைகள் உருப்பெற்றன. கனிப்பொருள் உரிமைகள் தொடர்பான சட்டம் கீழே சுருக்மாக விவரிக்கப்படுகிறது—

‘தங்க வேட்டை’யின் போது அமெரிக்காவில் முதலாவதாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட உரிமைக் கோரிக்கை முறைப்படி, கனிப்பொருள்களைத் தேடிக் கண்டுபிடிக்க முயலும் ஒருவர் அவற்றைக் கண்டுபிடித்து, அதனைப் பதிவுசெய்துகொண்டால், தாம் கண்டுபிடித்த கனிப்பொருள்கள் சம்பந்தமாகப் பிரத்தியேக சொத்துரிமை பெற முடியும். வேறு சில நாடுகளில் நிலவும் சேர்மானச் சட்டப்படி, நிலத்தின் மேல்பாக உரிமை ஒருவருக்கு இருந்தால், மேல்பாகத்துக்குக் கீழேயுள்ள சகல கனிப்பொருள்களும் அவருக்குச் சொந்தமாகும். மிகப் பெரும்பாலான வளர்முக நாடுகளில் நிலவும் சலுகை முறைப்படி, சகல கனிப்பொருள் உரிமைகளும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அரசிறைகளோ அல்லது லைசென்ஸ் கட்டணங்களோ செலுத்தும் தனியாருக்குச் சுரங்க அகழ்வு முறைகளை வழங்குவது வழக்கமாயுள்ளது. சோஷலிஸ்ட் குழுவைச் சேர்ந்த நாடுகளில் காணிகளுடன் கனிப்பொருள் வளங்களும் அரசாங்கத்துக்குச் சொந்தமாயுள்ளன; அத்துடன் அரசாங்கம் மட்டுமே சுரங்க அகழ்வு வேலையை மேற்கொள்ளலாம்.

19ம் நூற்றாண்டில் இலங்கையிலே நிலைமை (ஆயப் பதிவேடுகளில் காணப்படுகிறபடி) எப்படியிருந்ததென்றால், சட்டபூர்வமாகச் சலுகை முறை நிலவியபோதிலும், உண்மையான நடைமுறையில் ஆரம்ப வருடங்களிலே சேர்மான முறையிருந்தது; 19ம் நூற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருண்டு மத்தியில் இரண்டும் (சலுகை முறையும் சேர்மாண முறையும்) கலந்த ஒரு கலவையிருந்தது.

"சகல நவரத்தினச் சுரங்கங்களின் உற்பத்திக்கும் முடிக்குரிய உரிமைகள் கண்டிய மாகாணங்களில் நெடுங்காலமாக இருந்து வருகின்றன" என்பது பிரிட்டிஷாருக்குத் தெரியும்; காரீயப் படிவுகளும் அதேபோல மதிக்கப்பட வேண்டுமென்பதும் அவர்களுக்குத் தெரியும். எனினும் 1850களின் முற்பகுதியில் பிரிட்டிஷார் காரீயத்தின் மீது மட்டுமே அரசிறையை அறவிட்டனர். அதுவும் தொன்னுக்கு 3 ஷிலிங்கு வீதம் "மேற்கு மாகாணத்திலுள்ள சில கோறளேகளில் இருக்கும் முடிக்குரிய காணிகளுக்கு" மட்டுமே அறவிடப்பட்டது. 1856ம் ஆண்டில் தென் மாகாணத்திலுள்ள முடிக்குரிய காணிகளும் கூட காரீயத்தின் மீது அரசிறை செலுத்த வேண்டியிருந்தது.

ஓர் அரசிறையை அறவிடுவதற்கு எடுத்துக்காட்டப்படும் அதிகாரம் யாதெனில், 1801 செப்டம்பர் 3ஆந் திகதியன்றும் 1803 ஏப்ரல் 2 ஆந் திகதியன்றும் 1818 நவம்பர் 21ஆந் திகதியன்றும் பிறப்பிக்கப்பட்ட பிரகடனங்களும், 1840ம் வருட 16ம் இலக்கமுள்ள கட்டளைச்சட்டமும் 1865ம் வருட 20ம் இலக்கமுள்ள கட்டளைச் சட்டமுமாகும். ஒருவேளை 1852ம் ஆண்டுவரை முடிக்குரிய காணிகளிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட காரீயம் புறக்கணிக்கத்தக்க அளவில் இருந்திருக்கலாம். ஆதலால் அதன் மீது அரசிறையை அறவிட பிரிட்ஷார் சிரத்தை காட்டவில்லை; இதே போன்ற காரணங்களுக்காக அவர்கள் அதை மேற்கு மாகாணத்துக்கும் தென் மாகாணத்துக்கும் வெளியேயுள்ள மாகாணங்களுக்கு விஸ்தரிக்கவில்லை; ஏனென்றால், முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல், காரீயம் 1860களில் மட்டுமே மற்றும் மாகாணங்களில் ஒரு பெரிய கைத்தொழிலாகியது. மேலும் இக் காலத்தில், காரீயக் கைத்தொழில் பரவிக் கொண்டிருந்த நாட்டின் உட்பிரதேசங்களான சபரகமுவ மாவட்டமும் கேகாலை மாவட்டமும் மேற்கு மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தன. அரசிறையைச் செலுத்துவதற்காகக் காரீயச் சுமை யொன்று கைப்பற்றப்பட்டதைப் பற்றி கேகாலை உதவி அரசாங்க அதிபர் நடத்திய விசாரணையொன்றிலிருந்து கேகாலை மாவட்டத்தில் அரசிறை வசூலிக்கப்பட்டதென்பது ஊர்ஜிதமாகின்றது. 1870 களின் முற்பகுதியில் காரீயக் கைத்தொழில் நாட்டில் ஒரு பெரிய கைத்தொழிலாகி வருகிறதென்பதை பிரிட்டிஷார் உணர்ந்தனர். இந்த உணர்வின் விளைவு கனிப்பொருள் உரிமைகள் அரசிறை சம்பந்தமாக அவர்கள் பின்பற்றிய கொள்கையில் தெளிவாகத் தெரிகிறது. பிரிட்டிஷார் அரசிறையை முழு நாட்டுக்கும் விஸ்தரித்தனர். குறிப்பாக, சகல காணிகளிலிருந்தும் அகழ்ந்தெடுக்கப்பட்ட காரீயத்துக்கு விஸ்தரித்தனர். தனியார் காணியிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட காரீயத்தின்மீது விதிக்கப்பட்ட அரசிறையை எதிர்த்து நீதி மன்றத்தில் வாதிடப்பட்டது. ஆனால், இத்தகைய அரசிறையை அறவிட அரசாங்கத்துக்குரிமை உண்டென விண்ணப்ப நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து மேன் முறையீடு செய்யப்பட்டபோது கீழ் நீதிமன்றத்தின் முடிவு சரியானதே என மேன் முறையீட்டு நீதிமன்றம் ஊர்ஜிதஞ் செய்தது. தோண்டியெடுக்கப்பட்ட காரீயத்தின் அளவைப் பொறுத்துக் குழியிலேயே அரசிறை வசூலிப்பது தொந்தரவானது மட்டுமல்ல; ஆனல், தோண்டியெடுக்கப்பட்ட காரீயத்தின் அளவை மறைத்தோ அல்லது குறைத்துக் கூறியோ கொடுப்பனவைத் தவிர்ப்பதும் சாத்தியம் என்பதையும் அரசாங்கம் உணர்ந்தது. அது அநேக துஷ்பிரயோகங்களுக்கும் ஊழல்களுக்கும்கூட அடிகோலியது. இக்காரணத்துக்காக, சுங்கப் பகுதியில் ஏற்றுமதி செய்யப்படும் முனையில் அரசிறை அறவிடப்பட வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டது. ஆனல், ஐரோப்பியரின் ஆதிக்கத்திலிருந்த வர்த்தகர் சமூகம் இதைக் கடுமையாக ஆட்சேபித்தது. ஏனென்ருல், இது அரசிறை என்பதைவிட ஓர் ஏற்றுமதித் தீர்வை போலத் தோன்றுகிறதென்றும், இது கட்டுப்பாடற்ற வர்த்தகம் நடைபெற வேண்டுமென்றும் சாம்ராஜ்யத்தின் உள்நாட்டு உற்பத்தியாள



1912-ம் ஆண்டில்
கொழும்பு எச். எல். டீ. மெல் அண்ட் கம்பெனியில் காரீயம் மரப்பீப்பாக்களில் அடைத்து ஏற்றுமதிக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதை இப்படத்தில் காணலாம். சேர் எச். எல். டீ. மெல்லும் படத்தில் காணப்படுகிருர். அவரது தந்தை திரு. ஜேகொப் டீ மெல் இலங்கைக் காரீயக் கைத்தொழிலின் முன்னேடிகளான பெரும் புள்ளிகளில் ஒருவராவார்.

ருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் வர்த்தகர் சமூகம் போற்றி வளர்த்து வரும் கொள்கைகளை மீறுகிறதென்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். அரசிறையை "வசூலிக்கும் இடத்தைக் குழிக்குப் பதிலாகத் துறைமுகமாக்குவதே" அரசாங்கத்தின் நோக்மென கவர்னர் கிரிகரி சட்டசபையில் அறிவித்தாரெனினும், "அது மற்றும் ஏற்றுமதிப் பொருள்கள்மீதும் இதேபோன்ற **தீர்வைகளை விதிப்பதற்கு அடி**கோலும்" என வர்த்தகர் சமூகத்தின் பிரதிநிதி பதிலளித்தார். ஒன்றில் அரசிறை நீக்கப்பட வேண்டும். அல்லது வருவாய் பெறுவதற்கான ஒரு வழியாகவும் அரசிறை வசூலிப்பதற்கு ஒரு மாற்ருகவும், "கோப்பிக் காணிகள் பகிரங்கப் போட்டியில் ஆகக் **கூடிய விலை கேட்பவருக்கு விற்கப்**படும் அதே கொள்கையின் பேரில் காரீயம் கண்டுபிடிக்கப்பட்ட காணியும் சந்தையில் விற்கப்பட வேண்டும்" என்று யோசனை கூறப்பட்டது. "மற்றும் காணிகள் சம்பந்தமாக அனுசரிக்கப்படும் அதே அடிப்படை காரீயக் காணிகள் சம்பந்தமாகவும் ஏன் அனுசரிக்கப்படக் கூடாதென்பதற்கு எக்காரணமுமில்லை" என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. "இந்த வர்த்தகம் எந்த விகிதாசாரத்துக்கு வளருமென நாம் சொல்ல முடியாது. ஆதலால், குடியேற்ற நாட்டைப் பொறுத்தவரை காரீயக் காணிகளை உடனடியாக விற்பது விவேகமற்ற செயலாக இருக்கக்கூடும்... நிலைமையைப் புரிந்து கொண்ட சுதேசிகள் இந்த நடவடிக்கையை முற்ருக ஆதரிக்கிருர்கள் என்று கனம் பொருந்திய, எனது கற்றுத் தேர்ந்த நண்பர் (திரு. பெர்டினன்ட்ஸ்) கூறுகிருர். அக்காணிகள் விற்பனைக்கு விடப்பட வேண்டுமென்று விரும்புவோர் இருக்கிருர்கள். ஆனல், அவர்கள் முதலாளித்துவ வாதிகள். குழிதோண்டும் சிறிய தொழிலாளி லைசென்ஸ் ஒன்றைப் பெற்று, குழியில் தானே வேலை செய்ய வேண்டுமென விரும்புகிருன் —ஒரு விஷயத்தில், இம்முயற்சியிலுள்ள இலாபத்தை அவன் தனக்குத்தானே உணருகிருன். ஆனல், வெற்றிவாய்ப்புள்ள காணிகள் யாவும் பணம் படைத்தவர்களின் கைகளுக்குப் போய்ச் சேருமானல், அவன் அவர்களிடம் கூலிக்கு வேலை செய்யும் ஓர் கூலிக்காரனுகிவிடுகிருன். காரீயக் காணிகளின் விற்பனையைச் செல்வர்களாயுள்ள சிலர் விரும்பிய போதிலும், அது மக்களின் பெரும்பாலோருக்கு மிகுந்த வெறுப்பூட்டும் ஒரு செயலாயிருக்கும்" என்று கவர்னர் கிரிகரி விளக்கினுர்.

அரசிறையை அறவிடுவதெனச் சட்ட சபைசெய்த முடிவு 1873-ம் வருட 21-ம் இலக்கமுள்ள கட்ட**ளைச் சட்டத்தில் அடங்கியுள்**ளது... "நனியார் காணிகளில் தோண்டி எடுக்கப்படும் சகல காரீயம் மீதும் முடிக்கு அரசிறை செலுத்தப்பட வேண்டும். **இந்த வருமதிகளின் கொடுப்**பனவு பெருமளவுக்குத் தவிர்க்கப்படுகிறது. கப்பலேற்றப்படும் வெவ்வேறு துறைமுகங்களில் ஓர் அரசிறையாக அவற்றை வசூலிப்பதன் மூலம் அதைப் பெறுவது உசிதமாகும். அது பற்றிச் சட்ட சபையின் ஆலோசனையுடனும் சம்மதத்தோடும் இலங்கையின் கவர்னரால் சட்டமாக்கப்படுகிறது. அந்தர் ஒன்றுக்கு ஐம்பது சதமாக ஒரு தீர்வை கடலுக்கப்பால் ஏற்றுமதி செய்யப்படும் இந்நாட்டின் உற்பத்தியான சகல காரீயத்தின் மீதும் அரசிறையாக அறவிடப்பட்டுச் செலுத்தப்பட வேண்டும். 1877ம் ஆண்டில் அது அந்தர் ஒன்றுக்கு 25 சதமாகக் குறைக்கப்பட்டது. இந்த விகிதம் 1916ம் ஆண்டு வரை தொடர்ந்து இருந்து வந்தது. அப்போது, பெறுமதிப்படி 3 சத விகிதத் தீர்வையொன்று கடலுக்கு அப்பால் ஏற்றுமதி செய்யப்படும் இந்நாட்டின் உற்பத்தியான சகல காரீயம் மீதும் ஓர் அரசிறை திரட்டப்பட்டு, அறவிடப்பட்டு, செலுத்தப்பட வேண்டும்" என்று கட்டளையிடப்பட்டது.

ஐந்து வருட காலத்துக்கு ஏற்றுமதித் தீர்வை நிறுத்திவைக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டபோதிலும், அந்தர் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதமான அத்தீர்வை 1941 ஜூலை வரை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமானதுடன் காரீயக் கைத்தொழில் உயிர்ப்பைக் காட்டும்வரை அத் தீர்வையை மீண்டும் புகுத்த அரசாங்கம் விரும்பவில்லையென்பது **தெளிவு. 1941-ம் ஆண்டில் அத்**தீர்வை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டபோது, அரசாங்கம் கீழ்க்கண்ட திருத்தத்தைச் சேர்த்தது — "இந்நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் அல்லது இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் எந்தப் **தக்க எந்தச் சுங்கத் தீர்வைபற்**பொருள்கள் மீதும் அறவிடத்தகுந்தியும் பிரஸ்தாப பட்டோலையிலுள்ள தெளிவான குறிப்பு, இக்கட்டளைச் சட்டத்தைத் தவிர வேறெந்த எழுத்துமூலமான சட்டத்தின் கீழும் இத்தகைய பொருள்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி மீது அறவிடத்**தக்கதான அல்லது செலுத்தப்பட** வேண்டிய, அது என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டபோதிலும், எந்த அரசிறையையோ, வரியையோ அல்லது தீர்வையையோ பாதிக்கக்கூடாது அல்லது பாதிப்பதாகக் கருதப்படக் கூடாது."

இந்நிலைமை 1969ம் ஆண்டு வரை நீடித்தது. அப்போது, "பீக்ஸ்" (அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ்கள்) திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுச் சிறிது காலத்துக்குப் பின்னர், அத்திட்டப்படி காரீய ஏற்றுமதிகள் பாரம்பரியமற்ற பொருள்கள் என வகைப்படுத்தப்பட்டு, 'பீக்ஸ்' திட்டத்துக்குத் தகைமையுள்ளனவாக்கப்பட்டு, அவற்றின் மீது அந்தர் ஒன்றுக்கு 1/- ரூபாவாக இருந்த தீர்வை 25 சத விகித பெறுமதிப்படியான தீர்வை அறவீடாக மாற்றப்பட்டது. காரீயம் இன்னும் ஒரு பாரம்பரிய ஏற்றுமதிப் பொருளாகவே உள்ளதெனினும், அது சீணிப்பு நிலையிலுள்ளதால், அதற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டுமென்பதே இங்குள்ள தர்க்க நியாயமாகத் தோன்றியது. பாரம்பரியமற்ற புதிய ஏற்றுமதிகள் சம்பந்தமாக அப்போது அமுலிலிருந்த 55 சத விகித "பீக்ஸ்' அனுகூலங்களை முழுமையாகக் காரீயத்துக்கு வழங்குவது முற்ருகப் பொருந்தாதென அரசாங்கம் கருதியதென்பது தெளிவு. இந்த நிலைமையைப் பரிகரிப்பதற்காக, 'பீக்ஸ்' அனுகூலத்தை 30 சத விகிதத்துக்கு (25 சதவிகிதத் தீர்வையைக் கழித்து 55 சதவிகித 'பீக்ஸ்')ப் பயனுறக் குறைக்க, பெறுமதிப்படியான 25 சதவிகிதத் தீர்வையை அவர்கள் விதித்தனர்.

1970களின் முற் பகுதியிலிருந்த தீர்வை விகிதங்களுக்கேற்ப இலேசான **திருத்தங்களுடன் இந்த** நிலைமை தொடர்ந்து இருந்துவந்தது. எனினும், 1977ம் ஆண்டில் 'பீக்ஸ்' திட்டம் நீக்கப்பட்டதுடன் பெறுமதிப்படியான தீர்வை நீக்கப்படாமல் தொடர்ந்து அமுலில் இருந்து வந்ததென்பது சுவாரஸ்யமாகும். அதன் விளைவாக, இப்பொழுது அமுலிலுள்ள தீர்வை, காரீய ஏற்றுமதிகளின் 150 வருட சரித்திர காலம் முழுவதும் அவை முன்னெப்போதும் உள்ளாக்கப்பட்ட தீர்வைகளுக்கெல்லாம் ஆகக்கூடியதாக உள்ளது.

இக் கட்டத்திலே, 1973ம் ஆண்டில் இயற்றப்பட்ட சுரங்கங்கள்— கனிப்பொருள்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளவாறு கனிப்பொருள் உரிமைகளின் சில குறிப்பிட்ட அம்சங்களை விமர்சிப்பது பொருத்தமாகும். 1973-ம் ஆண்டுக்குப் பின்னர் கனிப்பொருள் உரிமைகளின் பிரச்சினை, சலுகை முறையிலும் சட்ட மூலம் விதிக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வையில் சேர்க்கப்பட்ட அரசிறையிலும் தீர்க்கப்பட்டுவிட்ட போதிலும், விற்பனை மூலமோ அல்லது குத்தகைமூலமோ காரீயச் சுரங்க அகழ்வுக்கு முடிக்குரிய காணிகளை வழங்கும் சில குறிப்பிட்ட முறைகள் இருந்துவந்ததால், இலங்கையில் உள்ள கனிப்பொருள் உரிமைகள் முறை இன்னும் சேர்மான முறையும் சலுகை முறையும் கலந்த ஒரு கலவையாகவே இருந்து வருகிறதென்று அநேகர் கருதவேண்டி இருந்ததெனத் தோன்றுகிறது. ஒருவேளை அரசிறைப் பிரச்சினை பழைய சட்டங்களில் புதையுண்டு, நேரடியாக அறவிடப்படாததனாலும், ஏற்றுமதித் தீர்வை விதிக்கப்பட்டதனாலும் அம்முறையைப் பற்றிய இத்தப்பெண்ணம் தோன்றியிருக்கலாம். ஒருவேளை இதனாலேயே சுரங்கங்கள் — கனிப்பொருள்கள் சட்டம்கூட கனிப்பொருள் உரிமைகள் பிரச்சினையில் கவனஞ் செலுத்த வேண்டியிருந்திருக்கலாம். எனினும், இச்சட்டத்தின் மூலம் கனிப்பொருள் உரிமைகள் தேசியமயமாக்கப்பட்டதில், 1801, 1803, 1818 ஆகிய ஆண்டுகளின் பிரகடனங்களிலும் மிக முக்கியமாக 1873ம் வருட 21-ம் இலக்கமுள்ள கட்டளைச் சட்டத்திலும் பிரிட்டிஷார் மேற்கொண்ட நிலைக்கு முரண்பாடான எந்த நிலைமையையும் அது உண்டாக்கவில்லை.

## இலங்கையும் காரீயத்தில் சர்வதேச வர்த்தகமும்

நாம் முன்பு குறிப்பிட்டது போல, பத்தொன்பதாம் நூற்றாண்டில் காரீயச் சுரங்கக் கைத்தொழில் போலன்றிக் காரீய வர்த்தகம் பிரிட்டிஷாரின் கைகளில் இருந்தது. சகல ஏற்றுமதிகளும் பிரிட்டிஷ் கம்பெனிகளால் கையாளப்பட்டன. கப்பலேற்றுமதியாளர்களுக்குக் காரீயத்தைத் தொடர்ச்சியாக வழங்க அநேக விநியோக முனைகள் இருந்தன. வலைப்பின்னல் போன்ற இந்த முனைகளில் கப்பலேற்றுமதியாளர்களுக்கு நேரடியாக வழங்கும் சுரங்கங்கள் இருந்தன. அத்துடன், அநேக குழிகளிலிருந்தும் சுரங்கங்களிலிருந்தும் காரீயத்தைச் சேகரித்து, கப்பலேற்றுமதியாளர்களுக்கு அதை மறுவிற்பனை செய்த இடைத்தர காரீய வர்த்தகர்களுமிருந்தனர். இம்முறை இப்பொழுது சிறு தோட்ட ஷீட் ரப்பர் உற்பத்திசம்பந்தமாகச் செயற்படுவதைப்போன்ற ஒன்றெனத் தோன்றுகிறது. பிரிட்டிஷ் கப்பலேற்றுமதியாளர்கள் மேற்கில் உள்ள தனிப்பட்ட உபயோகிப்பாளர்களின் நேரடி உபயோகத்துக்கு அபூர்வமாகவே காரீயத்தை ஏற்றுமதி செய்தனர். ஆனால் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் உள்ள வர்த்தகர்களுக்கே ஏற்றுமதி செய்தனர். இத்தகைய வர்த்தகர்கள் அதைப் பதப்படுத்தி, அரைத்து, பொதியாகக் கட்டிக் கைத்தொழில் உபயோகிப்பாளர்களுக்கு விற்றனர். கப்பலேற்றுமதியாளர்களின் துறையில் சில இந்திய வர்த்தகர்கள் செய்த சில ஆக்கிரமிப்புகளைத் தவிர, மற்றப்படி அநேகமாக மாற்றமின்றி இம்முறையிலேயே காரீய வர்த்தகம் இருபதாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து நடைபெற்றது. காரீயக் கைத்தொழில் சீணித்தும்கூட இந்த முறையிலேயே காரீய வர்த்தகம் தொடர்ந்து நடந்துவரலாயிற்று. 1940 களில் ஷா வாலஸ் அண்ட் ஹெட்ஜஸ் நிறுவனம் செய்த காரீய ஏற்றுமதிகள் இதற்குச் சான்றாகும். இந்திய வர்த்தகர்களிடையே மூஸாஜீஸ் முக்கியத்துவம் பெற்றது.

## செயலூக்கமின்மை

இலங்கைக் காரீயத்துக்குப் பலத்த கோரிக்கை இருந்து வந்ததென்றாலும், உள் நாட்டுக் கைத்தொழில் அதன் சரித்திரத்தின் எந்தக் கட்டத்திலும் ஒன்றில் பலம் பொருந்தியதாகவோ அல்லது செயலூக்கமுள்ளதாகவோ இருந்ததென்று சொல்வது தப்பாகும். உண்மையில், அது பழைய முறைகளையும் வழக்கங்களையும் விடாது காக்க விரும்பும் போக்குள்ளதாகவும், கொள்வனவாளர்களுக்கெதிராகப் பணிந்துபோகும் தன்மையுடையதாகவும் கொள்வனவாளர்களைச் சார்ந்திருக்கும் உறவைக் கொண்டதாகவுமிருந்தது. காரீயக் கப்பலேற்றுமதியாளர்களும், பின்னர் காரீயச் சுரங்கச் சொந்தக்காரர்களும் ஒரு சில தெரிவு செய்யப்பட்ட மேற்கத்திய கொள்வனவாளர்களுடன் வியாபாரம் செய்வதுடன் முழுத் திருப்தியடைந்தனர். இந்தக் கொள்வனவாளர்கள் பெரும்பாலும் வர்த்தகர்களாகவே இருந்தனர். இந்த வர்த்தகர்கள் பல சந்தர்ப்பங்களில் தங்களுடைய சொந்த நாடுகளில் பெரிய ஆலைகளையும் அரைக்கும் இயந்திரசாலைகளையும் கொண்டிருந்தனர். இந்த ஆலைகளும் இயந்திரங்களும் இலங்கைக் காரீயத்தை அரைத்து, பதப்படுத்தி, தங்களுடைய கைத்தொழிலதிபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மொத்தமாகவும் சில்லறைத் தூள் அளவுகளிலும் ஏற்றுமதி செய்தனர்.

இலங்கைக் காரீயம் அதில் அடங்கி உள்ள 'சுத்தக் கரியையும் தூள் பரிமாணத்தையும் கொண்டே ஏற்றுமதிக்குத் தர நிர்ணயம் செய்யப்படுகின்றது. பொது விதியாவது— காரீயத்தில் அடங்கியுள்ள சுத்தக் கரியின் அளவு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகவும், அதன் தூள் பரிமாணம் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விலையும் உயர்வடையும். இதற்கு மறுதலையாக, காரீயத்தில் அடங்கியுள்ள சுத்தக் கரியின் அளவு எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகவும், அதன் தூள் பரிமாணம் எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விலையும் குறைந்துவிடும். பொதுவாகக் காரீயத்தில் அடங்கியுள்ள சுத்தக் கரியின் அளவு 85 சதவிகிதத்திலிருந்து சக 99 சத விகிதம் வரை இருக்கிறது; இதே வேளையில் தூள் பரிமாணம் பெரிய கட்டிகளிலிருந்து அணுப் பரிமாணமுள்ள மிக நுண்ணிய பொடிகள் வரையுமாகும். 2,000 அடி வரை ஆழமுள்ள பாதாளத்தில் தோண்டி

யெடுக்கப்பட்ட, மேலே இழுக்கப்படும் காரீயம் தெரிவு முறையில் சுரங்க அமைவிடங்களில் பெரும்பாலும் பெண் தொழிலாளர்களினல் கையால் உலர்த்தப்படுகிறது. தூள் பரிமாண நிர்ணயமும் இடித்துத் தூளாக்கும் வேலையும் சுரங்கங்களில் செய்யப்படுகின்றன. பின்னர் சுரங்கங்களிலேயே பொதியாகக் கட்டப்பட்டு, கொழும்பிலுள்ள ஒரு மத்திய பண்டசாலை வாயிலாகத் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்படுகிறது.

கடந்த காலத்தில்போலவே இன்றும் இலங்கைக் காரீயத்துக்கு அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளே பிரதான சந்தைகளாக (சற்றுக் குறைந்த அளவுக்கு ஆஸ்திரேலியாவும் பிரான்சும்) விளங்குகின்றன. மூன்று பிரதான உற்பத்தி நிறுவனங்களே உற்பத்தியின் பெரும் பகுதிக்குக் காரணமாயிருக்கின்றன. அவையாவன—1968ம் ஆண்டில் மொத்த உற்பத்தியில் ஏறக்குறைய 70 சதவிகிதத்துக்குப் பொறுப்பான போகல கிராபைட் லிமிட்டெட்; கொலன்னுஹாவிலுள்ள எச். எல். டி மெல் அன்ட் கம்பெனி; கஹட்டகஹாவிலுள்ள கஹட்டகஹ சுரங்கங்கள் கம்பெனி லிமிட்டெட்.

1976ம் ஆண்டில் நடத்தப்பட்ட இதேபோன்ற ஒரு பரிசீலனை 1970களின் முதற் பாதியிலிருந்த நிலைமையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுவதாவது: "இலங்கையில் ஏற்பட்ட உற்பத்திப் பிரச்சினைகள் இப்பொழுது பூரணமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாகத் தோன்றுகிறது. எனினும், கைத்தொழில், உலக பொருளாதார ஒடுக்கத்தினல் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 1975 ம் ஆண்டில் ஏற்றுமதிகள் 6,000 தொன்களாக வீழ்ச்சியுற்றன. உற்பத்தியைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அரசாங்க கட்டுப்பாட்டுக்கு ஏற்றவாறு மறுசீரமைப்பு நடைபெற்ற 1972ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாதபோதிலும்—பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு இப் புள்ளி விவரங்கள் ஆகக் குறைந்தவையாகும். இவ் வருடம் விற்பனைகள் மீண்டும் அதிகரித்துள்ளன. இந்த அதிகரிப்பு 8,000 தொன்களை எட்டவேண்டும். இலங்கையின் பரம்பரைச் சந்தைகளில் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், இந்தியா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் அடங்கும். புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வெளிச் சந்தைகளில், போலந்து, தாய்லாந்து, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளுமுள்ளன. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் உள்ளடங்கிய தென் கிழக்காசிய சந்தையின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. அந்நாடுகளில் வார்ப்பு நிலையக் கைத்தொழில் விரிவடைந்து வருவதே இதற்குப் பெரும்பாலும் காரணமாகும். எனினும், இந்தியாவைப் பொறுத்தவரை, கோரிக்கை அதிகரித்துள்ளதற்கு அந்நாட்டில் வளர்ந்துவரும் உலகத்தொழில்களின் தொகையே காரணம் என்று கூறலாம். பரம்பரைச் சந்தைகளில், காலவோட்டத்தின் போது விற்பனை முறை எந்த மாற்றத்தையும் கண்டதாகத் தெரியவில்லை. இதனல்—ஆர்தர் பிரான்வெல் அன்ட் கம்பெனி லிமிட்டெட், லண்டன் போன்ற—ஒரு மூன்றும் கட்சியான காரீய வர்த்தகர் இன்னும் பெரும் பங்கெடுத்து வருகிருர். எனினும், இறுதியாகப் பதப்படுத்திய உருவில் காரீய உபயோகிப்பாளர்களுக்கு நேரடி விற்பனைகளின் விகிதாசாரத்தை இலங்கை அதிகரித்துள்ளது. தூள் காரீய விற்பனைகளும் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன." (கைத்தொழில் கனிப்பொருள்கள்—அக்டோபர் 1976).

தேசியமயமாக்கப்பட்ட சமயத்தில், மூன்று சுரங்க அகழ்வு—ஏற்றுமதிக் கம்பெனிகளும் தங்கள் சொந்த தரப்படுத்தல் முறையை மேற்கொண்டன. தரங்களையும், விலைகளையும் பொறுத்தவரை, அரசாங்கக் காரீயக் கூட்டுத்தாபனம் சீராக்கல் முறையொன்றைச் செயற்படுத்த முயன்றுள்ளதாகத் தோன்றுகிறது. இந்தச் சீராக்கல் முறை பொதுவான விலை மட்டத்தை மேலேற்றுவதில் உதவியிருக்கக்கூடிய அதே வேளையில், பின்னர் 1970களில் செய்யப்பட்ட விலை உயர்வுகள் பெரும்பாலும் கோரிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, உற்பத்திச் செலவு உயர்வுகள், பௌதிக மாற்றங்கள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டே செய்யப்பட்டனபோல தோன்றுகிறது. எனினும், எல்லாக் கைத்தொழில் வகைப்படுத்தலிலும் அமெரிக்காவின் காரீய உபயோகிப்பை நோக்குமிடத்து, 1954ம் ஆண்டிலிருந்து 1978ம் ஆண்டு வரையுள்ள கலத்தில், இலங்கையின் பிளந்த அல்லது கட்டிக் காரீயத்துக்கு நிலையான பண உருவில் சிறந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அமெரிக்க சுரங்கங்கள் பணியகத்தின் புள்ளி விவரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பின்வரும் அட்டவணை இதைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது.

இலங்கையின் காரீயத்தைப் பிரதானமாகக் கொள்வனவு செய்வோர் பல்லாண்டுகளாகப் பெரும்பாலும் மாருமலேயேயிருந்துள்ளனர். இன்று இலங்கைக் காரீயத்தை இறக்குமதி செய்யும் பிரதான நாடுகள் ஜப்பானும் அமெரிக்காவும், அவற்றையடுத்து பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, இந்தியா, ஜெர்மனி, பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளுமாகும். இவற்றில் தாய்லாந்தும் பாகிஸ்தானும் புதிதாக இறக்குமதி செய்யும் நாடுகளாகும். இதே வேளையில் சமீப வருடங்களில் ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் நடைபெறும் ஏற்றுமதிகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

## அட்டவணை 1

### அமெரிக்கா— 1954 — 1978 அறிவிக்கப்பட்ட இறக்குமதிப் பெறுமதிகளின் அடிப்படையில் இயற்கைக் காரீயத்தின் சராசரி வருடாந்தப் பெறுமதி

| | நிலையுருவற்றது | | கட்டியும் சீவலும் | | படிகச் சிம்புகள் | |
|---|---|---|---|---|---|---|
| வருடம் | உண்மையானது | நிலையானது 1973 டொலர்கள் | உண்மையானது | நிலையானது 1973 டொலர்கள் | உண்மையானது | நிலையானது 1973 டொலர்கள் |
| 1954 | 34 | 58 | 169 | 290 | 157 | 269 |
| 1977 | 77 | 63 | 463 | 376 | 298 | 241 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்த உலகில் நடைபெறும் கைத்தொழில் நடவடிக்கைகளின் மாறும் அளவுகளுக்கொப்ப காரீயத்துக்கான கோரிக்கை இயற்கையாகவே ஏறுவதும் இறங்குவதுமாயிருந்துள்ளது. இவ்விதமாக 1971ம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஜப்பானிய கைத்தொழில் பொருள்களின்மீது ஜனதிபதி நிக்ஸன் ஒரு முக்கியமான தீர்வையை விதித்ததன் விளைவாக, ஜப்பானிய கைத்தொழில் நடவடிக்கைகள் குறைந்தன. அது முறையே அந் நாட்டில் இலங்கையின் காரீய இறக்குமதி வீழ்ச்சியுறுவதற்கு அடிகோலியது. இதே போல 1975/1976ம் ஆண்டுகளில் கைத்தொழில் உலகில் சிறு அளவில் தற்காலிகமாக ஏற்பட்ட வர்த்தக மந்தம் எங்களுடைய காரீயத்துக்கான கோரிக்கை மோசமாக வீழ்ச்சியுறச் செய்வதற்கு அடிகோலியது. எனினும், கோரிக்கை குறையும்போது உற்பத்தி அதிகரிக்கும் போக்குகள் இந்தக் காலத்திலேயே ஸ்திரமான விலைகளின் உருவத்திலோ அல்லது அதிகரிக்கும் விலைகளின் உருவத்திலோ எங்களுடைய வர்த்தகத்தில் பிரதிபலித்தது. அபிவிருத்தியடைந்த உலகில் கைத்தொழில் நடவடிக்கைகள் அதிகரித்த 1976ம் ஆண்டின் பிற்பகுதியில் எங்களுடைய காரீயத்துக்கான கோரிக்கை மீண்டும் அதிகரித்தது. அதற்குப் பின்பு காணப்பட்ட போக்கை ஓர் உயரும் விளைவின் உருவில் சித்திரிக்கலாம். இலங்கைக் காரீயத்துக்குத் தற்போதுள்ள கோரிக்கை மட்டத்தின் மதிப்பீடு ஒன்றின்படி, ஆண்டொன்றுக்கு அது 30,000 மெட்ரிக் தொன்களுக்கு மேல் இருக்கிறது. அட்டவணை 2 எடுத்துக் காட்டுவதுபோல் விலைகளும் அதிகரித்தே வந்துள்ளன. இந்த மேல்முக (விலை உயர்வு)ப்போக்கின் கால நீட்சியை மதிப்பிடுவது கடினமென்றாலும், கைத்தொழில் நடவடிக்கைகள் துவண்டு, தற்காலிக வியாபார மந்தம் ஏற்பட்டுள்ள ஒரு காலத்தில் தற்போது காணப்படும் சுபிட்ச நிலை கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டு ஆராயப்பட வேண்டியதொன்றாகும். முரண்பாடானதாகத் தோன்றும் ஒரு நிலைமைக்கான இரு காரணங்கள் பின்வருமாறு:

(அ) பெற்றோலை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் செயற்கைக் காரீயத்தின் விலைகளில் ஏற்பட்டுள்ள செங்குத்தான அதிகரிப்பு.

(ஆ) அபிவிருத்தியடைந்த உலகில் பண வீக்கம் பிரமாண்டமான அளவில் ஏற்பட்டிருப்பதால், துரிதமாகக் குறைந்து வரும் நாணயப் பெறுமதிகளின் எதிரே, கைத்தொழில் மூலப்பொருள்களின் கையிருப்பில் முதலீடு செய்யும்படி வர்த்தகர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

அட்டவணை 2

காரீய ஏற்றுமதிகள் (1978—79)

| | 1978 | | 1979 | |
|---|---|---|---|---|
| | அளவு மெட்ரிக் தொன்களில் | க. த. இ. பெறுமதி மில்லியன் ரூபாக் கணக்கில் | அளவு மெட்ரிக் தொன் களில் | க. த. இ. பெறுமதி மில்லியன் ரூபாக் கணக்கில் |
| அமெரிக்கா | 2,145 | 16,191 | 1,821 | 20,035 |
| பிரிட்டன் | 2,118 | 9,786 | 915 | 9,825 |
| ஜப்பான் | 3,672 | 15,653 | 5,165 | 31,518 |
| பிரான்ஸ் | 431 | 1,999 | 657 | 5,288 |
| ஜெர்மனி | 200 | 1,818 | — | — |
| ஆஸ்திரேலியா | 1,032 | 4,098 | 869 | 2,551 |
| பாகிஸ்தான் | 283 | .968 | 178 | .902 |
| இந்தியா | 213 | 2,566 | 289 | 3,024 |
| மற்றவை | 1,069 | 4,731 | 1,041 | 4,087 |
| மொத்தம் | 11,163 | 57,810 | 10,935 | 77,230 |

க. த. இ. — கப்பல் தளம் மட்டும் இலவசம்

## கைத்தொழில்கள்

"இலங்கையில் காரீயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் முயற்சிகள் ஏன் விருத்தி செய்யப்படவில்லை?" என்ற கேள்வியொன்று அடிக்கடி எழுப்பப்படுகிறது. இதற்குரிய பிரதான காரணங்களில் ஒன்று என்னவென்றால், உள்நாட்டில் போதியளவு பெரிதான சந்தையொன்றில்லாமையாகும். எங்களுடைய காரீயம் அநேக நவீன கைத்தொழில்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட போதிலும், பயன்படுத்தப்படும் அளவு பல சந்தர்ப்பங்களில் மிகக் குறைவாயிருக்கிறது. இவ்விதமாக, உள்நாட்டிலுள்ள எழுதுகோல் (பென்சில்) கைத்தொழில் உபயோகிக்கும் மொத்தக் காரீயம் மாதமொன்றுக்கு ஏறக்குறைய 5 மெட்ரிக் தொன்களாகும். காரீயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை ஆரம்பிக்கும் திசையில் எடுக்கப்படும் முதலாவது நடவடிக்கை, கைத்தொழில் உபயோகிப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான காரீயத்தைப் பதப்படுத்துவதாயிருக்கும். முன்பே குறிப்பிடப்பட்டது போல், இன்றுங்கூட, பல்வேறு கைத்தொழில் உபயோகிப்பாளர்களுக்கு எங்களுடைய காரீயத்தைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நடத்தும் ஆலைக்காரர்களுக்கும் கலப்பாளர்களுக்கும் எங்கள் காரீயத்தில் பெரும்பகுதி கப்பலேற்றப்படுகிறது. சமீப வருடங்களில் இத்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்பம் சாதிக்கப்பட்டுள்ளது. தற்போது மின்கல அடுக்கு (பாட்டரி) உற்பத்திக்கும் கரித்தூரிகை (கார்பன் பிரஷ்) உற்பத்திக்கும் வேகமடக்கும் விசைக்கான உள்ளுறை (பிரேக் லைனிங்) உற்பத்திக்கும் விசேஷ தரமுள்ள காரீய வகைகள் தயாரிக்கப்படுகின்றன. இத் திருஷ்டாந்தங்கள் ஒவ்வொன்றிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனம் வர்த்தகர்களிடமிருந்து கடும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டி இருந்தது. இறுதி உபயோகிப்பாளர்களுடன் நேரடியாக வியாபாரம் செய்வதை வர்த்தகர்கள் விரும்பவில்லை. கைத்தொழில் அதிபர்களிடமிருந்து பெறப்பட்ட விலைகள் இயற்கையாகவே வெகு கவர்ச்சியாயுள்ளன. இது பல்லாண்டுக் காலமாக வர்த்தகர்கள் பிடித்து வைத்துக்கொண்ட இலாப எல்லையை எடுத்துக்காட்டுவதாயுள்ளது. கீழ்க்கண்ட காரணங்களுக்காக இம்முயற்சியில் கைத்தொழில் அதிபர்களிடம் இருந்தே சில சமயங்களில் எதிர்ப்பினை எதிர்நோக்க வேண்டியிருந்தது:

(அ) பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தங்களுடைய கைத்தொழில்களில் கையாளப்படும் செய்முறைகளை விழிப்புடன் காக்கப்படும் இரகசியங்களாகக் கருதுவதுடன் தாங்கள் உபயோகிக்கும் மூலப்பொருள்கள் சம்பந்தமான விவரக் கூற்றுக்களை வெளியிட விரும்புவதுமில்லை.

(ஆ) மூன்றும் உலகத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடைய உற்பத்திப் பொருள்களின் தரச் சிறப்பைப் பராமரிக்கும் ஆற்றலுள்ளவர்களா எனச் சந்தேகிக்கும் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் தப்பெண்ணத்தையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

இந்தத் தடைகளுடன், காரீய வர்த்தகர்களிடமிருந்து வரும் எதிர்ப்பையும் இயற்கையாகவே எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. சம முக்கியத்துவமுள்ள இன்னோர் உண்மை யாதெனில், காரீயக் கூட்டுத்தாபனம் சமீப வருடங்களில் ஆஸ்திரேலியக் கொள்வனவாளர்களுடன் நேரடியாக விற்பனைப் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடித்திருப்பதாகும். இதற்கு முன்பு ஆஸ்திரேலியக் கொள்வனவாளர்கள் பிரிட்டனில் நிலைகொண்ட வர்த்தகர்கள், முகவர்கள் வாயிலாகவே இலங்கைக் காரீயத்தை வாங்கியுள்ளனர்.

## விலைகள்

விலைகளைப் பொறுத்தவரை, பல்லாண்டுகளாகப் புள்ளி விவரங்கள் முறைப்படி சேகரிக்கப்படாதிருக்கும் நிலையே பிரதான முட்டுக்கட்டையாயிருந்து வந்துள்ளது. பிரதம விவசாயப் பொருள்களையும், கனிப்பொருள்களையும் உற்பத்தி செய்வோர் தமது சந்தை விலைகளை அபிவிருத்தி செய்வதற்குரிய மிகநிச்சயமான வழி கொள்வனவாளர்களுக்கு ஒரு பொதுவான முன்னணியைத் தெரியக் காட்டுவதே என்பதை உறுதியாக உணர்ந்துவிட்டனர். பொதுப் பேரம் பேசும் நிலையை அமைப்பதற்கு ஓர் அத்தியாவசியமான முதல் நடவடிக்கை, உற்பத்தி பற்றியும் விலைகளைப் பற்றியும் தகவல்களைப் பரிவர்த்தனை செய்துகொள்வதற்காக உற்பத்தியாளர்களிடையே பரஸ்பர நம்பிக்கையையும் நாணயத்தையும் ஏற்படுத்துவதாகும். துரதிர்ஷ்டவசமாக, காரீயம் சம்பந்தமாக இதுநாளது வரை சாத்தியமாகவில்லை. விலைகளைப் பொறுத்தவரை, பல வருடங்களாகப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படாதுள்ள நிலைமையே பிரதான தடையாக இருந்து வந்துள்ளது. வர்த்தகப் புள்ளி விவரங்களைச் சர்வதேச ரீதியில் வெளியிடுவதற்குத் தனிப்பட்ட கம்பெனிகள் அதீத வேண்டாவெறுப்புடனிருக்கின்றன. காரீய உற்பத்தியாளர்களின் கூட்டுக் குழுவொன்றை ஸ்தாபிக்கும் நோக்கத்துடன் மற்றும் பிரதான காரீய உற்பத்தி நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு ஒரு முயற்சி செய்யப்பட்டது. மலகாஸே குடியரசிடமிருந்து ஊக்கமூட்டும் வகையில் சாதகமான பதில் கிடைத்ததென்றாலும், சோவியத் ரஷ்யா, மக்கள் சீனக் குடியரசு ஆகிய இரு நாடுகளும் அதில் பங்குபற்ற விரும்பவில்லையெனத் தெரிவித்துவிட்டன. இவ்விரு நாடுகளும் ஒப்பியல் ரீதியாகப் புதிதாகக் காரீயத்தை உற்பத்தி செய்துவருகின்றன என்பதும், இரண்டும் அந்நியச் சந்தைகளை, குறிப்பாக அமெரிக்கச் சந்தையைப் பெருமளவில் படையெடுத்துள்ளன என்பதும் இங்கு கவனிக்கத்தக்கன. உண்மையில், அந்நாடுகளின் சந்தைப் பிரவேசம் அமெரிக்காவில் காரீய விலைகளைத் தாழ்த்துவதற்குப் பெருமளவுக்குக் காரணமாயிருந்துள்ளது.

## ஒதுக்கிலுள்ள வளங்கள்

முன்னர் எடுத்துக்காட்டப்பட்டதுபோல், காரீயத்தை அகழ்ந்தெடுக்கும் வேலைகள் உண்மையில் இன்று இரு பெரிய சுரங்கங்களில் மட்டுமே நடைபெற்று வருகின்றன. இவ்விரு சுரங்கங்களும் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக் காலமாக இருந்து வருகின்றன. இப்பொழுது கிடைக்கக்கூடியதாயிருக்கும் புள்ளி விவரங்களிலிருநது கஹட்டகஹ/கொலன்கஹ சுரங்கங்களிலிருந்து அகழ்ந்தெடுக்கத்தகக வளங்கள் திகிலூட்டும் அளவுக்குக் குறைவாயிருக்கின்றன. போகலையிலுள்ள முப்படல அமைப்பு முறைகள் குறைவான ஆழமுள்ள இடங்களில் குன்றிவிடலாம். கூடிய விரைவில் இந்தச் சுரங்கத்திலும் அகழ்ந்தெடுத்து மேலிழுத்துக்கொணரும்செலவுகள் இயற்கையாகவே செங்குத்தாக உயரலாம். இந்நிலைமைகளால் நிரூபணமான ஒதுக்கு வளங்களின் தரச் சிறப்பைத் துரிதமாக உயர்த்த வேண்டியிருக்கும். இதை சாதிக்கவேண்டுமாயின், மேலும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் நோக்கத்துடன் காரீயமுள்ள இடங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும், அகழ்ந்தெடுத்து ஆராய்ச்சி செய்வதற்குமான வேலைகள் முறைப்படியான ஒரு வேலைத் திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய விரிவாக்கமும், வளங்காணும் முயற்சிகளும் செயலூக்கத்துடன் மேற்கொள்ளப்படாவிட்டால், இறுதியில் ஏற்படும் விளைவுகள் பெரு நஷ்டத்தை உண்டாக்குவதாயிருக்குமென்பது திண்ணம். பொதுநல அமைப்பு (காமென்வெல்த்) நாடுகளிலேயே உயர்ந்த தரச் சிறப்புள்ள இயற்கைக் காரீய வளங்கள் இலங்கையில் அடங்கியுள்ளதாக அறியப்பட்டுள்ளதெனப் பிரபல பூகர்ப்பவியல் நிபுணரான பேராசிரியர் டன்ஹாம் கூறியுள்ளார். எனினும், மேற்சொன்ன முயற்சிகள் கைக்கொள்ளப்படாவிட்டால், இந்த நாடு வருங் காலத்தில் அகழ்ந்தெடுக்கத்தக்க நிரூபணமான கனிப்பொருள் வளங்களைக் குறிப்பிடத்தக்க அளவில் கொண்டிராத ஒரு நிலை தோன்றுவது சாத்தியமே. அத்துடன், சுரங்கங்களின் குன்றிவரும் உற்பத்தி மட்டங்களும் அதே திசையில் ஓர் எச்சரிக்கைச் சமிக்ஞையாக விளங்குகின்றன.

## வேலைத்திட்டம்

தேசியமயமாக்கிய நடவடிக்கை இலங்கையில் காரீயக் கைத்தொழிலுக்குப் புத்துயிரூட்டியுள்ளதென அமெரிக்கச் சுரங்கங்கள் பணியகம் குறிப்பிட்டுள்ளது. தேசியமயத்துக்குப் பின்னர் காரீயக் கைத்தொழிலின் அபிவிருத்தியில் ஓர் அத்தியாவசியமான பாகமாக அமைந்திருப்பதென்னவென்றால், இக் கைத்தொழிலின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டு எஞ்சினியர்களுக்கும் தொழில் நுணுக்கர்களுக்கும் வெளிநாட்டில் பயிற்சியளித்ததாகும். இந்த இளம் தொழில் நுட்பவல்லாரின் சேவைகளைக் கூட்டுத்தாபனம் நம்பிக்கை விசுவாசத்துடன் பயன்படுத்திக் கொள்வது நலம். சுரங்கங்கள் சம்பந்தமாகக் கனிப்பொருள்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் அகழ்ந்தெடுத்து ஆராய்ச்சி செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் முதற்படியான, விஞ்ஞான ரீதியில் அமைந்த வேலைத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டாலொழிய, மற்றப்படி வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற உள்நாட்டுத் தொழில் நுட்பவல்லார் புதிய 'மேய்ச்சல் நிலங்களை'த் தேடத் தொடங்கிவிடக் கூடும். சுரங்க—கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் துறைகளில் கிளைகளைப் பரப்பும் அதே சமயத்தில் உறுதியான காரீயப் படிவுகள் மீது தனது கால்களை ஊன்றவேண்டியதவசியமாகும்.



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வகையான காரீயத்தினதும் வருடாந்த உலக உற்பத்தி 500,000 தொன்களாகும். உற்பத்தி நாடுகள், கைத்தொழில் பாவனை என்ற வகையில் இவ் உற்பத்தி வகையீடு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றது.

### உலக இயற்கைக் காரீய உற்பத்தி—1977

| | தொன் |
|---|---|
| காரீயப் படலப் படிவுகளிலிருந்து அகழ்வு | 1977 |
| பிரேசில் | 9,187 |
| மே. ஜேர்மனி | 14,026 |
| மலகாஸி | 15,726 |
| நோர்வே | 9,097 |
| ஐக்கிய அமெரிக்கா | 1,800 |
| மொத்தம் | 49,836 |
| திட்டுப் படிவுகளிலிருந்து அகழ்வு | |
| இலங்கை | 8,875 |
| ஒழுங்கற்ற அமைவிலான படிவுகளிலிருந்த அகழ்வு | |
| அவுஸ்திரியா | 35,288 |
| இத்தாலி | 3,819 |
| தெ. கொரியா | 66,400 |
| மெக்ஸிகோ | 58,452 |
| மொத்தம் | 163,959 |
| வகைப்படுத்தப்படாத படிவுகள் | |
| ஆர்ஜன்டீனா | 130 |
| பர்மா | —— |
| சீனா | 50,000 |
| இந்தியா | 33,000 |
| ஜப்பான் | —— |
| வட கொரியா | 75,000 |
| ருமேனியா | —— |
| தெ. ஆபிரிக்கா | 600 |
| ஐ. சோ. ச. கு. | 95,000 |
| மொத்தம் | 254,930 |
| கூட்டு மொத்தம் | 476,400 |

மூலம்: ஐ. அ. சுரங்கப் பணியகம்; கனிப்பொருள் உண்மைகளும், பிரச்சினைகளும்; சுரங்கம் அறுத்தல் வருடாந்த மீளாய்வு.

வகைப்படுத்தப்படாத காரீயம் பெரும்பாலும் ஒழுங்கற்ற அமைவிலான காரீயத்துடன் மிகநெருங்கிய தொடர்புடையதாகும். உலகின் மொத்தக் காரீய உற்பத்தியில் ஒழுங்கற்ற அமைவிலான காரீயமே அரைவாசி என மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, வட, தென்கொரியா, மெக்ஸிகோ, ஐ.சோ.ச.கு., அவுஸ்திரியா என்பனவே இவ்வகைக் காரீயத்தைப் பிரதானமாக உற்பத்தி செய்கின்றன. ஒழுங்கற்ற அமைவிலான காரீயத்தைக் கொண்டு கைத்தொழில் தயாரிப்புகளை மேற்கொள்வதுடன், அதனை எரிபொருளாகவும் பாவிக்கலாம். உலக காரீயத்தில் அரைவாசியை உற்பத்தி செய்கின்ற சீனா, வட கொரியா, ஐ. சோ. ச. கு. ஆகிய மூன்று பிரதான சோஷலிச நாடுகள் தொடர்பானகணிப்புகள் மேலைத்தேசக் கணிப்புக்களின் அடிப்படையில் அமைந்ததாகும் என்பது கவனிக்கத்தக்கது.

கடந்த இரு தசாப்த காலத்திற்குள்ளாகவே சீன, சோவியத் காரீயம் மேலைத்தேச சந்தைகளை அடைந்தன. குறிப்பாக, ஐக்கிய அமெரிக்கா இவ்விரு நாடுகளிடமிருந்து பெருமளவிலான காரீயத்தை இறக்குமதி செய்தது. பாரம்பரிய ஏற்றுமதி நாடுகளின் (உ-ம்—மலகாஸி) நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகவே சோஷலிச நாடுகள் இச்சந்தைக்குள் புகுந்தன. ஆனல், பாரம்பரிய ஏற்றுமதியாளர்களின் நிரம்பல் அதிகரித்ததும், சோஷலிச நாடுகளினல் மீண்டும் இச்சந்தைக்குள் உட்புக இயலவில்லை. மேலும், ஐக்கிய அமெரிக்காவில், மெக்ஸிகோவின் காரீய நுகர்வு அதிகரித்தமையால், நோர்வே, மே.ஜேர்மனி, இலங்கை என்பன பாதிக்கப்பட்டன.

சர்வதேச காரீய வர்த்தகமுறை பல்தேசிய நிறுவன அமைப்புடன் நெருங்கிய பண்பினைக் கொண்டதாகும். உற்பத்தி நாடுகளில் உள்ள காரீயச் சுரங்கங்கள் முழுமையாக அல்லது பகுதியாக, மேலைத்தேசத்தில் உள்ள காரீயப் பதனிடல் விநியோகம் போன்றவற்றைச் செய்கின்ற கம்பனிகளின் கையில் உள்ளது. இக் கம்பனிகளுள் பெரும்பாலானவை மெக்ஸிகோவில் உள்ள சுரங்கமறுத்தற் கம்பனிகளுடன் இணைந்துள்ளன. ஐக்கிய இராச்சியக் கம்பனிகளிடமும் இத்தகைய செங்குத்தான இணைப்பைக் காண முடியும்; இக் கம்பனிகள் நோர்வே நாட்டின் காரீயச் சுரங்கங்களுடன் இணைந்

#### கடந்த 150 வருடங்கள் இலங்கையின் காரீய ஏற்றுமதி—1830—1979

| ஆண்டு | தொன்கள் | ரூபாய் |
|---|---|---|
| 1830—1839 | 1,629 | 56,272 |
| 1840—1849 | 4,384 | 110,305 |
| 1850—1859 | 9,543 | 418,806 |
| 1860—1869 | 40,422 | 3,340,928 |
| 1870—1879 | 62,027 | 10,041,183 |
| 1880—1899 | 127,219 | 25,571,793 |
| 1900—1909 | 273,554 | 86,977,564 |
| 1910—1919 | 234,323 | 94,536,199 |
| 1920—1929 | 111,748 | 20,927,201 |
| 1930—1939 | 121,654 | 17,928,790 |
| 1940—1949 | 162,267 | 69,752,190 |
| 1950—1959 | 88,881 | 56,077,576 |
| 1960—1969 | 95,643 | 62,589,189 |
| 1970—1979 | 85,590 | 248,824,467 |

குறிப்பு: 1829ல் முதலாவது காரீய ஏற்றுமதி இடம் பெற்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு தொன் ரூபா 2,851/- என்ற பெறுமானத்தில் 30 தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

மூலம்: 1829—1939: இலங்கை நீல ஏடு

1939—1967: இலங்கை ஆண்டுப் புத்தகம்

1968—1971: வருடாந்த அறிக்கை, இலங்கை மத்திய வங்கி

1972—1977: ஆண்டறிக்கைகள், இலங்கை அரச காரீயக் கூட்டுத்தாபனம்

1978—1979: திட்ட அமுலாக்கல் அமைச்சு.

துள்ளன. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் உள்ள விநியோக நிறுவனங்கள் இலங்கையின் காரீய முகவர்களாக கருமமாற்றியுள்ளன.

### சர்வதேச சந்தையின் போக்குகள்

சென்ற காலங்களில் இலங்கையின் இயற்கைக் காரீயம் சர்வதேச காரீய வர்த்தகத்தில் சாதகமான நிலையை அனுபவித்து வந்தது. இன்று உலகின் முன்னணி சந்தைகளில் காரீயத்திற்கு கூடிய கேள்வி உண்டு. இலங்கையின் நிலையான காரீயக் கொள்வனவாளர்களிடமிருந்து காரீயம் தொடர்பான விசாரணைகள் வருவதே போன்று, ஏனைய கொள்வனவாளர்களிடமிருந்தும் விசாரணைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இவர்களுள் பின்னையவர்களின் வேண்டுதல்கள் பெரும்பாலும் நிறைவு செய்யப்படுவதில்லை.

இலங்கைக் காரீயச் சுரங்கங்களின் தற்போதைய வருடாந்த உற்பத்தி ஏறக்குறைய 10,000 மெட்ரிக் தொன்களாகும். வருடாந்தம் அகழப்படுகின்ற காரீயத்தை விடவும், முறையான கொள்வனவாளர்களின் கேள்வி அதிகமாக உள்ளது. இவ்வர்த்தகர்கள் வருடாந்தம் 20,000 மெட்ரிக் தொன் காரீயத்தை இலங்கையிடமிருந்து கொள்வனவு செய்ய விரும்புகின்றனர். கூடுதலான அளவு இயற்கைக் காரீயத்தைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்களை ஆராயும் பொருட்டு பல வர்த்தகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். புதிய வர்த்தக வாய்ப்புக்களின் பிரகாரம் 1980-ம் ஆண்டிற்கான கேள்வி 20,000 மெட்ரிக் தொன்களையும் தாண்டியுள்ளது. இவ் விசாரணைகளின் பிரகாரம் மாத்



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரம் 1980 ல் எமது காரீயத்திற்கான கேள்வி 30,000—40,000 மெட்ரிக் தொன்களாக அமையும் என மதிப்பீடு செய்யலாம்.

போகல, கஹடகஹ—கொலன்கஹ என்பன இலங்கையின் இரு பிரதான காரீயச் சுரங்கங்களாகும். இதில் போகலைச் சுரங்கம் வருடாந்தம் 6000 மெட்ரிக் தொன்களையும், கஹட்டகஹ — கொலன்கஹ சுரங்கம் 4,000 மெட்ரிக் தொன்களையும் உற்பத்தி செய்கின்றன. 1970ன் ஆரம்பத்திலிருந்து ருகெதர, ரங்கல்ல ஆகிய இரு புதிய சுரங்கங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ருகலை, கஹட்டகஹ ரங்கல சுரங்கத்திற்கு அண்மையிலும், மற்றையது போகலைச் சுரங்கங்களுக்கு அண்மையிலும் அமைந்துள்ளன. இவ்விரு சுரங்கங்களினதும் வருடாந்த உற்பத்தி 500 மெட்ரிக் தொன்களுக்குக் கூடுதலாகவிருக்காது. எவ்வாறுயினும், இங்கு போதியளவு காரீயம் இருப்பதாக ஆய்வுகள் காட்டினுல், அவற்றை வர்த்தக ரீதியிலான சுரங்கங்களாக மாற்றுவதற்கு மேலதிகமாக முதலீடு செய்யவேண்டியேற்படும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற காரீயத்தில் 95 சதவீதத்திற்கும் கூடுதலான அளவு முழுமையாகப் பதனிடப்படாது ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற காரீயம் காபன் உள்ளடக்கம் துணிக்கைகளின் அளவு என்பவற்றின் அடிப்படையிலேயே வகைப்படுத்தப்படுகின்றது. காபன் உள்ளடக்கத்தின் அடிப்படையில் பின்வருமாறு அது வகைப் படுத்தப்படுகின்றது— 70—75; 75—80; 80—83; 83—85; 85—87; 87—90; 90—92; 92—95; 95—97; 97—99; 99; 70—90 வீத காபனைக் கொண்ட காரீயம் போல்ட் சிப்ஸ், பைன் சிப்ஸ் சிப்பி டஸ்ட் என வகைப்படுத்தப்படுகின்றது. 90—97 வீத காபனைக் கொண்டவை பெரிய அளவில் பெறப்படுகின்றன. இது தவிர 97—99 வீத காபனைக் கொண்டவை தூள் வடிவில் சந்தைப் படுத்தப்படுகின்றது.

இலங்கையின் காரீயம் உலகின் பல்வேறு கைத்தொழில் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஜப்பான், ஐ அ. ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா என்பன பிரதான கொள்வனவாளர்களாகும். இதில் முதலில் குறிப்பிடப்பட்ட நான்கு நாடுகளும் வரிசைக் கிரம அடிப்படையில் பிரதான கொள்வனவு நாடுகளாகும்.

உலகின் காரீயப் படிவு 10கோடி மெட்ரிக் தொன்களுக்கும் அதிகமாகும் என அதிகாரபூர்வமான மூலங்கள் தெரிவிக்கின்றன. தற்போது வருடாந்தம் 500,000 தொன் அகழப்படுகின்றது. பெரும் பாலும் அமோபஸ் காரீயமே வர்த்தக நோக்கிற்காக அகழப்படுகின்றது. ஐ. சோ. ச. கு., வட கொரியா, தென் கொரியா, மெக்ஸிகோ, சீனு இந்தியா என்பன பிரதான இயற்கைக் காரீய உற்பத்தி நாடுகளாகும். மலகாசி, பிரதான காரீயப் படல உற்பத்தி நாடாகவும், இலங்கை பிரதான காரியக்கட்டி உற்பத்தி நாடாகவும் விளங்குகின்றன. அகழப்பட்ட காரீயத்தில் ஆகக் குறைந்தது அரைவாசி, உற்பத்தி நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1977, 1978 ம் ஆண்டுகளுக்கான காரீய வர்த்தகம் முறையே 237,000, 227,000 தொன்களாகும்; சோஷலிஸ நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் இதனுள் அடங்கவில்லை. பெருமளவிலான காரீயத்தை தென் கொரியா, ஜப்பானிற்கும், மெக்ஸிகோ, ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஏற்றுமதி செய்கின்றன. மாற்றுப் பொருட்களின் செலவின் அடிப்படையிலேயே அனேக நாடுகள் இயற்கைக் காரீயத்தைப் பாவிக்கின்றன; வழங்கல் மூலங்களின் அருகாமையும் முக்கிய இடம் பெறுகின்றன.

மசகு எண்ணெய் போன்றவற்றின் அதிகரித்த பாவனை காரணமாக, இயற்கைக் காரீயத்தின் எதிர்காலம் சிறப்பாக அமையக் கூடியதாக உள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் காரீய நுகர்வு 1985 ல் 89,500 தொன்களாகவும், 2000 ல் 117,300 தொன்களாகவும் அமையும் என ஐ. அ. சுரங்கத் தொழில் பணியகம் மதிப்பீடு செய்துள்ளது. இக் கணிப்பீடு 1973-ம் ஆண்டிற்கான அமெரிக்காவின் நுகர்வினை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கருத முடியாதுள்ளது. ஐ. அ. காரீய நுகர்வு விகிதாசாரத்தினைப் போன்று, உலகக் காரீய நுகர்வும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2000 ஆண்டில் உலக இயற்கைக் காரீய நுகர்வு வருடாந்தம் 800,000 தொன்களாக விளங்கும் எனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

---

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

மான பயிற்சி நெறிகளை வழங்குதல்.

2. விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களின் அபிவிருத்தித் திறன்களையும் ஆராய்ச்சிகளையும் வலுவாக்குதல்.
3. தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தலும் பரிமாற்றம் செய்தலும்.
4. தகவல் பரிமாற்றம் இத்தலையங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் கீழ் வரையறையான திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

மறுபுறத்தில், பங்களாதேஷ் நாட்டாய்வுக் கட்டுரை அந்நாட்டினது வரையறையான திட்டங்களுக்குள் ஒரு பன்முனைவாரியான விஞ்ஞானக் கொள்கை விரவ வேண்டும் என்ற அம்சத்தைக் கொண்டிருந்தது. பன்முனைப் பாங்கான அந்நாட்டுக் கொள்கை, 1980 ஜூலையிலிருந்து ஆரம்பமாகும் அவர்களது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது நாட்டில் ஒரு தொழில் நுட்பப் புரட்சியினைக் கொண்டு வருவது என்ற அரசின் தீர்மானத்தை எடுத்துரைத்தது. இக் கூற்று "இத்தகைய ஒரு புரட்சி மக்கள் மத்தியில் முதற்கட்டமாக இடம்பெற வேண்டும் என்று நம்பப்பட்டதால் தொழில் நுட்பப் புரட்சியில் ஒரு சாதனையை நிலைநாட்டுதற்கு மக்களின் பங்களிப்பைப் பெறுதல் திட்டத்தின் பிரதான உபாயநெறியாக இருக்கும்" என்பதை வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம்

# இறக்குமதிச் செலவு அதிகரிக்கின்றது

இந்த வருடம் ஏப்ரல் மாத முடிவுக்குள் இலங்கையின் இறக்குமதிச் செலவுகள் 1979ம் ஆண்டின் மொத்தச் செலவின் அரைவாசி அளவுக்குச் சென்றுவிட்டன. இந்த முதல் நான்கு மாதங்களிலும் இறக்குமதிச் செலவு 1090 கோடி ரூபாவாகவிருந்தது; சென்ற ஆண்டுக்கான மொத்த இறக்குமதிச் செலவு 2260 கோடி ரூபாவாகும். இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் பண்ட வர்த்தகத்தில் துண்டு விழுந்த தொகை முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியைவிட 100 சதவீதம் அதிகமாக இருந்தது. இறக்குமதிகளுக்கான ரூபா பெறுமதி 51 சதவீதத்தால் அதிகரித்துச் செல்ல, ஏற்றுமதி ரூபா பெறுமதி 15 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தமையின் விளைவாக இந்த பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. (எஸ். டி. ஆர். அளவுகளில் இறக்குமதிகள் 47 சதவீதத்தாலும், ஏற்றுமதிகள் 11சதவீதத்தாலும் அதிகரித்துக் காணப்பட்டன.) ஏற்றுமதி வருமானங்களின் மிக மெதுவான வளர்ச்சிக்கு மத்தியில், இறக்குமதிகள் மிகப்பேரளவில் காணப்பட்டமையினாலேயே இந்நிலைமை தோன்றிற்றெனலாம். எவ்வாறெனினும், நாட்டின் மத்திய—கால வளர்ச்சி உத்திகளுக்காக பெருந் தொகையான வெளிநாட்டு உதவிகள் ஒன்று திரட்டப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில், பேரளவிலான இத்தகைய இறக்குமதிகள் எதிர்பார்க்கக் கூடியதே.

அட்டவணை 1

பண்ட இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும்

ஜனவரி—ஏப்ரல் 1979, 1980—ரூ. பத்து இலட்சங்களில்

| | ஜனவரி—டிசம்பர் | | ஜனவரி—ஏப்ரல் | | 1980ன் முதல் 4 மாதங்களில் 1979ன் அதே காலப் பகுதியைவிட ஏற்பட்ட அதிகரிப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1979 | 1980 | பெறுமதி | சதவீதம் |
| இறக்குமதிகள் | 14,687 | 22,560 | 7,186 | 10,861 | 3,675 | 51.1 |
| ஏற்றுமதிகள் | 13,206 | 15,273 | 4 363 | 5,029 | 661 | 15 2 |
| வர்த்தகநிலுவை | —1,480 | —7,288 | —2,822 | —5 832 | 3,010 | 106.7 |

எஸ். டீ. ஆர். அளவுகளில் பார்க்கும்போது, 1978ல் 7.6 கோடியாக இருந்த வர்த்தகப் பற்றுக்குறை 1979ல் 36.2 கோடியாக— அதாவது ஐந்து மடங்கால்— அதிகரித்துச் சென்றிருப்பதைக் காணமுடிகிறது. இவ் வருடத்தின் முதல் 4 மாதங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் எஸ். டீ. ஆர். பற்றுக்குறை 28.4 கோடியாகும். தற்போதைய **செயற்பாடுகளைப்** பார்க்கும்போது, 1980ம் ஆண்டின் வர்த்தகப் பற்றுக்குறை முன்னைய ஆண்டைவிடவும் இரட்டிப்பாகலாம் என ஊகிக்க முடிகின்றது.

இறக்குமதிச் செலவு அதிகரிப்பின் ஒரு பிரதான காரணி மூலதனப் பொருட்களின் இறக்குமதியிலேற்பட்டிருக்கும் தீவிர அதிகரிப்புக்களாகும். குறிப்பாக, மார்ச்சில் முடிவடைந்த ஆண்டுக்கான வரி ஊக்குவிப்புக்களின் எதிர்பார்ப்பு இதனைத் தூண்டிய பிரதான காரணமாகும். மேலும், சீனி, மா, மசகு எண்ணெய், இயந்திரங்கள், வாகனங்கள் என்பவற்றின் இறக்குமதி அளவு அதிகரித்ததுடன், விலைகளும் அதிகரித்துக் காணப்பட்டன.

**ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின்** அதிகரிப்பு—குறிப்பாக பாரம்பரிய ஏற்றுமதிகள் மூலமானது — மிகக் குறைவாகவே இருந்தது. தேயிலை, இறப்பர் என்பன மூலமான சம்பாத்தியங்கள் மார்ச் மாதம் வரை சுமார் 6 சதவீதத்தால் அதிகரித்ததுடன், தெங்குப் பொருள் ஏற்றுமதிச் சம்பாத்தியம் சுமார் 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சிறு விவசாயப் பயிர்கள் மூலமான ஏற்றுமதி வருமானம் வருடத்தின் முதல் காலாண்டில் 7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இரத்தினக்கல் ஏற்றுமதி வருமானத்தில் பதிவு செய்யப்பட்ட வீழ்ச்சி 25 சதவீதமாகும். அதேவேளையில், முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1980ம் ஆண்டின முதல் காலாண்டில் கைத்தொழில் உற்பத்திகள் மூலமான ஏற்றுமதி வருமானம் சுமார் 75 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. தயார் செய்யப்பட்ட துணிமணிகளே இதற்கு பிரதான பங்களிப்பை வழங்கின எனலாம்; 1979ன் முதல் 3 மாதங்களில் 19.3 கோடி ரூபாவாக இருந்த ஆடை ஏற்றுமதி வருமானம், இவ்வருடத்தின் அதே காலப்பகுதியில் 32.5 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தது.

அட்டவணை 2

பண்ட இறக்குமதி, ஏற்றுமதிகளின் பெறுமதி

ஜனவரி—ஏப்ரல் 1979, 1980—பத்து இலட்சம்

எஸ். டீ. ஆர். களில்

| | ஜனவரி—டிசம்பர் | | ஜனவரி—ஏப்ரல் | | ஏப்ரல் 1979ல் முடிவடைந்த 4 மாதங்களுடன் ஒப்பிடும்போது 1980ன் முதல் 4 மாதங்களில் அதிகரிப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1979 | 1980 | பெறுமதி | வீதம் |
| இறக்குமதிகள் | 753 | 1,120 | 360 | 528 | 168 | 46.3 |
| ஏற்றுமதிகள் | 677 | 758 | 218 | 244 | 26 | 100 3 |
| வர்த்தகநிலுவை | —76 | —362 | —142 | —284 | 142 | 11.2 |

மூலம்: வர்த்தக திணைக்களத்தின் புள்ளி விவரத் திரட்டுக்களும், ஸ்ரீலங்கா சுங்கத்தரவுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானமும் சமூகமும்

# ஐ. நா. அபிவிருத்திக்கான விஞ்ஞான தொழில் நுட்ப மாநாடு

கடந்த தசாப்தத்தில் ஐ· நா· ஏற்பாடு செய்த எட்டுச் சிறப்பு மாநாடுகளில் இறுதி மாநாடு 1979 ஆகஸ்டில் வியன்னாவில் நடைபெறலாயிற்று· இது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திக்கான விஞ்ஞான தொழில்நுட்ப மாநாடாகும். (ஐ· நா· அ· வி· தொ·)· இம்மாநாட்டுக்கு முன் பல தொடரான தயார்நிலைக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களுக்கு 142 அரசுகளையும், 3 தேசிய விடுதலை இயக்கங்களையும் (பலஸ்தீன விடுதலை இயக்கம், தென்னாபிரிக்காவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், சிம்பாப்வே தேசபக்த முன்னணி) பிரதிநிதித்துவப்படுத்தும் ஏறத்தாழ 2,000 பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் பல பிராந்திய ஆணைக் குழுக்களினதும் ஐ· நா· குழுக்களதும் சிறப்பார்ந்த சர்வதேச உயர் அலுவல் நிறுவனங்களதும் அரசிடைத் தொடர்புச் சபைகளதும் பிரதிநிதிகளும் சமுகம் தந்திருந்தனர்· இம்மாநாட்டின் முழுச் செலவும் ஐந்து கோடி டாலர்களுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டது. இவை எல்லாம் இந்த அமர்வுகளுக்கு அவற்றின் ஏற்பாட்டாளர் அளித்த முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றன· எனினும் பல வட்டாரங்களில் இத்தகைய பெரிய மாநாடுகளின் விளைவுகள்பற்றிய நம்பிக்கையின்மை எழாமல் இல்லை. இதில் விஞ்ஞான சமூகம் கலந்து கொண்டது மிகக் குறைந்த அளவிலேயே· இதே போன்றதே அரசுசாராச் சபைகளை ஈடுபட வைப்பதற்கு அமைப்பாளர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியுமாகும். அரசுசாரா நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாற்று மாநாடுகளும் இம்மாநாடுகளை அடுத்த நிரந்தர அம்சங்களாகிவிட்டன இந்த மாற்று மாநாட்டில் அமைப்பாளர்களில் ஒருவராக ஈவான் இலியிச் இருந்துள்ளார். ஐ· நா· பிரசுரங்கள்கூட "பெரிய மாநாடு சாதித்ததைவிட அ· சா· மா· குறைந்தபட்சம் கருத்துப் பரிமாறல், சொற்பொழிவு ஆகியவற்றில் அதிகம் சாதித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளன· இத்தகைய அமைப்பு வழிக் குறைபாடுகள் ஒருபுறமிருக்க, மாநாட்டின்போது ஏற்பட்ட பிரதான சிக்கல் வளர்முக நாடுகளினதும் அபிவிருத்தி அடைந்த நாடுகளினதும் நேருக்கு நேர் முரண்பட்ட அக்கறைகளிலிருந்து தோன்றியதாகும். இது மூன்றாவது அகில நாடுகள் பேண விரும்பும் நலன்களதும், முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளிலும் இணக்கத்தைத் தடைப்படுத்துகிறது·

மாநாட்டுக்கான தயாரிப்புகளில் கீழ்க்கண்ட நான்கு அம்சங்கள் நிகழ்ச்சிநிரலில் அடக்கப்பட்டிருந்தன :

1. அபிவிருத்திக்கான விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்·
2. விஞ்ஞான தொழில்நுட்பங்களைப் பிரயோகிப்பதில் நிறுவனப் பாங்கான ஏற்பாடுகளும் சர்வதேச ஒத்துழைப்பின் புதிய உருக்களும்·
3. ஏற்கனவே உள்ள ஐ· நா· ஒழுங்குகளையும் சர்வதேச அமைப்புகளையும் பயன்படுத்துதல்·
4. விஞ்ஞான தொழில்நுட்பங்களும் எதிர்காலமும்·

ஆனால், மாநாட்டின் விளைவாகத் தோன்றிய "அபிவிருத்திக்கான விஞ்ஞான தொழில்நுட்பம் மீதான வியன்னா நடவடிக்கைத் திட்டம்" என அழைக்கப்படும் நடவடிக்கை நிகழ்ச்சி சற்று வித்தியாசமான தலைப்புகளின் கீழ் விபரப்படுத்தப்பட்டன. இது அநேகமாக மாநாட்டு இயக்கத்தின்போது கொண்டுவரப்பட்டு ஆராயப்பட்ட பிரச்சினைகளைப் பிரதிபலிப்பதாய் இருந்தது வியன்னா நடவடிக்கை நிகழ்ச்சி 3 பிரிவுகளைக் கொண்டிருந்தது. பிரிவு ஒன்று, அபிவிருத்தியடைந்த நாடுகளின் விஞ்ஞான தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்துவது; பிரிவு இரண்டு, ஏற்கனவே உள்ள சர்வதேச விஞ்ஞான தொழில்நுட்ப உறவு மாதிரிகளைப் புனரமைப்பது; பிரிவு மூன்று, விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளிலும் அதிகரித்த நிதி வளங்களிலும் ஐக்கிய நாடுகள் ஒழுங்குகளின் நடவடிக்கைக் கைங்கரியங்களினை வலுவாக்குவது· பிரிவு ஒன்றும் இரண்டும் அநேகமாக தயார்நிலை நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டிருந்தது. ஏற்கனவே உள்ள உறவுகளை மாற்றுவதுபற்றி எடுத்துரைக்கும் மூன்றாவது பிரிவு விஞ்ஞான தொழில்நுட்பம் தொடர்பாக ஏற்கனவே உலகிலுள்ள சமன்பாடற்ற உறவுகளைப் பிரதிபலிக்கும் ஒரு அம்சமாக இருந்தது·

நாடுகளுக்கிடையிலான விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தியில் ஏற்கனவே நிலவும் உலகளாவிய சமன்பாடின்மைகளும் அவற்றின் மத்தியில் உள்ள பொருளாதார அபிவிருத்தியின் சமன்பாடற்ற அளவு மட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. அவை நிலவிவரும் உலகளாவிய அமைப்புரு உறவுகளைக் கோலமிடுகின்றன· எனவே, ஒவ்வொரு சர்வதேச மாநாடுகளிலும் அவை வர்த்தக, தகவல் அல்லது விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திகள் தொடர்பாக இருந்தனவோ அல்லவோ, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஏற்கனவே உள்ள அமைப்புரு உறவுகளில் மாற்றம் ஏற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளன என்பது புதுமையல்ல. ஐ· நா· அ· வி· தொ விலும் கூட இம்முக்கிய பிரச்சினை ஒரு முற்றும் புதிதான பிரிவொன்றை நடவடிக்கை நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளப்பட வழிகோலி உள்ளது· ஆனால் சுருங்கச் சொல்வதாயின், அமைப்புக்குப் பிரச்சினையையும் அவற்றை மாற்றுவதற்கான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டால் அபிவிருத்தி அடைந்த நாடுகளும் அபிவிருத்தி அடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நாடுகளும் இவ்விஷயத்தில் ஒன்றை ஒன்று தூர விலகி நிற்பதை அவதானிக்கலாம்.

பல்தேச ஏகபோக நிறுவனங்களும் வேறு முதலீட்டு நிறுவனங்களும் கீழ்க்கண்ட வழி முறையில் நடக்கக் கூடியதாக அமைதல் வேண்டும் :

(1) அவை தடைக்கல்லாய் அமையாது நாட்டுக்குள்ளேயே தொழில்நுட்பம் பிரயோகமாகிக் கலக்கத்தக்க முறையில் பங்களிப்புச்செய்ய வேண்டும்.

(2) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உபநிறுவனங்கள் ஆராய்ச்சியையும். அபிவிருத்தியையும் மேற்கொண்டு நடத்த அவை ஊக்கம் கொடுத்து உள்நாட்டு விஞ்ஞான தொழில்நுட்ப ஆளணிகளை இப்படி முறையில் கலந்துகொள்ள ஏதுவாக உடன் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(3) உள்நாட்டு மூலப்பொருள்களையும், இடைநிலை உற்பத்திப் பொருள்களையும் தொழில் நுட்பத்தையும் ஆளணிகளையும் பயன்படுத்துவதில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

(4) தொடர்புபட்ட நாடுகளில் தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.

(5) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மேற்கொள்ளப்படும் அவர்களது ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளின் பெறுபேறு தொடர்பான தகவல்களைப் பொருத்தமான தேசிய அதிகாரபீடங்களுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்ய வேண்டும்.

(6) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடனும் முதலீட்டு, ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களுடனும் ஒத்துழைப்புத் திட்டங்களையும் கூட்டு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய வரைமுறையான முன்மொழிதலுக்கு மூன்றாவது அகில நாடுகளின் ஏற்கனவே நிலவும் சூழ்நிலையோடு தொடர்புண்டு. பொருத்தமானதும் இடைநிலைப்பாங்கானதுமான தொழில் நுட்பம் தொடர்பாக அதிக பேச்சுக்கள் அடிபடும் அதே வேளையில், அந்நிய முதலீடுகளின் மூலம் தொழில்நுட்பப் பரிமாற்றம் மூன்றாவது அகில நாடுகளுக்குள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உண்மையில் இதுவே எதிர்வரும் பல ஆண்டுகளுக்கு மூன்றாவது அகிலத்துள் தொழில்நுட்பம் புகுத்தப்படும் பிரதான வழியாக இருக்குமென ஒருவர் சொல்லிக்கொள்ளலாம்.

இம்முன்மொழிதல் மூன்றாவது அகில நாடுகளின் நன்மைக்கான சூழ்நிலைக்கு கருமமாற்ற முயல்கிறது. ஆனால், இறுதி அறிக்கையில் மூலாதாரமான முன்மொழிதல் ஒரு மிகப் பொதுமையான அறிக்கையாக மாற்றப்பட்டுள்ளது. இவ்வறிக்கை யதார்த்தபூர்வமாகப் பார்க்கையில் மிகக் குறுகிய ஒன்றாகவே காணப்படுகிறது. காரணம், இதற்குப் பல நிலைகளில் அபிவிருத்தி அடையும் நாடுகளின் ஆட்சேபனை இருப்பதே.

அபிவிருத்திக்கான எந்த உடன்படிக்கைக்கும் மைல்கல்லாக இருப்பது அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு நிதி வளங்கள் பரிமாற்றம் பெறுவதே என்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கருதி வந்தபோதிலும், இம்மாநாடுகளில் உடன்பாட்டுக்கு வர முடியாதிருந்த வேறு பகுதி நிதியீடாகும்.

ஐ- நா- அ- வி- தொ- மாநாடு அபிவிருத்திக்கான விஞ்ஞான தொழில்நுட்ப அரசிடைக் குழுவொன்றை உருவாக்குவதற்கு ஒப்புக்கொண்டது. விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் தீவிரமாயிருக்கும் பல ஐ- நா- நிறுவனங்களுக்குப் பிரதான கொள்கை வகுக்கும் கைங்கரியத்தை இக் குழு மேற்கொள்ளும். சிறப்பு வரையறையாக "நிதியீட்டு இயக்க முறைக்கு" இக் குழு அனுசரணைகளை நிறுவும் எனினும் ஒரு நிரந்தர அடிப்படையில் இவ்வியக்கு முறைகள் ஏற்பாடு செய்யப்படும்வரை ஐ- நா- அபிவிருத்தித் திட்டத்தால் நிர்வகிக்கப்படும் இடைக்கால நிதியான 25 கோடி டொலர்கள் கொண்ட நிதியொன்று 1980 க்கும் 1981 க்கும் ஏற்பாடு செய்யப்படும்.

உண்மையில், நிதியீட்டின் மூலம் வியன்னாவில் சாதிக்கப்பட்டதென்னவெனில் மனமுவந்த செலுத்துதலின் மூலம் பெறப்படும் 25 கோடி டொலர் அளவான இடைக்கால நிதியொன்று ஏற்பாடு செய்யப்பட்டதாகும். ஆனால், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இதைவிட அதிகமான நிதி உதவியை எதிர்பார்த்திருந்தன. ஆராய்ச்சி அபிவிருத்திகளில் உலகில் வருடாந்தம் செலவிடப்படும் 1500 கோடி டொலருடன் ஒப்பிடும்போது இத் தொகை மிகக் குறைவானதால், "கொச்சை உணவென்று" இது ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறிய வருடாந்த செலவினத்தின் 98 % அபிவிருத்தியடைந்த நாடுகளால் செலவிடப்படுகின்றது. ஆனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஆரம்பக் கோரிக்கை 1985 க்கு 200 கோடி டொலரும் 1990 க்கு 400 கோடி டொலருமாகும்.

## ஐ. நா. அ. வி. தொ — மேலும் ஒரு கூட்டம்

தெற்கு மத்திய ஆசியாவிலிருந்து வந்த நிபுணர்களின் பிராந்தியக் கூட்டம் ஒன்று 1980 மே 6-ந் திகதி தொடக்கம் 9-ந் திகதிவரை கொழும்பில் நடைபெற்றது. தேசிய பிராந்திய திட்டங்களையும், விஞ்ஞான தொழில் நுட்பங்கள் மீதான திட்டங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான அவசியத்தின் பேரிலான ஐ- நா- அ- வி- தொ- விதப்புரைகளின் தொடராக இது நடைபெற்றது. இக்கூட்டத்தின் பிரதான நோக்கங்கள் விஞ்ஞான , தொழில்நுட்பங்களில் பிராந்திய ஒத்துழைப்புக்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிவதற்கும், ஐ- நா- அ- வி- தொ- இடைக்கால நிதியினால் நிதியீடு செய்யப்படுதற்கு முன் வைக்கக்கூடிய திட்டங்களை இனங் காண்பதற்குமாய் அமைந்தன.

இக் கூட்டத்திற்கு ஆப்கானிஸ்தான். பங்களாதேஷ், இந்தியா, ஈரான், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகளின் நிபுணர்கள் சமுகந்தந்திருந்தனர். அவர்களோடு ஐ- நா- பிராந்திய சபைகளிலிருந்தும் ஐ- நா- சிறப்பு முகவர் நிலையங்களிலிருந்தும் பார்வையாளர்களும் பிரதிநிதிகளும் சமுகம் தந்திருந்தனர். கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நாட்டாய்வுக் கட்டுரைகளை வெவ்வேறு நாடுகளினது முன்னுரிமைகளைப் பிரதிபலிப்பனவாய் இருந்தன. உதாரணமாக இலங்கை ஆய்வுக் கட்டுரை ஒத்துழைப்புக்கான கீழ்க்கண்ட நான்கு சாத்தியபூர்வமான வழிகளை எடுத்துக்காட்டியிருந்தது :

1. பல்கலைக்கழகங்களிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், வேறு பயிற்சி நிலையங்களிலும் விருத்தியுற்றவையும், பொருத்த முடையவையு

(22-ம் பக்கம் பார்க்க)

# புதிய உலகின் தகவல் ஒழுங்கு

## மூன்றாவது அகிலத்திலிருந்து ஒரு கண்ணோட்டம்

—முஸ்தபா மஸ்மௌதி

— முஸ்தபா மஸ் மௌதி அண்மையில் பாரிஸிலுள்ள யுனெஸ்கோ நிறுவனத்தில் டியுனீஸியக் குடியரசின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பதவியேற்றவர். அவர் "புதிய உலகின் தகவல் ஒழுங்கு" பற்றி பல கட்டுரைகள் எழுதியும் பிரசுரங்கள் வெளியிட்டும் பிரபல்யம் பெற்றவர். பலகாலமாக டியுனீஸியாவில் தகவல் துறை அரசுச் செயலாளராகவும் அணிசேரா நாடுகளுக்கிடையிலான தகவல் இணைப்பின் அரசிடைச் சபையின் தலைவராகவும் இருந்து சர்வதேச கலந்துரையாடல்களில் தீர்க்கமான செல்வாக்கினை ஏற்படுத்தியவர். 1978 டிசம்பரில் பொன்னில் இடம்பெற்ற புதிய உலகத் தகவல் ஒழுங்கு தொடர்பான சர்வதேச மாநாட்டில் அவர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையில் ஒரு புதிய தகவல் ஒழுங்கு வேண்டிய தன் உள்நோக்குப்பற்றித் தமது சுருக்கமான பார்வையைச் செலுத்துகிறார்.

பரஸ்பரப் புரிந்துணர்வு, விசுவாசமான ஒத்துழைப்பு, உலக சமாதானம், சர்வதேச நீதி — இச்சொற்றொடர்களை உபயோகிப்பதில் நாம் எப்போதுமே களைப்படைவதில்லை. அவை இலட்சிய சாம்ராஜ்யத்தைச் சார்ந்து நிற்கும் கோட்பாடுகளுமாகும். இச்சொற்றொடர்களை மனித சமூகம் அடிக்கடி உபயோகிப்பதினால் அவற்றின் யதார்த்தப் பொருளுணர்வை அபகரித்து, அவை உள்ளடக்கிய இலட்சியங்களை அடையத் தவறி வந்துள்ளது.

இத்தகைய உன்னத குறிக்கோள்கள் மக்கள் ஆதரவும், அரசுக்குப் பொறுப்பானவர்களது ஆதரவும் பெற்றாலன்றி தொடர்ந்தும் மனிதப் பிடிக்கு அப்பாற்பட்டதாகவே இருந்து வரும். இத்தகைய பாரிய கைங்கரியத்தினைக் கவனிப்பதற்கான அதிகபட்ச திறம்வாய்ந்த கருவியாக தகவல் ஊடகத்தினைக் காணலாம். எனவே தகவல் ஒழுங்கு, ஏதேச்சாதிகாரத்தை ஆதரிப்பதற்குப் பதிலாகச் சமாதானத்தினையும், சமநலத்தையும் ஆதரிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் செய்தி சேகரித்து வழங்கல் உண்மையில் குறிக்கோள் உடையதாகவும், பாகுபாடற்றதாகவும், முழுமையானதாகவும் அமைதல் வேண்டும். சுயாதீனமான தகவல் பிரவாகம் மக்களுக்கிடையே ஒரு தொடர்பு சாதனமாகவும், நாடுகள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வையும் அறிவையும் வளர்க்கும் கருவியாகவும் இருந்து சர்வதேச உறவுகளில் தீர்க்கமான பங்களிப்பினைச் செய்யும் என்பது வலியுறுத்திச் சொல்லப்பட வேண்டிய ஒன்றல்ல. இன்று சுயாதீனமான தகவல் பரிமாற்றம், உலகின் தனித்தனிப் பிராந்தியங்களுக்கிடையில் குறிப்பாக ஒரு புதிய பொருளாதார ஒழுங்கினை நிறுவுவதற்கான ஆவலுக்கு அனுசரணையான அபிலாஷைத் திட்டங்களை சர்வதேச சமூகம் அடைதற்கான அவசிய விதிகளையும் பிரதிபலிக்கின்றது.

இன்று எப்படியோ எமது பொதுசனத் தொடர்புசாதனமும் அது ஆளும் பொருளும் பொருளாதார சமூக அபிவிருத்தி கலாசாரத் துறைகளில் அத்தகைய ஒரு ஒழுங்கின் விருத்தியினை அநேகமாகத் தடைசெய்து வருகின்றன.

தகவல் — அது இன்று உபயோகப்படுத்தப்படும் விதம், (நாடுகளுக்கிடையிலான தூரம் குறுகி வர மக்களதும், நாடுகளதும் கவனம் அதிகளவில் ஒன்றையொன்று பின்னிவரும் உலகில் உள்ள) ஒவ்வொரு பிரசையதும் கரிசனையை ஈர்க்கவல்ல பிரச்சினைகளை அதிக அளவில் புரிந்துகொள்ளத்தக்க வகையில் சர்வதேச எண்ணத்தை வளர்ப்பதற்கு வழிவிடுவதில்லை. உலகம் முழுக்க உள்ள சமூகங்களில் காணப்படும் பொதுவான ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிக்கும் அடிப்படை முரண்பாடுகளால் கோலமிடப்பட்டவையாய் இன்றைய தொடர்பு சாதனங்கள் திகழ்கின்றன. சட்டம், தொழில் நுட்பம், நிதி அல்லது வர்த்தகம் போன்ற விடயங்களிலும் பார்க்க தத்துவம், அரசியல், சமூகவியல் போன்றவற்றிலான சிந்தனைகளில் வெளிப்படையாக அவை தெரிகின்றன.

இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் கைத்தொழில்மய நாடுகளிலிருந்து மூன்றாவது அகில நாடுகளுக்கு ஒரு வழிப்பாதையாக பிரவகிக்கும் தகவல்களின் பாரிய அளவில் பிரதிபலிக்கின்றன.

மிக முக்கியமான கைத்தொழில்மய நாடுகளில் உள்ள ஒலிபரப்பு நிறுவனங்கள் வானொலி அலைவரிசைகளில் 90 சதவீதமானவற்றைத் தமக்கே வைத்துக் கொண்டிருப்பதும், உலகில் உள்ள சகல தகவல்களினதும் 80 சதவீதமானவற்றை வெளியிடும் பாரிய சர்வதேசச் செய்தி முகவர் நிலையங்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தகவல்களுக்கு ஆகக்கூடிய 25 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருப்பதும் முறையான செய்கைகள்தாமா?

தற்போதைய முறை ஒருவகையான அரசியல், பொருளாதார, கலாசார ஆதிக்க அமைப்பை அங்கீகரித்துக் கொண்டிருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அடிக்கடி நிகழும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பற்றிய செய்தித் திரிப்புகள் மூலம் நிரூபிக்கப்படுகின்றன.

சட்ட அம்சங்களையும் பொறுத்தமட்டில் சர்வதேசச் சட்டத்தின் பொருத்தமின்மையையும், இப்பிரச்சினையின் முக்கிய பகுதிகளினை ஆளக்கூடிய எந்தவித சட்டவியல் ஏற்பாடுகளும் அருகி இருப்பதையும் நான் இங்கு குறிப்பிடலாம்.

தொழில்நுட்ப வழியில் பார்த்தாலும் குறைந்த வளத்திறனும், குறைந்த நுகர்வும் உள்ள நாடுகள் இன்றும் தண்டிக்கப்பட்டு வருவது வருத்தமானதும், அவலமானதுமாகும். ஒரு செய்தி வெளியீடு இரண்டு கைத்தொழில்மய நாடுகளில் கைமாறும்போது பெறும் விலையைவிட ஒரு வளர்முக நாட்டில் விற்பனையாகும் போது அதிக விலையைப் பெறுகின்றது. இதற்கான காரணம் ஐரோப்பாவில் அல்லது வட அமெரிக்காவில் இருந்து வரும் போது அது பெறும் கடப்பாட்டுப் பரிமாணம் ஆகும்.

வளர்முக நாடுகளுக்கும் கைத்தொழில் மய நாடுகளுக்கும் இடையில் உள்ள இடைவெளி ஒழுங்காக விரிந்து செல்கிறது. செய்மதிகள் போன்ற அதிகளவு தொழில்நுட்பத்தை நாடி நிற்கும் புதிய தொடர்புசாதனத் தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை மூன்றாவது அகில நாடுகளுக்கு அதிகரித்த அச்சுறுத்தலைப் பிரதிபலிக்கின்றது.

தற்போதைய முறையின் சில குறைபாடுகள் இவை. ஆனால் ஒரு புதிய ஒழுங்கு அறிமுகமாவதை ஆதரிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானத்தை நியாயப்படுத்துவதற்கு இவை போதுமானவை என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இதில் ஒரு மிக அத்தியாவசிய தேவை என்னவெனில் இது தற்போது நிகழும் "ஆளுவோரும் ஆளப்படுவோரும்" என்ற நிலையை நீக்கி, தொடர்புபட்ட நாடுகளின் பிரதேச நலன்களையும், இறைமையையும் மதிக்கக்கூடியதும் சுயாதீனமானதும் பாகுபாடற்றதுமான தகவல் பரிமாற்றத்தினால் பிரதிபலிக்கப்படுவதான சமதை நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதே.

வளர்முக நாடுகள் வெறும் தகவல் நுகரும் நிலையை நிறுத்தி சகல நிலைகளிலும் சுதந்திர உற்பத்தியாளர்களாக மாறுதற்கு இது ஒரு சவாலை வழங்கும். முதலில் நாம் தற்போதைய தகவற் கோட்பாட்டை ஆராய்ந்து அது ஒரு வெறும் நுகர்வுப் பொருளாய் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். அது முன்னர் எப்போதும் இருந்தபடி ஒரு சமூக அவசியமாகத் திருப்பப்பட வேண்டும். இது இடம்பெறுவதற்கு வளர்முக நாடுகளையும் அபிவிருத்தி அடைந்த நாடுகளையும் சர்வதேச நிறுவனங்களையும் பொறுத்தளவில் தொடர்ச்சியான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் சகல நாடுகளதும் அக்கறைகளும் பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்றை ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன என்ற உண்மைக்குப் பொது மக்களின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் நெருங்கிய உறவினை ஊக்குவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பொதுசனத் தொடர்புகளில் புதிய நுண்பரிமாணங்கள் புகுத்தப்பட வேண்டும். அல்லது தகவல் பிரவாகத்தைத் தேசிய மணம் வீசச் செய்யும் முயற்சியிலும் உலகின் தனித்தனிப் பிராந்தியங்களுக்கிடையில் தொடர்ச்சியான பரிமாற்றத்தை அனுமதிப்பதிலும் ஏற்கனவே உள்ள நுண்பரிமாணங்கள் விருத்தியாக்கப்பட வேண்டும்.

தகவலிற்கான உரிமையின் புதிய வரைவிலக்கணம் ஒன்றினைத் தேடுதலும் அதிக ஆற்றல்வாய்ந்த சட்டவியல் ஏற்பாடுகள் வரையப்படுதலும் முன்னுரிமை பெற வேண்டும்.

அதே நேரத்தில் தொடர்புசாதனங்களையும் தகவல் பிரவாகத்தையும் விருத்தி செய்வதற்கான சர்வதேசக் கடப்பாட்டு விவரப்பட்டியல் ஒன்றினை வரைதற்கு வேண்டிய அவசியத்தை நாம் மறந்துவிடலாகாது. இது பத்திரிகையாளரைப் பாதுகாக்கும் என்பதோடு மட்டுமல்லாது தனி மனிதனையும் சமூகத்தையும் முழுமையாகவே துஷ்பிரயோகத்தில் இருந்தும், மானநட்டத்திலிருந்தும், அவமரியாதையிலிருந்தும் காப்பாற்றும்.

> செய்தி முகவர் நிலையங்களுக்கு மட்டும் வரையறையாக மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளைப் புகுத்தும் முறையல்ல இது... மாறாக நேரடியாகவோ மறைமுகமாகவோ தகவல் நிரம்பலைப் பாதிக்கும் சகல துறைகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டிய ஒரு படிமுறை.

நுண் தொழிற்றுறைகளில் நிலவும் பல வகையான சமனின்மைகளும் நடவடிக்கைகளுக்கான சாத்தியப்பாடுகளை வழங்குகின்றன. சில உதாரணங்கள் இதோ— வானொலி அலைவரிசைகளின் பங்கீட்டில் மறுபரிசீலனை, செய்மதிகளை நியாயபூர்வமாகவும் பாகுபாடற்றதாகவும் பயன்கொள்ள உடன்படிக்கை ஒன்றினை வரைதல். அபிவிருத்தி அடையும் நாடுகட்கு செய்தி வழங்குதலில் தீர்வைக் குறைப்பு.

வளர்முக நாடுகளுக்கு தொழில்நுட்பங்கள் மாற்றப்படும்போது அதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. தகவல் பரிமாற்றத்திற்கு நிதியீடு செய்வதற்கு வேண்டி ஒரு சிறப்பு நிதி நிறுவப்பட்டால் மட்டுமே இந்த நோக்கை அடைய முடியும். நாம் கட்டியெழுப்ப எண்ணும் கட்டடத்தின் முக்கிய கல்லாக இந்நிதி கொள்ளப்பட வேண்டும் என்று இம்மதிப்பு மிக்க மாநாட்டை வேண்டிக்கொள்கின்றேன்.

சுயாதீனமான தகவல் பரிமாற்றத்திற்கான புதிய உலக ஒழுங்கு தொடர்பான எமது நடவடிக்கைகளின் நோக்கங்கள் இவையே. இவ்வொழுங்கு அமைதற்கு அடித்தளமாக உள்ள பிரதான கோட்பாடுகள் சிலவற்றை நான் குறிப்பிட்டுள்ளேன். சில வட்டாரங்களில் இப்புதிய ஒழுங்கு ஏற்கனவே சில ஆதாரமற்ற பீதிகளையும், நியாயபூர்வமற்ற கருத்துக்களையும் தன்னிச்சையான கருத்துரைகளையும் தோற்றுவித்துள்ளது.

புதிய உலக தகவல் ஒழுங்கிற்கான அழைப்பு விடுதலைக்கான அதே ஆவலை அடியொற்றியது. அப்படி இல்லையெனின் ஒரு புதிய பொருளாதார ஒழுங்கிற்கான அழைப்பிற்குரிய அதே நோக்கத்தைக் கொண்டது. இவ்விரண்டுமே பராதீனப்படுத்தலுக்கு முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைக் கொண்டுவந்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மத்தியிலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் ஏனைய உலகத்திற்கு இடையிலும் கூட்டுறவினை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டவை.

நாம் எந்த வகையிலும் தகவலின் அரச கட்டுப்பாட்டை அங்கீகரிக்க முயலவில்லை. அதே நேரத்தில் சுயாதீன தகவற் பிரவாகத்தைத் தடுக்கவும் முயலவில்லை. மாறாக தகவல்களின் கிடையான பரவலை அனுமதிக்கத் தேவையான பிராந்திய உன்னத தேசிய அமைப்புகளை ஊக்குவிக்கவல்ல ஒரு முறையையே தரிசிக்க விரும்புகின்றோம். மேலும் தனி மனிதனது உரிமையையும், தகவல்களை அனுப்பவோ பெறவோ மக்களுக்கும் அரசுக்கும் உள்ள உரிமையையும் பாதுகாப்பதன் மூலமும் கடப்பாட்டு விவரப்பட்டியலை அறிமுகப்படுத்துவதனால் கிடைக்கக்கூடிய வளங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதன்மூலமும் தகவல்களின் சுயாதீனமான பரிமாற்றத்தை உத்தரவாதப்படுத்தக்கூடிய ஒருமுறை எமக்கு வேண்டும்.

இது செய்திப் பிரவாகத்தைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையாகாது. ஏனெனில் இந்த முறை பொது சனத் தொடர்பை சகல நாடுகளுக்கும் கிடைக்கக் கூடியதாகச் செய்யும் நோக்குடனும், தகவல் வளங்களை அதிகரிக்கச் செய்து அதனால் தகவலின் தொகையைக் கூட்டும் நோக்குடனும் செய்யப்படும் ஒரு முறையாகும்.

இறுதியாக, செய்தி முகவர் நிலையங்களுக்கு மட்டும் வரையறையாக மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையல்ல இது. மாறாக, இது நேரடியாகவோ மறைமுகமாகவோ தகவல் வழங்கலைப் பாதிக்கும் சகல துறைகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டிய ஒரு படிமுறை. நாம் முதலில் பொது சனத் தொடர்பு சாதனத்தில் தொடங்கி சட்ட, தொழில்முறை, கலாசார அம்சங்கள் வழியாக செய்மதிகள்வரை முன்னேறிச் செல்ல வேண்டும்.

புதிய உலக ஒழுங்கு தகவல் நிரம்பலினை தேசிய மணங் கமழச் செய்ய மட்டும் உத்தேசிக்கப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக

(33-ம் பக்கம் பார்க்க)

# நவீன தொடர்பு சாதன முறைகள்

## பிரச்சினைகளும் விருத்தி வாய்ப்புக்களும்

—உ. ஆர். மங்கேகார்

நவீன பொதுசனத் தொடர்பு முறைகள் மின்னியல் செக்கண்டுகளுக்குக் கணிக்கப்பட்ட வேகத்தில் உலகெங்குமுள்ள கோடிக் கணக்கான மக்களைச் சென்றடைய முடிகிறது. மின்னியற்றொழில் நுட்பத்தின் பாரிய கொள்திறன் வளர்முக நாடுகளுக்கு பெரிய அளவிலான பிரச்சினைகளையும், அனுகூல வாய்ப்புக்களையும் வழங்குகிறது: இறக்குமதி செய்யப்பட்ட உலோகப் பொருளாக இருக்கும் இது அநேகமாக மென் பொருள்களோடு முடிச்சிடப்படுவதால் பிரச்சினைகள் உருவாகின்றன; வளர்முக நாடுகளில் உள்ள கிராமங்கள் தோறும் செறிந்துள்ள மக்களைச் சென்றடையக் கூடியதாக இறக்குமதி செய்யப்பட்ட பொதுசனத் தொடர்புத் தொழில் நுட்பம் புத்திசாலித்தனமாக பயன்படுத்தப்பட முடியுமானால் அது அனுகூலமாகின்றது.

புதுடில்லியில் உள்ள அகில இந்திய வானொலித் தலைமைப் பணியக முகப்பில் பிரவேசித்ததும் கீழ்க்கண்ட பொன்வர்ண வாசகங்கள் கவனத்தை ஈர்க்கும்.

“எனது வீட்டுக்குச் சகல பக்கங்களிலும் சுவரெழுப்பப் பட்டு யன்னல்களை இறுக்கி மூடப்பட்டிருப்பதை நான் விரும்பவில்லை. சகல நிலங்களினதும் கலாசாரக் காற்றுக்கள் முடிந்தவரைக்கும் என் வீட்டை நோக்கி சுயாதீனமாக வீசுவதை நான் விரும்புகின்றேன். ஆனால், அவை என்னை அள்ளிச் செல்வதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். எனது கொள்கை ஒரு சிறைச்சாலையின் மதமல்ல” தேசபிதா காந்தியின் இவ்வார்த்தைகள் சுதந்திரத்தில் இந்தியாவுக்குள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவதோடு மட்டுமன்றி வளர்முக நாடுகள் எதிர்நோக்கும் மாயைகளை வெளிச்சமிட்டுக் காட்டுவனவாயுள்ளன.

நாம் எமது சொந்தக் கலாசாரங்களை வேறு கலாசாரங்களின் சுதந்திரமான காற்றினால் வளப்படுத்த விரும்புகின்றோம். ஆனால், விதேச கலாசாரங்களின் சூறைக் காற்றினால் அள்ளிச் செல்லப்படுவதை நாம் விரும்பவில்லை.

சுருங்கச் சொல்வதானால் இது, “பொதுசனத் தொடர்பில் நவீன முறைகள் விருத்தியாவதிலிருந்து தோன்றும்” பிரச்சினை. அத்தோடு இன்று இப்பிரச்சினையை வளர்முக நாடுகள் பல எதிர்நோக்கியுள்ளன. ஒரு அரசாங்கம் முதலில் தொலைக் காட்சி நிலையத்தை நிறுவ அவசரப்படுத்தப்படுகிறது. ஆனால், பின்னர்தான் அதற்கு உலோகப் பொருள் மட்டும் போதாது என்றும் ஒவ்வொரு மாலையும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாவதற்கு மென் பொருள்களும் நிதியும் அவசியம் என்றும் அதனால் கண்டுபிடிக்க முடிகிறது. எனவே பின்னர் அது மலிவான தகரத்தில் அடைக்கப்பட்ட நிகழ்ச்சிகளை இறக்குமதி செய்வதில் இறங்கிவிடுகிறது.

அபிவிருத்தி குன்றிய நாடுகளில் பல இறக்குமதி செய்யப்பட்ட மென் பொருள்களான நிகழ்ச்சிகளில் தங்கியிருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பல நாடுகள் அவற்றின் நிகழ்ச்சிகளில் 80 சத வீதத்திற்கு மதிகமான இறக்குமதி செய்யப்படும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றன. நல்ல பொழுது போக்கானவையும், தரமான தயாரிப்புகளானவையுமான இந்த நிகழ்ச்சிகள் கலாசாரப் பெறுமானங்களைப் பொறுத்தமட்டில் விதேசமானவை. அவ்விதேசப் பெறுமானங்களில் கூட அவை மிகச் சிறந்தவையல்ல. மாலைதோறும் மனப்பதிவு சாத்தியமான இளம் பிள்ளைகளால் பார்க்கப்படும் இத்தொலை காட்சி நிகழ்ச்சிகள் அவ்விளம் சமுதாயத்தைச் சுற்றிவர உள்ள யதார்த்த சூழ்நிலைகளோடு எதுவித தொடர்புமற்றவை. அவ்விளம் உள்ளங்களை ஒரு விதேச வாழ்க்கை முறையைத் தரிசிப்பதற்கு உலாக் கொண்டு செல்லும் இந்நிகழ்ச்சிகள் அவர்கள் மத்தியில் ஒரு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்திவிடுவது தவிர்க்க முடியாதது.

அதிகார பீடங்களைப் பொறுத்தமட்டில் தொழில் நுட்பப் பரிமாற்றத்தில் மிகுந்த எச்சரிக்கையும் கவனமும் இருக்க வேண்டும். இது தொடர்பான விடயத்தில் இந்திய அரசு மேற்கொண்ட புத்திசாலித்தனமான நடவடிக்கை தொலைக் காட்சியை நாட்டினுள் புகுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட மெதுவான போக்காகும். இறுதியாக, அது புகுத்தப்பட்ட போது படிப்படியாகவே அதைச் செய்தது. இதைக் கூட அவர்கள் தமக்குத் தேவையான உலோகப் பொருட்களையும் மென் பொருட்களையும் தயாராக வைத்துக் கொண்டே செய்தனர். இந்தியா தற்போது மிகக் குறைந்த அளவிலான நிகழ்ச்சிகளையே இறக்குமதி செய்கிறது. அவ்விறக்குமதி நிகழ்ச்சிகள் கல்வி நிகழ்ச்சிகளுக்கும், விவரணச் சித்திரங்களுக்குமென மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இறக்குமதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் மூலம் விதேசக் கலாசாரங்கள் குவிவதை அபிவிருத்தி குன்றிய நாடுகள் மட்டும் தடை செய்யவில்லை. கனடா கூட தனக்கு அண்மையில் உள்ள பாரிய இராட்சத தொலைக் காட்சி உற்பத்தியாளர்களால் கலாசார, பொருளியல் ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்படுவதையும், இடர்ப்பாட்டுக்குள்ளாக்கப்படுவதையும் ஒட்டி கவலை கொண்டுள்ளது. கடந்த இரு தசாப்தங்களில் கனடாவின் தனித்தன்மையையும், கலாசாரப் பெருமையையும் பாதுகாக்க வேண்டி அதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்தற்கு ஆறுக்கு மேற்பட்ட ஆணைக்குழுக்களையும், செயற் குழுக்களையும் நியமித்திருக்கிறது.

அமெரிக்க தொலைக் காட்சியும், அமெரிக்க வெளியீட்டு ஊடகங்களும் சுதேச தொலைக் காட்சிகளையும், நூல், சஞ்சிகைத் தொழிலையும் சின்னாபின்னப்படுத்திவிட்டது. அதே நேரத்தில் கனடிய செய்தித்தாள்களின் பத்திகளில் கனடிய செய்திகளைவிட அமெரிக்க செய்திகள் முன்னுரிமை பெறுகின்றன. ஒரு வருடத்திற்கு முன் கனடிய சஞ்சிகைகள் பாதிப்புறும்படியாக அமெரிக்க சஞ்சிகைகள் வளர்ச்சியுறுவதை கனடிய அரசாங்கம் கட்டுப்படுத்தியது. அமெரிக்க தொலைக்காட்சி வலைப்பின்னல்களில் கனடிய விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுவதையும் அவ்வரசாங்கம் கட்டுப்படுத்தியது.

அபிவிருத்தி குன்றிய நாடுகளில் உள்ள மக்களின் உள்ளங்களில் செல்வாக்கினை ஏற்படுத்திய அதிக சக்தி வாய்ந்த தொடர்பு சாதன ஊடகம் சினிமாவாகும். இந்தியாவைப் பொறுத்தளவில் உலகிலேயே மிகப் பெரிய தனியார் துறை வர்த்தகப் பேசும் படக் கைத்தொழில் இங்குண்டு. எனவே எமது பேசும்பட இறக்குமதிகள் மிகக் குறைந்தவையே.

தொலைக் காட்சி மூலமும், செய்தி ஊடகத்தின் மூலமும் மேற் கொள்ளப்படும் கலாசார ஆக்கிரமிப்பின் பாதிப்பிற்குள்ளாகிய நாடு லத்தீன் அமெரிக்காவாகும். பிரித்தானியா கூட தனது அந்நிய தொலைக் காட்சி நிகழ்ச்சியின் இறக்குமதியை 40 சதவீதமளவுக்குக் கட்டுப்படுத்தியுள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அவற்றின் தரத்திற்கொவ்வாத மிகக் குறைந்த கலாசாரத்தரம் வாய்ந்த இறக்குமதியாகும் நிகழ்ச்சிகளை அவற்றின் கீழ் மட்டமான நுகர்வுக் குணம்சங்கள் காரணமாக கட்டுப்படுத்தியுள்ளன.

இத்தகைய விவகாரங்களின் கொடிய தாக்கத்தின் உதாரணம் ஒன்று லத்தீன் அமெரிக்காவில் உள்ள வெனிசூலா நகரில் இருந்து அறியக் கூடியதாயிருக்கிறது. அங்கு மாலைக் காலத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகிய 12 சிறுவர்கள் பேட்டி காணப்பட்டபோது ஒரு கதாநாயகன் என்பவன் எப்போதும் ஒரு வெள்ளையன் என்றும் வில்லன் என்பான் எப்போதும் ஒரு கறுப்பனோ, மஞ்சள் நிறத்தவனோ அன்றிப் பொது நிறமானவனாகவோதான் இருப்பான் என்றும் கூறினர். (அசாதாரண மனிதன், டார்ஸான் போன்றவர்களின் சாயல்கள்).

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வழி தென்கிழக்காசியாவில் உள்ளவர்களும் சமுத்திர வழிப் பிராந்தியத்தோடும் தமது நாடுகளிடையே சொந்தமாகத் தயாரிக்கப்பட்ட படங்களையும் கலாசார விவரணச் சித்திரங்களையும் கொண்ட குதமொன்றைக் கட்டியெழுப்புவதாகும். இப்பாரிய பிராந்தியம் கலாசாரம் விரவிய கலை இலக்கியங்களை நிறையக் கொண்டது. குறிப்பாகத் தென்கிழக்காசியாவில் உள்ள சில நாடுகளின் இச்செழிப்பு பேசும்பட உற்பத்தியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

அபிவிருத்தி குன்றிய நாடுகளில் உள்ள மக்களின் சிந்தைகளை ஆட்கொள்ளக் கூடிய அதிக சக்தி வாய்ந்த பொதுசனத் தொடர்பு ஊடகம் பேசும் படமாகும். இந்தியாவைப் பொறுத்தமட்டில் எமக்கு உலகிலேயே மிகப் பெரிய தனியார் துறை வர்த்தகப் பேசும் படக் கைத்தொழில் உண்டு. எனவேதான் பேசும்பட இறக்குமதிகள் இங்கு குறைவாயுள்ளன.

மிக உருசிகரமானதும், பெறுமதிவாய்ந்ததுமான நவீன தொழில் நுட்ப மாற்றமும், பயன்பாடும் மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்தியா ஆரம்பித்த 'சைட்' திட்டமாகும். இத்திட்டத்திற்கமைய இந்தியா கிராமப்புறங்களுக்கான அதன் கல்வித் தொலைக் காட்சி ஒளிபரப்புகளுக்கு செய்மதியை உபயோகித்தது. அமெசிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில் நுட்பப் பிரயோகச் செய்மதி என்றழைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் அமெரிக்க கல்விச் செய்மதியினை ஓராண்டு காலத்திற்கு கடன் முறையில் சேவைக்கமர்த்துவதின் அடிப்படையில் இது பயன்படுத்தப்பட்டது. இப்பரிசோதனையில் 2400 பின்தங்கிய கிராமங்கள் ஆறு மாநிலங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டன. இராஜஸ்தான், பீகார், மத்திய பிரதேஷ், ஒறிஸ்ஸா, ஆந்திர பிரதேஷ், கர்நாடகம் ஆகியவையே இந்த ஆறு மாநிலங்களுமாகும். அமெரிக்க தேசிய விண்வெளியாராய்ச்சி நிறுவனத்தின் (நாஸாவின், இச் செய்தி நாளொன்றுக்கு நான்கு மணித்தியாலம் வீதம் நான்கு மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பாக்கியது. ஆரம்ப பாடசாலைகளுக்கு 1½ மணித்தியாலங்கள் காலையிலும், ½ மணித்தியாலங்கள் மாலையிலுமாகக் கல்வி ஒளிப்பரப்புச் சேவை வழங்கப்பட்டது.

இப் பரிசோதனையின் பேரிலான அனுபவங்கள், தொலைக் காட்சிச் செய்மதியாலும் வானொலியாலும் மட்டும் தொடர்பு கொள்ளக் கூடிய தொடர்பற்ற பிராந்தியங்களில் வாழும் கிராம மக்களின் பொழுது போக்குக்கும் நடைமுறைக் கல்விக்குமான செய்மதியின்பயன்பாடு பற்றிய பல சாத்தியக் கூறுகளை வெளிக்கொணர்ந்தது. 1981ல் எமது சொந்தச் செய்மதியை விண்ணுக்கனுப்பும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் விண்மூலமான தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒளிபரப்பாகி வருகின்றன. சிறப்பாகத் திட்டமிடப்பட்டு தாமாக உற்பத்திசெய்யப்பட்ட தொடர்பு மென் சாதனங்களுடன் உள்நாட்டுச் செய்மதி கல்வியறிவின்மையைப் போக்கவும், கமக்காரருக்கு நவீன கமத்தொழில் அறிவினை ஊட்டுதற்கும் பெரிய அளவில் உபயோகப் படுத்தக் கூடியதாயிருக்கும்.

இன்று பொதுசனத் தொடர்பு சாதனம் நவீன அரசின் இன்றியமையாத ஒரு உறுப்பாகக் கணிக்கப்படுகிறது. இச்சாதனம் சமூகத்தில் இரு முனைப்பாங்கான பங்களிப்பினைச் செய்கின்றது. ஒரு புறத்தில் ஆளப்படுவோர்க்கு ஆட்சியாளர்களின் கொள்கை, நடவடிக்கை ஆகியவற்றைத் தெரிவிக்கிறது. மறுபுறத்தில், ஆட்சியாளர்களுக்கு ஆளப்படுவோரின் குறைகளை எடுத்துக் கூறுகிறது. அதாவது அக் கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஆளப்படுவோர் மத்தியில் உள்ள அபிப்பிராயங்களையும், அவைதொடர்பான ஏற்றுக் கொள்வனவுகளையும் எடுத்துக் கூறுகிறது.

மேலும், பொது சனத் தொடர்பு சாதனம் செய்திப் பரிமாற்றம் நடைபெறும் ஒரு கருவியாகும். அதாவது சமூகங்களின் வெவ்வேறு பிரிவுகளுக்கு இடையிலும், நகர, கிராமத்துறைகளுக்கிடையிலும், கைத்தொழில் தொழிலணிகளுக்கிடையிலும், பெரும்பான்மைக்கும் சிறுபான்மைக்கிடையிலும் கருத்துக்களையும், தகவல்களையும் பரிமாற்றம் செய்வதற்கு ஒரு கருவியாக அமைகிறது.

பொதுசனத் தொடர்பு சாதனம் உண்மையில் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான அவசிய இருவழித் தொடர்பு இணைப்பாகத் திகழ்கிறது. அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளி காரணமாக முன்னையதிற்கு அபாயங்கள் விளைந்ததை அண்மைக்கால உலக வரலாற்றுச் சம்பவங்கள் எடுத்துக் கூறுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் ஜனாதிபதி ஜோன்சனால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு சிறுபான்மை தொடர்பாக அமெரிக்காவின் அதிகரித்த வன்செயல்கள் பற்றி விசாரணைசெய்தது. இவ் விசாரணையில் வீதி வன்செயல்களுக்கு காரணமாயமைந்தவை சிறுபான்மைக்கும் பெரும்பான்மைக்குமிடையில் தொடர் அறுந்த நிலையென்றும், தொலைக் காட்சியில் வன் செயல்கள் காண்பிக்கப்பட்டமையென்றும் தெரிய வந்தது. எனவே இவ் வாணைக் குழு சிறுபான்மையினருக்கு தொடர்பு வசதி அளிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டது.

ஒரு அபிவிருத்தியடைந்துவரும் நாட்டில் அரசின் நாட்டு விருத்திக் கைங்கரியத்திற்கு தொடர்பு சாதனத்தின் மேதிகமான பங்களிப்பும் தேவை. இம் மேலதிக பங்களிப்பு அரசியல் உறுதிப்பாட்டையும், தேசிய கௌரவத்தையும் ஊக்குவித்தல், வறுமையையும், கல்வியறிவின்மையையும் இல்லாதொழித்தல், சமூக மாற்றங்களையும் சமூக பொருளாதார முன்னேற்றத்தையும் வலுப்படுத்த இடை நின்று சேவையாற்றல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

எனவே, பொதுசனத் தொடர்பு சாதனம் நவீன அரசுக்கு அவசியமான ஒன்றெனின் நாட்டில் தொடர்புசாதன உள்ளுருவமைப்பொன்றை அரசு உருவாக்கி ஊக்குவித்தல் அதன் கடமையும் பொறுப்புமாகும். உதாரணமாக, பாரம்பரிய கிராமியக் கலை ஊடகத்தினோடு பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, சினிமா, நூல்கள் போன்ற விசாலமான பொதுசனத் தொடர்பு முறை ஆற்றல் வாய்ந்த தபால் தந்திச் சேவைகள் மூலம் செய்திப் பரிமாற்ற இயங்கு முறை ஒன்றையும் தபால் தந்திச் சேவை வலைப்பின்னல் ஒன்றையும் இவ்வுள்ளுருவமைப்பு தழுவியிருக்க வேண்டும்.

இவ்வழியில் அரசுக்கும் மக்களுக்குமிடையில் பரஸ்பரம் தகவல் பரிமாறி இரண்டுக்குமிடையில் ஒரு தொடர்பு இணைப்பினை ஏற்படுத்தி அடிப்படைப் பங்கினை ஆற்றுவது செய்தி முகவர் நிலையமே. எனவேதான் ஒவ்வொரு நாட்டிலும் தேசிய செய்தி முகவர் நிலையம் அமைப்பதில் பிரதான முன்னுரிமை வழங்கப்படுவதுடன் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மத்தியில் செய்திப் பரிமாற்றத்திற்கு சொந்தமான முறையொன்றை ஏற்பாடு செய்து ஊக்குவிப்பதில் ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம் முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஏனைய நாடுகள் பற்றிய தமது செய்திகளுக்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் செய்தி ஊடகங்கள் தங்கியிருக்கும் பன்னாட்டு ஏகபோகச் செய்தி முகவர் நிலையங்களினால் உற்பத்தியாக்கப்படும் தற்போதைய சர்வதேச செய்திப் பிரவாக மாதிரிகளின் குறைபாடுகளை நிரப்ப வடிவமைக்கப்பட்ட நிறுவனம்தான் அணிசேரா நாடுகளின் செய்திக் குதமாகும்.

ஆசிய பிராந்திய நாடுகள் மத்தியில் செய்திப் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்கான பிராந்திய ஏற்பாடுதான் ஆசிய செய்திப் பரிமாற்ற வலைப்பின்னல். யுனெஸ்கோ ஆதரவில் இவ்வலைப் பின்னல் இதே இடத்தில் நிறுவப்பட உள்ளது. இதே மாதிரியான முயற்சிகள் லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, அரபு நாடுகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்தியேக மூன்றும் அகில முகவர் நிலையமான நாட்டிடைப் பத்திரிகைச் சேவை ஒரு தொகுதிப் பத்திரிகையாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவு முயற்சியாகும். இந்நிறுவனம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து செய்திகளைப் பரப்புவதிலும் கருத்துச் செலுத்தும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளால் ஏற்பாடு செய்யப்படும் அணி சேரா நாடுகளின் செய்திக் குதமும் அதே போன்ற வேறு நிறுவனங்களுக்கும் இரு பிரதான முட்டுக்கட்டைகளின் தொல்லையுண்டு. சொந்தமாக ஆற்றல் பூர்வமான செய்திச் சேவையை நிறுவவேண்டும் என்ற அவர்கள் ஆவல் நிறைவேற வேண்டுமாயின் இவ்விரண்டு முட்டுக்கட்டைகளையும் நீக்கி ஆக வேண்டும். அம்முட்டுக்கட்டைகளாவன:

(1) திறமையற்ற அல்லது மிகையாகவே அதிக செலவுள்ள தந்திப் போக்குவரத்துக்கள்.

2. பயிற்சி பெற்ற பத்திரிகையாளர் திறன்களுக்கான பாரிய தட்டுப்பாடு.

எனவே, அணிசேரா நாடுகளின் செய்திக் குத இணைப்புக்குழு இவ்விரண்டு தடைகளையும் அகற்றுதற்கு அதியுயர்ந்த முக்கியத்துவம் அளித்துள்ளது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பரிவர்த்தனை வீதங்களைக் குறைப்பதற்கு மிகத் தீவிரமான பிரசாரமொன்றை மேற்கொள்ளும் விடயத்தில் கருத்துச் செலுத்தப்படுகிறது. ஏற்கனவே பூமிச் செய்மதி நிலையங்கள் உள்ள நாடுகளின் பங்காளர்கள் செய்மதி மூலம் செய்திப் பரிவர்த்தனைக்கு மாறி பத்திரிகைச் சலுகை வீதங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இந்தியாவும் இலங்கையும் ஏற்கனவே செய்மதி வழி பி.பி.எஸ். சலுகை வீதங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. இவ்வுதாரணத்தை ஏனைய அணி சேரா நாடுகளும் பின்பற்றவேண்டும். இப்போது இருக்கும் நிலையில் அநேகமான அணி சேரா நாடுகளுக்கிடையிலான செய்திப் பரிமாற்றம் வானொலி அலைகள் மூலமாகவே நடைபெறுகிறது. இது மிகவும் தங்கியிருக்க முடியாததும், காலங்கடந்ததும், செலவதிகமானதுமான பரிவர்த்தனையாகும்.

இவ்வழியில் பயிற்சித் திறன் வாய்ந்தவர்கள் குறைபாட்டினைப் பொறுத்தளவில் அதனை ஈடு செய்வதற்கு அணிசேரா நாடுகளின் செய்திக்குதக் குழு இணைப்புக் குழு, அணிசேரா உலகில் உள்ள ஐந்து வெவ்வேறு நிலையங்களில் 9 மாத பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கு அவசர திட்டமொன்றை ஒழுங்கு செய்துள்ளது.

புது டில்லியிலுள்ள இந்திய பொதுசனத் தொடர்பு நிறுவனம் 1978 டிசம்பர் 15ல் இத்தகைய பயிற்சி நெறியொன்றை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. இந்நெறியில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற 14 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். இத்தகைய பயிற்சி நெறிகளை செய்தி முகவர் நிலையப் பத்திரிகைக் கலையில் ஆரம்பிக்க ஏற்றுக்கொண்டுள்ள ஏனைய நான்கு நிலையங்கள் பெல்கிரேட், கெய்ரோ, தூனிஸ், ஹவானா ஆகியவையாம். இந்நான்கு நிலையங்களும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், அரபு ஆகிய மொழிகளில் பயிற்சி நெறிகளை மேற்கொள்ளும்.

இது தவிர அணிசேரா நாடுகளின் செய்திக்குத இணைப்புக்குழு, அந்நாடுகள் சொந்தத்தில் தேசிய செய்தி முகவர் நிலையங்களை நிறுவ அவற்றிற்கு யுனெஸ்கோ மூலமும் வேறு வளங்கள் மூலமும் தொழில் நுட்ப நிதியுதவிகளை வழங்கி வருகிறது.

அபிவிருத்தி குன்றிய நாடுகளில் இங்கு வெற்றிடத்தை நிரப்பி தொடர்பு சாதன உள்ளமைப்புருவைக் கட்டி எழுப்ப அரசு முன்வருவது இன்றியமையாதது. சுவீடன், நெதர்லாந்து, பிரான்சு, பெல்ஜியம் ஆகிய அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட பத்திரிகைத் துறைக்கு அரசு மான்யம் வழங்குவது இயல்பாகிவிட்டது. இந்நாடுகளில் இத்தகைய அரச மான்யங்கள் பத்திரிகைச் சுதந்திரத்தை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. எனவே, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அரச மான்யத்தை ஏற்றுக்கொள்வது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்று மேற்கத்தைய விமர்சகர்கள் கூப்பாடு போடுவது ஆச்சரியமானதே. என்னைப் பொறுத்த மட்டில் பத்திரிகைச் சுதந்திரமும் சுயாதீனமும் பாரம்பரியம் கட்டியெழுப்பப்படும் ஒரு படிமுறையே. இப் படிமுறை மெதுவோட்டமான ஒன்றே அன்றி அவசியமாக உத்தியோகபூர்வ மான்யத்தோடு சம்பந்தப்பட்டதல்ல.

எனினும், ஒவ்வொரு நாட்டினதும் பொதுசனத் தொடர்பு அமைப்பு முறை அவ்வந்நாடுகளின் விசேட சொந்தத் தேவைகளினாலும், தேசிய குறிக்கோள்களினாலும் வழிநடத்தப்படுவதே. அதே நேரத்தில் எல்லா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இதே விதமான பொதுப் பொதுசனத் தொடர்புத் தேவைகளும். குறிக்கோள்களும் உண்டு. இதற்கு மேலாக ஒவ்வொரு நாட்டினுக்கும் விசேட பிரச்சினைகளும் தேவைகளும் இருக்கலாம்.

உதாரணமாக, இந்தியா ஒரு உபகண்டம். அதற்கு சமஷ்டி அரசியல் அமைப்பும், பாரிய குடிசனத் தொகையும், வித்தியாசமான கலாசாரங்களும் மொழிகளும், இனங்களும், மதங்களும் உள. அதன் குடிகளில் நாலில் மூன்று பங்கினர் கிராமங்களில் வாழ்கின்றனர். எனவே, இந்தியா தேசிய ஒருங்கிணைப்பு, அரசியல் உறுதிப்பாடு, குடிசனப் பெருக்கம், வறுமை, கல்வியறிவின்மை ஆகியவை தொடர்பான விசேட பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

இந்தியாவின் தேசிய நிர்மாணத் திட்டத்தில் இப்பிரச்சினைகள் சிறப்பான முன்னுரிமை பெறுவது இன்றியமையாதது. எனவே, ஒரு பொதுசனத் தொடர்பு சாதன உள்ளமைப்புரு இப்பிரச்சினைகள் மீதான சாடலை அதன் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். இப்பிரச்சினைகளில் அநேகமானவை ஆசிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குப் பொதுவானவை. ஆனால் அவை அவற்றின் வடிவுருக்களில் வேறுபட்டிருக்கலாம். எனவே, இத் தேசிய குறிக்கோள்கள் சுலபமாகப் பிராந்திய குறிக்கோள்களாக மாற்றப்படலாம்.

இந்தியாவின் அநேக கிராமங்களை தினசரிப் பத்திரிகைகள் சென்றடைய முடியாதிருப்பதால் வானொலி இவ்வெற்றிடத்தை நிரப்ப வேண்டும். இந்தியாவின் குடிசனத்தொகையின் 30 சத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்திற்கும் அதிகமான மக்களை வானொலி சென்றடைகிறது. எனினும், நாட்டுப்புறத்திலும் பத்திரிகைகள் நுழையத்தக்க வழிவகைகளை எடுத்து கிராமிய மக்கள் சமூக பொருளாதார குடியியல் விடயங்களில் போதனை பெறுமுகமாக கிராமிய சஞ்சிகைகள், வாராந்தரிகள், மாசிகைகள் பிரசுரம் பெறுவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு நாட்டுப் பொதுசனத் தொடர்பு அமைப்பும் அவற்றின் சொந்தமான விசேட தேவைகளாலும் தேசிய குறிக்கோள்களாலும் வழிப்படுத்தப்பட வேண்டும். அதேபோது சற்று விசாலமாகக் கூறின் சகல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் ஒரே மாதிரியான பொதுப் பொதுசனத் தொடர்புத் தேவைகளும் குறிக்கோள்களும் உள. அத்தோடு ஒவ்வொரு நாட்டுக்கும் விசேட பிரச்சினைகளும் தேவைகளும் உள.

நாளாந்த தினசரிகளைப் போலல்லாது வாசகரது வாசிப்புப் பெறுமானம் குன்றாமல் பருவ சஞ்சிகைகள் கிராமிய மக்களின் ஓய்வின்போது அவர்களைச் சென்றடையலாம். இதைச் செயல்படுத்த நாட்டில் பத்திரிகையாளர் பயிற்சிக் கல்லூரிகள் கிராமப் புறப் பத்திரிகைக் கலையில் விசேட பயிற்சி நெறிகளை உருவாக்க வேண்டும்.

கிராமத்தில் நிலவும் கல்வியறிவின்மைக் குறைபாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மலிவான கடதாசி அட்டைப் புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டு கிராமங்களுக்குக் கிடைக்கத்தக்கதாகச் செய்ய வேண்டும். இப்புத்தகங்களை தபால் கந்தோர்களிலும், பெட்ரோல் குதங்களிலும் வேறு பிரபலமான இடங்களிலும் விற்பனைக்கு வைத்தால் அவை சுலபமாக அவர்களைச் சென்றடையும்.

19ம் நூற்றாண்டின் 'பிரசுரித்து விட்டுப் புறத்தே போங்கள்' என்ற கொள்கையிலிருந்து தற்போதைய "சுதந்திரமும் பொறுப்புணர்ச்சியும் வாய்ந்த பத்திரிகைகளை" என்ற தத்துவம் வரை நாம் நீண்ட நெடுந்தூரம் சென்றுவிட்டோம்.

பொது மக்களிடமிருந்தும் அரசிடமிருந்துமல்லாமல் குறிப்பிடத்தக்களவு பத்திரிகையாளரிடமிருந்தும் பத்திரிகைத் துறையினால் அதன் பத்திரிகைச் சுதந்திரம் என்ற பேரில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கெதிராக எழுந்த எதிர்ப்பு பத்திரிகைகளுக்குப் பொறுப்புணர்ச்சி வேண்டுமென்று கோரும் பொதுமக்கள் உணர்வைக் கிளப்பியது. இப் பொதுமக்கள் கோரிக்கையிலிருந்து எழுந்ததுதான் சமூக உணர்வும் சுதந்திரமும் பொறுப்புணர்வும் பத்திரிகைகளுக்கிருக்க வேண்டுமென்ற புதிய கோட்பாடு. பத்திரிகைத் துறை தனக்குத்தானே சட்டமாக இல்லாது சமூகத்திற்கு அது பதிலிறுக்கவேண்டும் என்ற கோட்பாடாகவும் அது இருந்தது. சகல வழிகளிலும் பத்திரிகைத் துறை சுதந்திரமாக இருப்பதுடன் பொறுப்புவாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். இப்பொறுப்புணர்வு அரசைச் சம்பந்தப்படுத்தியதாயிருக்காது இது சேவிக்கும் சமூகத்திற்குப் பொறுப்புணர்வாய் அமையவேண்டும்.

இப் பொறுப்பு தன்முனைப்பானதும், சுயத்திணிப்பானதுமாயிருக்க வேண்டும். எனவே, தான் அது பொறுப்பு வாய்ந்த பத்திரிகைச் சேவையென அழைக்கப்படுகிறது. ஒரு மனிதனின் அந்தரங்கத்திற்கான உரிமையை மதிப்பது பத்திரிகைகளின் சமூகப் பொறுப்புணர்வின் ஒரு அங்கமாகும். அதே போன்றதே இராணுவ பாதுகாப்பைப் பேணல், உள்நாட்டு அமைதிச் சீர்குலைவைத் தவிர்த்தல், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல் நாட்டில் இன அமைதியை ஏற்படுத்தல் போன்ற கைங்கரியமும்.

அரசியல் உறுதிப்பாட்டிற்கும் இன்னும் போராடிக்கொண்டிருக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில் அதன் பத்திரிகைகள் அரசியல் விருத்தியும், உறுதியான சமுதாயங்களும் உள்ள மேற்கைப் போன்று எதிர்ப்போக்கு நடவடிக்கைகளை எந்திரப்பாங்காக மேற்கொள்ளக் கூடாது என்பது உணரப்பட வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில் பத்திரிகைகள் ஒரு பாதுகாவலன் பணியை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கம் தவறு செய்ய நேர்ந்தால் அதனைக் கண்டிக்கத் தயங்கக் கூடாது. அதே நேரத்தில் அரசாங்கத்தின் தேசிய நிர்மாணப் பணிக்கு கைகொடுத்துதவ வேண்டும்.

என் எண்ணப்படி, பொதுசனத் தொடர்பு சாதனத்தினதும் அரசினதும் நன்மைக்காக, அரசு பத்திரிகையாளருக்கான உரிமைகளும் பொறுப்புகளும் பற்றிய தெளிவான வரைவிலக்கணத்தை நிறுவுவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக அந்நாட்டின் சட்டவரம்புகளுக்குட்பட்ட அந்நிய தேச நிருபர்களைப் பொறுத்தமட்டில் இது அவசியமானது. இத்தகைய உரிமைகளும் பொறுப்புகளும், உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எடுத்துரைக்கும் சுதந்திரம், தகவல் வளங்களுக்குச் செல்லக்கூடிய சுதந்திரம், நாட்டில் நடமாடும் சுதந்திரம் போன்ற பத்திரிகையாளரின் அடிப்படை உரிமைகளை உள்ளடக்க வேண்டும்.

ஒரு வெகுசனத் தொடர்பாளரின் உரிமைக்கு வெளியேயுள்ளவை நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான கருதுகோள்கள், பாதுகாப்பு முக்கியத்துவமான மர்மப் பிராந்தியங்கட்குள் பிரவேசிப்பதில் கட்டுப்பாடு, சேவிக்கும் நாட்டில் துவேஷம் கொண்டிருக்கும் நிருபரை அந்த நாட்டிற்கெதிரான பிரசாரத்தில் ஈடுபட அனுமதியாமை போன்றவையாகும்.

இத்தகைய சட்டங்கள், மனித உரிமைச் சாசனத்தையும் வெகுசனத் தொடர்புப் பிரகடனத்தையும் நடைமுறைப்படுத்தும்படியும் தனிமனித பாதுகாப்பையும் உயிர்ப் பாதுகாப்பையும் ஐக்கிய நாடுகள் சபையின் சகல அங்கத்துவ நாடுகளதும் பங்களிப்பின் மூலம் ஒரு விசேட சர்வதேச மாநாட்டுப் பிரேரணையின் வாயிலாக நிருபர்களுக்களிக்கக் கூடியதாக தேசிய அரசுகள் மீது கடப்பாடொன்றை விதிக்க வேண்டும்.

ஒரு நிருபர் குறுக்கீடுகளின்றி நடமாட முடியாமலும், சுயாதீனமாகத் தகவல் வளங்களை அடைய முடியாமலும் ஒரு நாட்டில் இருப்பின் அந்நாட்டின் உண்மையான சொரூபத்தையோ பாகுபாடற்ற செய்திப் பிரசுரத்தையோ நிருபர்களும் பத்திரிகைகளும் வெளிக்



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவது சிரமம் என்பதை அவ்வந்நாட்டு அரசுகள் உணரவேண்டும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நிருபர்கள் தமக்கு அளிக்கப்படும் தொழில் சார் கடமைகளைத் தொடங்குதற்கான உத்தரவாத பெருமைக்குக் கைம்மாருக அவர்கள் சமூகப் பொறுப்புள்ளவர்களாகத் திகழவேண்டும். வெளிநாட்டு நிருபர்கள் சர்வதேச சமூகத்திற்கு பதில் சொல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இத்தகைய அணுகுமுறைக்கு அமைவாக வெகுசனத் தொடர்பாளர்கள் தமக்கென ஒரு நனடத்தைக் கோவையையோ அல்லது சுவீடனில் உள்ள முறைகேள் அதிகாரி முறையினதோ அல்லது பொதுசனத் தொடர்பு சாதனத்தின் சாதனையைக் கண்காணிப்பதற்கான சர்வதேச பத்திரிகைச் சபையினதோ பாணியை ஒத்த சர்வதேச அரங்க நடுநிலைப் பாதுகாவலன் பணியகத்தையோ உருவாக்கி ஏற்றுக்கொள்வது அவசியம்.

தனி மனிதரது அந்தரங்க உரிமையைப் போன்றதே தேசங்களது அந்தரங்க உரிமையும். ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாடு தனது மக்கள் சிலர்பால் காணப்படும் வறுமையையும் குறைபாடுகளையும் மேற்கத்தைய செல்வந்த ரசிகர்களுக்குத் தொலைக் காட்சிப் பொருளாகக் காட்டுவதை விரும்பாது. அதே நேரத்தில் ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாடு தன்னைப் பற்றிய சொரூபத்தைப் பாகுபாடாகவும், துவேஷிப்பாகவும் ஏனைய நாடுகளுக்கு காட்டுவதையும் விரும்பாது.

செய்மதிகளும், கணனிகளும் விரவிய இவ்வுலகில் நாடுகளதும் தனிமனிதர்களதும் அந்தரங்கம் உண்மையில் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. மேற்கின் முன்னேறிய நாடுகளான சுவீடன், சுவிற்சர்லாந்து ஐரோப்பிய பொதுவமைப்பு அங்கத்துவ நாடுகள் போன்றவைகூட நாடுவிட்டு நாடு இடம் பெறும் கணனித்தகவல் தாவுப் பரிமாற்றத்திற்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் தொடர்பு சாதனத்திற்கு மேலாக நிலவும் நாட்டு அந்தரங்க உரிமையும், இறைமையும் இப்போது அபிவிருத்தியடைந்த நாடுகளின் கடப்பாடாகிவிட்டது. புதிய மின்னியல் எதார்த்தம் ஒரு நாட்டின் வெகுசனத் தொடர்பினைவிட அல்லது காற்று வெளியைவிட நாட்டின் இறைமையே மேலானது என்று வாதாடும் நிலைக்குக் கேள்விகளை எழுப்பியுள்ளது. மத்திய ரேகைப் பிராந்தியத்தின் இரு நாடுகளான வெனிசுலாவும், கொலம்பியாவும் ஏற்கனவே இந்த விடயத்தைக் கிளப்பியுள்ளன.

அமரர் ஜவகர்லால் நேரு அடிக்கடி சொல்வார். "சம்பவங்கள் முன்னேறிச் செல்கையில் மனித மனங்கள் அச்சம்பவங்களை அடியொற்றிச் செல்வதற்கு பின்னின்று செல்கின்றன" என்று இன்று உலகம் எதிர்பாராதளவுக்கு முன்னேறி வருகின்றது. பெருமையாகப் பேசிக்கொள்ளப்படும் கைத்தொழில் சமுதாயத்தை எம்மால் அடைய முடியவில்லை. அக்கைத்தொழில் சமுதாயத்தை அடுத்த பெரும் பேறெனக் கருதப்படும் தகவல் சமுதாய நாகரிகம் எம்மை கெடுக்கிறது. இப் படிமுறையில் பத்திரிகைச் சுதந்திரம் என்ற கோட்பாட்டின் ஆணி வேரே ஆட்டம் காணலாம்.

இன்று நாம் ஒருபுறத்தில் அதிகப்படியான தகவல்களாலும், மறுபுறத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கும் இடையிலான விசாலித்து வரும் இடைவெளியினுலும் அச்சுறுத்தப்பட்டு வருகிறோம். மிகவிரைவாக மின்னியல் முறைகளுக்கு வெகுசனத் தொடர்பு சாதனத்தை மாற்றும் மேற்கத்தைய ஏகபோக நிறுவனங்களுக்கு நன்றி செலுத்தக்கவோமாக. ஆனல், இந்தியாவிலும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் இன்றும் தொலையச்சமுத்திகளே இயக்கத்திலிருந்து வருகின்றன. டெலிபிரிண்டர் என அழைக்கப்படும் இந்தத் தொலையச்சமுத்திகள் நிமிடம் ஒன்றுக்கு 60 சொற்களுக்கு மேல் செய்திகளைப் பரிவர்த்தனை செய்ய முடியாது. அதே நேரத்தில் மின்னியல் கணனிகள் நிமிடத்திற்கு 9000 சொற்கள் வரை அடித்துக் குவித்துவிடும். இது இப்படியானுல் பத்திரிகைகள் வானெலி செய்மதி, தகவல் தாவுக் கணனிகள்பற்றிப் பேசவேண்டியதில்லை. எங்களால் ஜீரணிக்க முடியாத தகவல் பிரளயத்தை நோக்கி நாம் செல்கிறோம்.

எனவே வெகுசனத் தொடர்பு துறையில் ஏற்பட்டுவரும் விருத்திகளுக்கிணங்க நாமும் அவற்றை அனுசரித்துச் செல்வது அவசியமாகின்றது. எங்கள் தவறுகளுக்காக நாங்கள் வருந்தாமலும் மற்ற நாடுகள் முன்னேறுக்கிச் செல்லப் பின்தங்கி நில்லாமலும் இருக்க இப்படி நாம் நடந்துகொள்ளவே வேண்டும்.

நாம் வெகுசனத் தொடர்புத் துறை உள்ளுருவமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் ஆராய்ச்சிக்கு முன்னிடம் அளிக்கவேண்டும். அதன் மூலம் சகல கேள்விகளுக்கும் எங்களுக்குப் பதில் தெரிந்திருக்க வேண்டும். அதன் மூலம் மின்னியற் புரட்சியின் சகல பயன்களதும் பங்கு எமக்குக் கிடைக்கவேண்டுமென்று நாம் தட்டிக் கேட்டுப் பெறவேண்டும்.

காலஞ்சென்ற அடலாய் ஸ்டீவென்சன் ஒருகால் தன் முன்னிருந்த சபையோரை நோக்கி "நீங்கள் விரும்பினும் சரி விரும்பாவிடினும் சரி உலகம் நகர்ந்து கொண்டே செல்லும். 'நிறுத்து! நான் இறங்கவேண்டும்' என்று உரத்துச் சப்தித்தாலும் உலகம் நில்லாது. உங்களால் அதைவிட்டு இறங்கவும் முடியாது!" என்ருர்.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

இது பல்வேறு நாடுகளுக்கிடையிலான செய்திப் பிரவாகத்தை சமன்படுத்த வேண்டும். நிச்சயமாக இதன் அர்த்தம் என்னவெனில் விரைவானதும் பொருளடக்கமானதும் பாகுபாடற்றதுமான செய்திப்படுத்தலின் தேவைகளையும் பொருளாதார, நுண் தொழில், தொழில் நிலைக் கோரிக்கைகளையும் திருப்தி செய்யக் கூடிய நிலையில் சகல நாடுகளும் இருக்க வேண்டும் என்பதே. இந்த இடத்தில் கைத்தொழில்மய நாடுகள் ஒரு நிர்ணய பூர்வமான பங்களிப்பினைச் செய்யலாம். அதாவது இத்தகைய புதிய பயில்திறன்களைத் துறை போகத் தெரிந்துகொள்ள அவை உதவலாம்.

நன்றி: மீடியா ஏசியா.

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

தெ. பெ. செல்லமுத்து பிள்ளை



மக்கள் வங்கி வெளியீடு

விலை ரூ. 2/25

பொருளியல் நோக்கில் சுரசுரிக்கப்படுபவற்றைப் பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org